Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை මන්නා

பொழிவு - 12
குவிப்பு - 08
பக்கங்கள்- 20
விலை ரூபா 40.00
ஓகஸ்ட் - 2009
(ISSN 1800-2641)


"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/131/News/2009

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Pozhivaham, Manna Paper Office, No. 31/2, Hospital Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2251161/ 060-2233276, Fax No - 023-2251161, E. Mail : nesanmnr@gmail.com

உண்மையையும் அன்பையும் உறுதிப்படுத்தும் சமூகக்கோட்பாடுகளைக் கொண்ட

## 'உண்மையில் அன்பு'

### திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்களின் புதிய திருமுகம்



திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் புதிய திருமுகம் ஒன்றை வெளியிட்டுள்ளார். கடந்த யூன் மாதம் 29ம் திகதி புனிதர்கள் பேதுரு பவுல் திருநாளன்று வத்திக்கானில் வெளியிடப்பட்ட 'உண்மையில் அன்பு' (Caritas in Veritate) என்ற இத்திருமுகம் திருத்தந்தை அவர்கள் தனது பணிவாழ்வில் எழுதி வெளியிட்டுள்ள மூன்றாவது திருமுகம் ஆகும். ஏற்கனவே திருத்தந்தை அவர்கள் 'அன்பே இறைவன்' (Deus Caritas Est) "கிறிஸ்தவ நம்பிக்கை" (Spe Salvi) ஆகிய தலைப்புக்களில் இரண்டு திருமுகங்களை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## மடு ஆவணித் திருவிழா



இவ்வாண்டு மடு ஆவணித் திருவிழாவிற்கான ஆயத்தங்கள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்விழா தொடர்பாக மடுப் பரிபாலகர் அருட்பணி. டெஸ்மன் குலாஸ் அடிகளார் விடுத்துள்ள விரிவான ஊடக அறிக்கையை 3ம்பக்கத்தில் காணலாம்.

## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா திருத்தந்தையைச் சந்தித்தார்



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வத்திக்கான் நகரில் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்களைச் சந்தித்தார். இச்சந்திப்பில் இருவரும் ஒவ்வொரு நாட்டின் எதிர்காலத்திற்கும் சவாலாக உள்ள பாதுகாப்பு, மக்களின் வாழ்க்கைத் தரம் ஆகியவை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்துப் பேசினர். அப்போது அமெரிக்காவின் கருக்கலைப்பு எண்ணிக்கையைக் குறைப்பதற்குத் தான் தனிப்பட்ட முறையில் முயற்சி எடுக்கவுள்ளதாக ஒபாமா திருத்தந்தையிடம் உறுதியளித்தார்.

## சிறந்த இளம் செய்தியாளருக்கான விருது



2009ம் ஆண்டிற்கான சிறந்த இளம் செய்தியாளருக்கான விருதினை மன்னார் மாவட்ட ஊடகவியலாளர் திரு. எஸ். ஆர். லெம்பேட் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

ஐக்கிய இராட்சியத்தை தலைமையகமாகவும், கனேடிய ஒலிபரப்புச் சேவையினை வலையமைப்பாகவும் கொண்டு இலங்கையிலிருந்து ஒலிபரப்பாகும் சர்வதேச இலங்கைத் தமிழோசை வானொலியின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவும், தேசிய கலைஞர் கௌரவிப்பு விழாவும், சிறந்த ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் கடந்த 26.07.2009 அன்று வெள்ளவத்தையில் உள்ள கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது இவர் மேல் மாகாண ஆளுனர் கௌரவ அலவி மௌலானாவிடம் இருந்து மேற்படி விருதினைப் பெற்றுக்கொண்டார்.

மன்னார் மண்ணுக்கு பெருமை சேர்த்த திரு. எஸ். ஆர். லெம்பேட் அவர்களுக்கு மன்னாவின் நல்வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

## குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழாக் காணும்
## மன்னார் மறைமாவட்ட அருட்பணியாளர்கள்



அருட்பணி. லடிஸ்லோஸ்



அருட்பணி. நவரெட்ணம்



அருட்பணி. தேவசகாயம்பிள்ளை



அருட்பணி. பிரான்சிஸ்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர்கள் எம். லடிஸ்லோஸ் (கங்காணிதீவு - நானாட்டான் பங்கு), ரி. நவரெட்ணம் (சிறுக்கண்டல் - முருங்கன் பங்கு), ஜே. தேவசகாயம்பிள்ளை (சூரியகட்டைக்காடு - நானாட்டான் பங்கு) பி. ஞானசேகரம் பிரான்சிஸ் (நறுவிலிக்குளம் - வஞ்சியன்குளம் பங்கு) ஆகியோர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 22ம் திகதி தமது குருத்துவ வாழ்வில் 25 ஆண்டுகளை நிறைவுசெய்து வெள்ளிவிழாக் காண்கின்றார்கள்.

1984ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 22ம் திகதி அன்றைய மன்னார் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இவர்கள் குருக்களாக திருநிலைப்படுத்தப் பட்டனர்.

வெள்ளிவிழா நாயகர்களுக்கு மன்னார் மறைமாவட்டத்தின் சார்பில் மன்னா நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் பெருமகிழ்வோடு தெரிவித்து நிற்கின்றது.

# மன்னா
## மனப்பொழிவு



# வாசகர் எண்ணங்கள்

## சவால்களைச் சந்திக்கும் குருத்துவம்

கடந்த யூன் மாதம் 19ம் நாள் அன்று திருத்தந்தை குருக்களின் ஆண்டை ஆரம்பித்து வைத்துள்ளார். குருத்துவ அழைப்பு, வாழ்வு, பணி போன்றவை இன்று கேள்விக்கு உள்ளாக்கப்படுகின்ற ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து வருகின்றோம். குருத்துவம் இன்று ஒரு நெருக்கடி நிலையை (Period of Crisis) சந்தித்துக்கொண்டிருக்கின்றது எனப் பொதுவாகக் கருதப்படுகின்றது. இன்று குருக்களின் வாழ்வையும் பணியையும் பொறுத்த மட்டில் இறைமக்களின் அக்கறையும், கரிசனையும் ஏன் விமர்சனங்களும்கூட அதிகரித்து வருகின்றன.

### மீள்வாசிப்புத் தேவை

ஆகவேதான் இன்று குருத்துவ அழைப்பு, பணி, வாழ்வு பற்றிய மீள் வாசிப்பு தேவை என்று விதந்துரைக்கப்படுகின்றது. ‘குருக்கள்’ என்று அழைக்கப்பட்டு வந்தவர்கள் இன்று ‘அருட்பணியாளர்கள்’ என்று அழைக்கப்படுகின்றார்கள். ‘குருத்துவம்’ என்ற சொல் இன்று ‘அருட்பணி நிலை’ என்று அடையாளம் காணப்படுகின்றது. குருத்துவம் என்பது இன்று பதவியை அல்ல பணியை மையப்படுத்திய பார்வையாகக் கொள்ளப்படுகின்றது. குருத்துவப் பணி என்றால் என்ன? என்பதல்ல கேள்வி. மாறாக ஆற்றுப்படவேண்டிய பணி யாருக்கு? என்னும் கேள்வியே எத்தகைய பணி? என்பதைத் தீர்மானிப்பதாக உள்ளது.

இயேசு தன்னுடைய பணியின் தொடக்கத்திலேயே தான் ஆற்றவேண்டிய பணி யாருக்கு என்பதைச் சரியாக அடையாளம் கண்டுகொண்டிருந்தார். இயேசுவின் ‘கொள்கை முழக்கம்’ என்று சொல்லப்படுகின்ற எசாயா இறைவாக்கினரின் ஏட்டுச் சுருளில் அவர் செபக்கூடத்தில் வாசித்த அந்த இறைவார்த்தைப் பகுதியில் ( லூக். 4:18 - 20) தன்னுடைய பணி யாருக்கு என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். இயேசுவின் இந்த இறையாட்சிக் கனவுகளைச் சுமந்துகொண்டு வாழ்வதும் உழைப்பதும்தான் குருத்துவம்.

### அழைப்பு ஆண்டவரிடமிருந்தே!

எசாயா 43:1ல் “உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன். நீ எனக்கு உரியவன்.” எனவும், எபிரேயர் 5:4ல் “யாரும் இம்மதிப்பிற்குரிய பணியை (குருத்துவத்தை) தாமே தேர்ந்துகொள்வதில்லை. ஆரோனுக்கு வந்ததுபோன்று கடவுளிடமிருந்து அழைப்பு வரவேண்டும்.” எனவும் கூறப்பட்டுள்ளது.

தகுதியைக் கண்டு பொறுப்பினைக் கொடுப்பது மனிதர்களின் செயல்முறை! பொறுப்பினை வழங்கி தகுதியை உருவாக்குவது இறைவனின் பாணி! பயனற்றவர்கள் எனப் புறக்கணிக்கப்பட்டவர்கள் பார்புகழும் பெருமை பெற்றது ஆண்டவரின் அருட்செயலினால்தான். சாதாரண மனிதர்கள் அசாதாரண மனிதர்களாக மாறி வரலாறு படைக்கும் வல்லமை பெற்றது கடவுளின் கரத்தினால்தான்.

சாதாரண மனிதர்களைத் தேர்ந்தெடுத்து சாதனையாளர்களாக ஆக்குவது கடவுளுக்கே உரிய கைவந்த கலை! திருவிவிலிய வரலாறும் திருச்சபையின் வரலாறும் நமக்கு இதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்லுகின்றன. ஆடுகளை மேய்த்து வந்த தாவீது நாடுகளை ஆளும் வல்லமை பெற்றது எப்படி? மீன்களைப் பிடித்து வந்த பேதுரு மனிதர்களைப் பிடிக்கும் மாட்சி பெற்றது எப்படி? இருளிலே குடியிருந்த அகுஸ்தீனார் அருளைப் பற்றி அதிகாரத்துடன் பேச முடிந்தது எப்படி? இவற்றைப் பற்றிச் சிந்திக்கும்பொழுது மனிதருடைய வாழ்வில் கடவுளின் கரம் எப்படியெல்லாம் செயலாற்றுகின்றது என நம்மால் உணர முடிகிறது.

### நாங்கள் உங்களுடையவர்கள்!


இறைமக்கள் சமுகத்தில் இருந்து குருக்களாக, துறவிகளாக வந்திருக்கும் நாங்கள் யார்? என்று சிந்திக்கின்றபோது, குருக்கள் துறவிகளாகிய நாங்கள் இறைமக்களாகிய உங்களுடையவர்கள்! எங்களுடைய அழைப்பைக் குறித்து நாங்கள் பெருமை பாராட்ட எதுவும் இல்லை. எமது அழைத்தலுக்கு வித்திட்டவர்கள் நீங்கள். நீர் பாய்ச்சியவர்கள் நீங்கள். அதன் அறுவடையை அனுபவிப்பவர்கள் நீங்கள். நாங்கள் யார் என்றால் உங்களுடைய விசுவாசத்தின் விளைச்சல்கள்! உங்களுடைய செபத்தின் கனிகள்!

ஆகவே இந்தக் குருக்கள் ஆண்டு குருக்களுக்கு உரிய ஆண்டு மட்டும் அல்ல. குருக்களை கருவாக்கி, உருவாக்கி, தமது செபத்தாலும், வழிகாட்டலாலும் வாழவைத்துக் - கொண்டிருக்கும் இறைமக்கள் சமூகம் அனைத்தினதும் ஆண்டு ஆகும்.

குருத்துவ துறவற அழைத்தல்களைப் பெற்ற நாங்கள் வெறும் மட்பாண்டங்கள். எந்த வேளையிலும் உடையக் கூடியவர்கள். எனவே நல்லது செய்யும்போது தட்டிக் கொடுங்கள். அல்லது செய்யும்போது தனிமையில் தட்டிக்கேழுங்கள். ஏனென்றால் நாங்கள் உங்களுடைய - வர்கள், உங்களிடமிருந்து உங்களுக்காக வந்தவர்கள். எங்கள் பலத்திலும் பலவீனத்திலும் எங்களைத் தட்டிக் கொடுங்கள்! தாங்கிக்கொள்ளுங்கள்!

**மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும் வரை**
**அன்புடன், அருட்பணியாளர் தமிழ் நேசன்**
**மன்னா - பதிப்பாசிரியர்**

## திரும்பத் திரும்ப உனை ருசிக்கின்றேன் ...!





என் மன்னா நாயகியே,
புல்லில் விழும் புதுப்பனித்துளி போல்
என் உள்ளத்திரைதனில் விழுந்தவளே!
மெல்லென நீ வந்து முட்டியதால்
என்னுள்ளமோ அழகு பெற்றதடி.

சிற்றிடைபோல் உந்தன் மேனிதனை
வாசிக்க, சுவாசிக்க வைத்தாயடி
என் விரல்கள் உனைத் தீண்டுவதால்
நான் தினமும் புத்துணர்வு பெறுகின்றேன்.

40 ரூபாவிலே கிடைப்பவளே - உன்
இளமையின் வசீகரம் அறிந்துகொண்டேன்
உன் பக்கங்கள்தனைப் புரட்டுவதால்
என் பக்கத்தில் ஏதோ முத்தங்கள்தான்!

பேனா கொண்டு கிறுக்க வைத்தாய்
என்னையும் எழுத்தாளனாய் ஆக்கிவிட்டாய்
ஒரு மாதத் தவணையில் கிடைப்பாயடி
உனை நித்தம் தழுவி நான் துயில்கொள்வேன்.

உலகமே என் வசம் ஆனதிங்கே - நீ
என் அருகே வந்ததனால்
மெய்மறந்த பொழுதுகள் பலதிருக்கு - உன்
பக்கங்களில் இருந்து நான் கற்றவை பல.

வசந்த கீதமாய் வந்தவளே
வாசனையாய்ச் சுகம் தந்தவளே
எழுதத் துடித்த என் ஆத்மா
உன்னை வருடிக்கொண்டே வாழ்கிறது.

‘மன்னா’ எனும் நாமம் கொண்டவளே
பொழுதுகள் எனக்குள் நீ மட்டும்தான்
உன் தொடர்பு எனக்குக் கிடைத்தமையால்
திரும்பத் திரும்ப உன்னை ருசிக்கின்றேன்.

*- ப. தட்சாயினி, சாளம்பன், நானாட்டான்*

## பணிகளைக்கண்டு வியப்படைகின்றோம்!

வன்னிப் பகுதியில் நடைபெற்ற கொடூர யுத்தப் பேரவலத்திற்குள் சிக்கிக் காயமடைந்து மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் காயமடைந்தவர்களான நாம், மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயப் பங்கைச் சேர்ந்த மரியாயின் சேனை அன்பர்களினதும் ஆண்கள் தோழமைக் குழுவினரதும் அளப்பரிய மனித நேயப் பணியைக் கண்ணுற்று வியப்படைகின்றோம்.

இவர்களின் இப்பணியினால் பயன்பெற்றுக்கொண்டிருக்கும் நாம் விரைவில் சுகமடைவோம் என்று நம்புகின்றோம். இவர்களது குடும்பங்களை எல்லாம் வல்ல இறைவன் ஆசீர்வதிக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறோம். இவர்களது பணி தொடர வேண்டுமென வாழ்த்துகிறோம். இவர்களது அளப்பரிய சேவையை மனதாரப் பாராட்டி நிற்கின்றோம்.

*- ப. இளங்கோ, காயமடைந்தோர், வாட் இல. 4, பொது வைத்தியசாலை, மன்னார்*

## உன் வரவுக்காய் காத்திருக்கின்றோம்



மன்னாவே நீ வாழ்க, வளர்க! உன் சேவை உயர்க!
வன்னிவாழ் மக்களின் அவலங்களை வெளிக்கொணரும்
மன்னாவே நீ வளர்க!
உன் விலை அதிகரித்தாலும்
உன் வரவுக்காய்க் காத்திருக்கின்றோம்
உன் சேவை எமக்குத் தேவை.
அறிவையும் ஆக்கத் திறனையும் வளர்க்க
வழிசமைக்கும் உன் சேவை செழிக்கட்டும்
இலை மறை காயாகவுள்ள எம்
திறமைகளை வெளிக்கொணர்ந்தோம்.
ஆலம் விழுதுபோல் விழுதுவிட்டு
செழிக்கட்டும் உன் சேவை
பதிப்பாசிரியர் நேசன் அடிகளின்
பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

*- ஜி. குயின்சி - பொன்தீவுகண்டல், அளவக்கை*


அமதிகளின் ஆன்மீகக் கல்வி மையமான

# ஞானோதயம் நடாத்தும்

**Certifcale Course in Basic English**

ஆரம்பம் : 14 - 09 - 2009
இடம் : ஞானோதயம், தாழ்வுபாடு வீதி, மன்னார்.
காலம் : வார நாட்களில் காலை 9.00 - 10.30 வரை
பங்கேற்பாளர் : க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள். குறிப்பாக 2009 ஆவணியில் பரீட்சைக்குத் தோற்றியோர்.

இக்கற்கை நெறியில் பங்குகொள்ள விரும்பும் மாணவர்கள் தங்கள் பெயர், வதிவிட முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவற்றை 31.08.2009ற்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கிறிஸ்தவ நாகரீகம்**

ஆரம்பம் : 19 - 09 - 2009
இடம் : ஞானோதயம், தாழ்வுபாடு வீதி, மன்னார்.
காலம் : ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9.00 - 12.00
பங்கேற்பாளர் : க.பொ.த. உயர்தர 2011 மாணவர்கள்.

இக்கற்கை நெறியில் பங்குகொள்ள விரும்பும் மாணவர்கள் தங்கள் பெயர், வதிவிட முகவரி, பாடசாலையின் முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவற்றை 10.09.2009ற்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி :
பயிற்சி இயக்குனர், ஞானோதயம்,
தாழ்வுபாடு வீதி, மன்னார்.

தொலைபேசி இல.
023 - 2222969


## கூடார வாழ்க்கையும் குனிந்து நிற்பதும் இன்னும் எத்தனை நாளைக்கு?
### வன்னி மக்களின் கேள்வி





வவுனியா மாவட்டத்தில் உள்ள நிவாரண முகாம்களில் அடைத்துவைக்கப்பட்டுள்ள வன்னி மக்களின் கண்ணீர்க் காவியம் முடிவதெப்போது? கூடார வாழ்க்கையும் குனிந்து நிற்பதும் இன்னும் எத்தனை நாட்களுக்கு!

## திருக்குடும்பக் கன்னியர்களின் முன்னாள் மாகாணத் தலைவி அருட்சகோதரி அன்சில்லா இறைபதம்



திருக்குடும்ப கன்னியர்களின் முன்னாள் மாகாணத் தலைவி அருட்சகோதரி அன்சில்லா ஜேம்ஸ் அவர்கள் இறைபதமடைந்தார். இவர் 2001ம் ஆண்டு தொடக்கம் 6 வருடங்கள் யாழ் மாகாணத் தலை -வியாக பணியாற்றியுள்ளார். இவர் நாரந்தனை ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவருடைய இறுதிக் கிரிகைகள் கொழும்பில் நடைபெற்றன.

இவரின் ஆன்மா இறைவனின் சந்நிதியில் இளைப்பாற இவருக்காக மன்னா அன்பு நெஞ்சங்களின் செபங்களை காணிக்கையாக்குகின்றோம்.

## அன்பில் உண்மை ... 1ம் பக்க தொடர்ச்சி

உண்மையில் அன்பு என்ற தலைப்பில் தற்போது வெளியிடப் பட்டுள்ள இத்திருமுகமானது உண்மையையும் அன்பையும் உறுதிப்படுத்தும் சமூகக்கோட்பாடுகளைக் கொண்டதாகும். கிறிஸ்து என்னும் உண்மையை அன்பிலே வெளிப்படுத்துவதன் வழியாக நாம் எமது தனிப்பட்ட வாழ்வையும் சமூக வாழ்வையும் புதுப்பிக்கமுடியும் என்பதை இத்திருமுகம் எடுத்தியம்புகிறது என்று இதனை வெளியிட்டுவைத்த திருத்தந்தை அவர்கள் தனது அறிமுக உரையின்போது தெரிவித்தார்.

தாம் பெரும்பான்மை இனத்தையோ மதத்தையோ சாராதவர் என்பதனால்

# தாம் கைநெகிழப்பட்டவர், மறக்கப்பட்டவர் என்று வருங்காலத்தில் இலங்கையர் எவரும் உணரத்தேவையில்லை

## – பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை –



தாம் பெரும்பான்மை இனத்தையோ மதத்தையோ சாராதவர் என்பதனால் தாம் கைநெகிழப்பட்டவர், அலட்சியப்படுத்தப்பட்டவர், மறக்கப்பட்டவர் என்று வருங் - காலத்தில் இலங்கையர் எவரும் உணரத்தேவையில்லை. எனினும் இரு பக்கத்திலும் தீவிரவாதிகள் இருப்பதால் இவ்வாறு கூறுவது இலகுவான காரியமல்ல. இலங்கையில் நடைபெற்ற போர் முடிவுக்கு வந்ததையிட்டு இத்தாலி நாட்டு ஊடகம் ஒன்றுக்குப் பேட்டியளித்தபோதே பேராயர் மல்கம் ரஞ்சித் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபரி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையைப் பற்றிக் கூறிய பேராயர், "இது முக்கியத்துவம் வாய்ந்ததும் பெறுமதிமிக்கதுமான ஒரு கூற்று. இலங்கையில் யாரும் தாம் சிறுபான்மையினர் என உணரக்கூடாது என்ற வார்த்தைகளுடன் அவர் தனது உரையை ஆரம்பித்தார். அரசாங்கத்தின் செயற்பாடுகள் பயனளிக்கும் என்று நாம் நம்புகின்றோம். எனினும் புதியதொரு முயற்சிகளுக்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும்.

காலாதி காலமாகத் தமிழருடன் இணைந்து வாழ்ந்த ஒரு நாட்டில் ஏற்பட்ட இந்த முரண்பாட்டிற்கான காரணத்தைப் பெரும் - பான்மையினரான சிங்களவர் எண்ணிப்பார்க்க வேண்டும். அண்மைக் காலங்களில் ஏற்பட்ட குழப்பங்கள் கொடிய யுத்தமாக உருவெடுத்தது. தமிழர் தமது செயற்பாடாக அனைத்து விதமான பேச்சுவார்த்தைகளையும் தட்டிக்கழித்துவிட்டுப் பிரிவினை கோரிநிற்கும் பிரிவினைவாதத்திற்கான காரணத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இவற்றில் மதங்களின் பங்களிப்பு யாது என்று கேட்டபோது, "பிரச்சினையே மதங்களின் அரசியல்தான். அனைத்துச் சிங்களவர்களும் பௌத்தர்கள். அனைத்துத் தமிழர்களும் இந்துக்கள். இங்கே கிறிஸ்தவர்கள் இரு பிரிவிலும் உள்ளனர். இந்த நாட்டிற்கான ஒரு வளம் இரு பகுதியிலும் உள்ள ஆயர்கள், குருக்கள், துறவியர், இறைமக்கள் ஆகியோரே! மத்தியஸ்தம் வகிப்பதில் முக்கிய பங்காற்ற இவர்கள் எம்மை அனுமதிக்கிறார்கள். எடுத்துக்காட்டாக 1990ம் ஆண்டுகளின் இறுதியிலும் 2000ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் மன்னார் ஆயர் இரா. யோசப்பு ஆண்டகையும், நானும் இரு பகுதியினரதும் உரையாடலின்போது மத்தியஸ்தம் வகித்தோம். எமது இந்த முயற்சி பேச்சுவார்த்தைக்கும் சில வருடங்கள் நீடித்த யுத்த நிறுத்தத்திற்கும் இட்டுச்சென்றது. இது தீவிரவாதிகளின் விமர்சனத்துக்குள்ளானது எனினும் மக்கள் எம்மைப் பாராட்டினார்கள், இன்றுவரை பாராட்டுகிறார்கள்."

இடம்பெயர்ந்த மக்கள் விரைவில் தமது இல்லிடங்களுக்குச் சென்று தமது வாழ்க்கை - யைக் கொண்டுசெல்வதில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பைச் சுட்டிக்காட்டிய பேராயர், அரசாங்கம் சுமுகமான முறையில் தமிழருடன் விட்டுக்கொடுத்து வாழவேண்டும் என்று கூறினார்.

## அமைதியைக் கட்டியெழுப்ப இருமொழிகளையும் கற்பது அவசியம்

எமது நாட்டில் அமைதியையும், இணக்கப் - பாட்டையும் கட்டியெழுப்புவதற்கு நாம் அனைவரும் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளையும் கற்றல் அவசியம் என கண்டி ஆயர் மேதகு வியான்னி பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

கண்டி மறைமாவட்டத்தைச் சேர்ந்த குருக்கள் தமது மக்களுக்குத் தகுந்த முறையில் பணியாற்றுவதற்காக இலங்கை அப்போஸ் - தலரான யோசவ்வாஸ் அடிகளின் மாதிரியைப் பின்பற்றி இருமொழிகளையும் கற்கின்றனர் என்று அவர் மேலும் கூறினார்.

## இலங்கைக்கான வத்திக்கான் தூதுவரின் ஆயர்பட்ட திருப்பொழிவு




இலங்கைக்கான வத்திக்கான் தூதுவராக புதிதாக நியமனம் பெற்ற மேன்மைதங்கிய யோசவ் ஸ்பிற்றெறி வத்திக்கான் செயலகத்தின் செயலரான கர்த்தினால் ரெறாசியோ பெற்றோனே ஆண்டகையால் மே மாதம் 24ம் திகதி மோல்ரா நாட்டில் உள்ள வலேற்றா இணைப்பேராலயத்தில் பேராயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் வத்திக்கான் செயலகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தபோது கடந்த பெப்ரவரி 20ம் திகதி திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்களால் இலங்கைக்கான திருத்தந்தையின் (வத்திக்கான்) தூதுவராக நியமிக்கப்பட்டார்.

## புனித பவுலின் ஆண்டு நிறைவுபெற்றது! குருக்களின் ஆண்டு ஆரம்பித்துள்ளது!

யூன் மாதம் 19ம் நாள் இடம்பெற்ற திருஇருதய ஆண்டவர் பெருவிழா அன்று உரோமாபுரியிலுள்ள புனித பேதிரு பசிலிக்காவில் நடைபெற்ற மாலை ஆராதனை வழிபாட்டுடன் திருத்தந்தை குருக்களின் ஆண்டை ஆரம்பித்து வைத்தார். பின்னர் யூன் 28ம் நாள் புனித பவுல் பசிலிக்காவுக்கு வெளியே நடைபெற்ற மாலை ஆராதனையுடன் திருத்தந்தை புனித பவுலின் ஆண்டை நிறைவுசெய்துவைத்தார்.

## மீள்குடியேற்றம் விரைவுபடுத்தப்பட வேண்டும்

### கறிற்றாஸ் – இலங்கை ('செடெக்') நிறுவன இயக்குனர் கருத்து



நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் தமது இல்லங்களில் மீள்குடியேற்றப்படுவதை அரசாங்கம் விரைவுபடுத்த வேண்டும். யுத்தம் நிலவிய காலத்தில் பலர் பத்துத் தடவைகளுக்கு மேல் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் அதிகளவான மனத் தாக்கங்களுக்கு உட்பட்டுள்ளனர். தமது இல்லங்களுக்குத் திரும்பிச் சென்றவுடன் அழிவுற்ற தமது வாழ்விடங்களை அவர்கள் மீளக்கட்டியெழுப்ப அவர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என கறிற்றாஸ் இலங்கை 'செடெக்' நிறுவன இயக்குனரான அருட்பணி டேமியன் பெர்னாண்டோ கூறினார்.

நலன்புரி நிலையங்களுக்குச் சென்று அவற்றின் தற்போதைய நிலைமைகளைப் பார்வையிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார். "ஒவ்வொரு இலங்கையருக்கும் பாதுகாப்புக்கான சம உரிமை கிடைக்காதவரை இங்கு அமைதி நிலவாது என்றும் அவர் கூறினார்.

"இறைவார்த்தையைப் பகிர்ந்து நற்கருணையை வாழ்தல்" என்ற தலைப்பில்

## பிலிப்பைன்ஸ் நாட்டில் 5வது ஆசிய இளையோர் தினம்

*நவம்பர் 20 முதல் 27ம் திகதி வரை நடைபெறும்*

பிலிப்பைன்ஸ் நாட்டில் எதிர்வரும் நவம்பர் 20 முதல் 27ம் திகதி வரை 5வது ஆசிய இளையோர் தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதற்கான தயாரிப்புக்கள் அந்நாட்டின் சிலாங்கில் தொடங்கப்பட்டுள்ளன. "இறை - வார்த்தையைப் பகிர்ந்து நற்கருணையை வாழ்தல்" என்ற தலைப்பில் ஆசிய இளையோர் தினம் சிறப்பிக்கப்படவுள்ள சிலாங் அன்னைமரி பேராலயத்தில் சுமார் ஆயிரம் இளையோர் கூடி இத்தயாரிப்புக்களின் ஆரம்ப நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். ஆசிய ஆயர் பேரவைக் கூட்டமைப்பின் பொதுநிலையினர் மற்றும் குடும்ப ஆணையத்தின் இளையோர் அலுவலகமும், பிலிப்பைன்ஸ் ஆயர் பேரவையின் இளையோர் ஆணையமும் சேர்ந்து ஐந்தாவது ஆசிய இளையோர் தினத்தை நடாத்துகின்றன.

ஆசிய இளையோர் தினம் 1999ல் தாய்லாந்திலும், 2001ல் தாய்வானிலும், 2003ல் இந்தியாவிலும், 2006ல் கொங்கோங்கிலும் நடைபெற்றன.

## மின்னேரியா ஆலய வன்முறையை அனுராதபுர ஆயர் கண்டிக்கிறார்

மின்னேரியாவில் அமைந்துள்ள ஆண்டவர் இயேசுவின் திருச்சுருபத்தை உடைத்துக் - களங்கப்படுத்தியமை தொடர்பாகச் செய்தி வெளியிட்ட அனுராதபுர ஆயர் மேதகு நோபட் அன்றாடி (அமதி) அவர்கள் அனைத்து மக்களினதும் மத உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் அனைவரையும் அன்புசெய்து மதிப்பளிக்க வேண்டுமெனவும் கேட்டுக் - கொண்டார். மின்னேரியாப் பங்கில் அமைந்துள்ள ஆலயத்தின் முன்பாக கடந்த 10 வருடங்களாக இயேசுவின் திருவுருவச் சிலை நிறுவப்பட்டிருந்தது. இச்சுருபமே இனந்தெரியாதவர்களால் உடைக்கப்பட்டுள்ளது. அங்கு வாழும் அனைத்து மத, இன மக்களும் இதனையிட்டு மிகுந்த கவலை கொண்டுள்ளனர். இன, மத பாகுபாடின்றி அனைவரும் இதனைக் கண்டித்துள்ளனர்.

## 2009ஆம் ஆண்டு மடு ஆவணித் திருவிழா பற்றிய மடுப் பரிபாலகரின் ஊடக வெளியீடு



மடுத்திருப்பதியின் இவ்வருட ஆவணித் திருவிழாவானது வழமையான நிகழ்வுகளோடு ஆவணி மாதம் 15ம் திகதி இடம்பெறும். யாத்திரிகர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மடுறோட் ஊடாக தங்கள் வாகனங்களில் உட்செல்ல முடியும். ஆயினும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளில் பயணிக்கும் யாத்திரிகள் மடுறோட் வரை சென்று, பின்பு மடுவிற்கும், மடுறோட்டுக்கும் இடையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விசேட போக்குவரத்து சேவை மூலம் மடுவைச் சென்றடைய முடியும். தனியார் வாகனங்களில் பயணிக்கும் யாத்திரிகர்கள் தங்களுடைய வாகன அனுமதிப் பத்திரங்களோடு அவ்வாகனத்தில் பயணம் செய்வோரின் அடையாள அட்டை இலக்கங்கள் உள்ளடங்கிய மூன்று பெயர் பட்டியல் பிரதிகளை எடுத்துச் செல்ல வேண்டும்.

பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆவணி மாதம் 06ம் திகதியிலிருந்து 11ம் திகதி வரை பயணிக்கும் யாத்திரிகர்கள் இரவில் மடுவில் தங்கமுடியாது. இந்நாட்களில் மடு றோட்டிலிருந்து மடுவிற்குக் காலை 06 மணிக்கு பின் உட்செல்ல முடியும். இவ்வாறு செல்பவர்கள் இரவு 09. மணிக்கு முன் மடுவிலிருந்து திரும்ப வேண்டும். இந்நாட்களில் காலை 11 மணிக்கும், மாலை 04 மணிக்கும் சிறப்புத் திருப்பலிகள் தமிழ், சிங்கள மொழிகளில் இடம்பெறும்.

ஆயினும் 12ம் திகதியிலிருந்து 16ம் திகதி வரை யாத்திரிகர்கள் மடுவில் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். இந்த நாட்களில் வழமைபோன்று 06.30 மணிக்கு மாலை ஆராதனைகள் இடம்பெறும்.

மதவாச்சி சோதனை நிலையத்தின் ஊடாகப் பயணம் செய்யும் யாத்திரிகர்கள், ஆவணி 06ம் திகதி தொடக்கம் 11ம் திகதி வரை இச்சோதனை நிலையத்தைக் காலை 06 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கு இடையிலும் 12ம், 13ம் திகதிகளில் காலை 06 மணிக்கும் பிற்பகல் 04 மணிக்கு இடையிலும், 14ம் திகதி காலை 06 மணிக்கும் பிற்பகல் 06 மணிக்கு இடையிலும், 15ம் திகதி அதிகாலை 03 மணியிலிருந்து பிற்பகல் 04 மணி வரைக்கும் கடக்க முடியும்.

இம்முறை மடுவிற்குள் வரும் யாத்திரிகர்கள் போதுமான அளவு உணவுப் பொருட்கள், விறகு, குடிதண்ணீரையும் தங்களுடன் எடுத்து வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் மதுபானம், ஐஸ்கிறீம், விளையாட்டுப் பொருட்கள் என்பவற்றை மடுவிற்குள் எடுத்து வருதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். ஏற்படக்கூடிய அசௌகரியங்களை நல்மனத்துடன் ஏற்று, திருப்பதியில் தங்கியிருக்கும் நாட்களில் ஆன்மீகக் காரியங்களில் ஈடுபடுமாறு வருகை தரவுள்ள யாத்திரிகர்களை வினயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

மருதமடு அன்னையின் ஆசீர் உங்களோடும் உங்கள் குடும்பத்தினரோடும் இருப்பதாக!

## முன்னாள் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புனிதராக அறிவிக்கப்பட வேண்டும்!

### முன்னாள் ரஷ்ய அதிபர் மிகேல் கோர்பஷேவ் கோரிக்கை



முன்னாள் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புனிதராக அறிவிக்கப்பட வேண்டும் என்பதில் தான் உறுதியாக இருப்பதாக இரஷ்ய முன்னாள் அதிபர் மிகேல் கோர்பஷேவ் தெரிவித்துள்ளார்.

திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பருடன் தான் பலமுறை கலந்துரை - யாடும் வாய்ப்பு கிட்டியதாகவும் அவரின் கருத்துக்கள் அனைத்தும் எப்போதும் சரியாக இருந்ததாகவே தான் கண்டதாகவும் அவர் மிகுந்த மனிதாபிமானம் உள்ளவர் என்பதை உணர்ந்ததாகவும் கோர்பஷேவ் தெரிவித்தார்.

உலகின் புதிய அமைப்பு முறைகள் அனைத்தும் உறுதியானதாய், தொலை நோக்குடையதாய், நீதியானதாய், மனிதாபிமானம் நிறைந்ததாய் இருக்க வேண்டும் என்பதை திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்ததாயும் இரஷ்ய முன்னாள் அதிபர் கூறினார்.

மறைந்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புனிதராக அறிவிக்கப்படுவதற்குத் தன் முழு ஆதரவையும் அளித்து முதல் நபராக இருக்க தான் விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

## மன்னார் மறைமாவட்ட செய்திகள்

### தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளைத் தீர்த்துவைக்கக்கூடிய

# விரைவான அரசியல் தீர்வை ஏற்படுத்த

# புதிய பேராயரின் பங்களிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் புதிய பேராயராக பணிப்பொறுப்பை ஏற்கும் மேதகு மல்கம் றஞ்சித் ஆண்டகைக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில்

**மன்னார் ஆயர்**

போர் முடிந்ததாகக் கூறப்பட்டாலும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினை இன்னும் முடியவில்லை என்பதை ஏற்றுக்கொண்டு போர்ச் சூழ்நிலை ஏற்பட்டதற்கான காரணங்களை இதயசுத்தியோடு புரிந்து ஏற்றுக்கொண்டு தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை தீர்த்துவைக்கக்கூடிய விரைவான அரசியல் தீர்வை ஏற்படுத்த புதிய பேராயரின் மேலான பங்களிப்பு இவ்வேளையில் எதிர்பார்க்கப்படுகின்றது என மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தெரிவித்துள்ளார். அவர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியின் முழு வடிவமும் வருமாறு:



பேராயர் மேதகு மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்கள் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் புதிய பேராயராகப் பணிப்பொறுப்பை ஏற்கும் இவ்வேளையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் என்ற வகையில் என்னுடையதும் மறைமாவட்ட இறைமக்களினதும் நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பேராயர் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்கள் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் உதவி ஆயராகவும் பின்னர் இரத்தினபுரி மறைமாவட்ட ஆயராகவும் பணிபுரிந்த காலங்களில் பல்லாண்டுகள் புரையோடிப்போய் இரத்தக் களரியை ஏற்படுத்திவந்த இலங்கை இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தையின் மூலம் தீர்த்துவைப்பதற்கு பல சவால்நிறைந்த பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தார். இதை முழு நாடும் நன்கு அறியும். தமிழீழ விடுதலைப் புலிகளையும் இலங்கை அரசாங்கத்தையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதற்காக பல கடினமான பயணங்களை மேற்கொண்டு இரண்டு தரப்பினரையும் பல தடவைகளில் சந்தித்துப் பேசினார். சமாதானத்தை ஏற்படுத்த கத்தோலிக்க திருச்சபையிடம் இருந்து இந்த நாடும் உலகமும் எதிர்பார்த்த 'மத்தியஸ்த' பணியை இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் சார்பில் தனது சக்திக்கு உட்பட்ட வகையில் இவர் சிறப்பாகச் செய்தார். இதனால் நடுநிலையாகச் சிந்திக்கின்ற இலங்கை மக்களினதும் குறிப்பாக தமிழர்களினதும் பாராட்டையும் நல் அபிமானத்தையும் பெற்றிருந்தார். (தொடர்ச்சி 19ம் பக்கம்)

## அன்னை வேளாங்கண்ணி ஆலய வெள்ளி விழா

வஞ்சியன் குளம் பங்கின் துணைப் பங்குகளில் ஒன்றான மாதிரிக்கிராமத்தில் உள்ள அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தின் 25வது வருட யூபிலி வெள்ளி விழா கடந்த யூன் மாதம் 1ம் திகதி அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு மன்னார் சிறிய குருமட அதிபர் அருட்பணி. சேவியர் குரூஸ் அடிகளார் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. 28ம் திகதி தொடக்கம் 31ம் திகதி வரை இடம்பெற்ற ஆயத்த நாள் வழிபாடுகளின் போது அருட்பணியாளர்கள் டெனி கலிஸ்ரஸ், டக்ளஸ் லோகு, வின்சன்ற் பற்றிக், றூபன் பறுனாந்து ஆகியோர் மறையுரை ஆற்றி திருப்பலி ஒப்புக்கொடுத்தார்கள். வஞ்சியன்குளம் பங்குத்தந்தை அருட்பணி. ஒல்பன் இராஜசிங்கம் அடிகளார் இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

## பேசாலையில் சிறுவர்களுக்கான கணனி வகுப்புக்கள் ஆரம்ப விழா

கடந்த யூலை மாதம் 7ம் திகதி பேசாலை மன்/ பற்றிமா ம.ம.வி.தில் சிறுவர்களுக்கான தகவல் தொழில்நுட்ப கணனி வகுப்புக்கள் ஆரம்ப வைபவம் இடம்பெற்றது. இதில் மன்னா ஆசிரியர் நேசன் அடிகளார் முதன்மை விருந்தினராகவும், பேசாலைப் பங்குத்தந்தை அகஸ்ரின் அடிகளார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

பாடசாலை அதிபர் சி.எம்.எஸ். பெனாண்டோ மற்றும் பேசாலை ஜோசப்வியின் சர்வதேசம் என்ற அமைப்பின் இயக்குனர் றிச்மன்ட் டயஸ் ஆகியோரின் முயற்சியில் Gate Way எனப்படும் கொழும்பை மையமாகக்கொண்ட அமைப்பின் அனுசரணையில் இந்த செயற்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

## குருக்களுக்கான உளவியல் ஆற்றுப்படுத்தல் கருத்தமர்வு

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள குருக்களுக்கான உளவியல் ஆற்றுப்படுத்தல் கருத்தமர்வு கடந்த யூலை மாதம் 7ம் திகதி தொடக்கம் 9ம் திகதி வரை இடம்பெற்றது. முருங்கன் டொன் பொஸ்கோ இல்லத்தில் பணியாற்றும் சலேசியன் சபைக் குருவான அருட்பணியாளர் போல் அடிகளார் இக் கருத்தமர்வைச் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

'தன்னை அறிதல்' (Self Awareness) என்ற தலைப்பிலான இக்கருத்தமர்வானது நவீன தொடர்பாடல் கருவிகளின் உதவியோடு நடாத்தப்பட்டது.

இதில் பங்கெடுத்த குருக்கள் இக்கருத்தமர்வு தமது தனிப்பட்ட வாழ்வுக்கும் பணி வாழ்வுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தென கருத்துத் தெரிவித்தனர்.

## சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தினால் நாடாத்தப்பட்ட

# 43வது உலக சமூகத் தொடர்பு தினம்

மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தினால் 43வது உலக சமூகத் தொடர்பு தினம் கொண்டாடப்பட்டது. கடந்த யூலை மாதம் 19ம் திகதி மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து உரையாற்றினார். மன்னார், முருங்கன், வங்காலை, தாழ்வுபாடு, பள்ளிமுனை ஆகிய பங்குகளிலிருந்து கலை நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டன. மையத்தின் இயக்குனர் அருட்பணி. பெனோ அவர்கள் இந்நிகழ்வை சிறப்பாக ஒழுங்குசெய்திருந்தார்.

## நானாட்டான் பங்கில் தூய பவுல் அடிகளார் வாசகப்பா

பவுல் அடிகளாரின் யூபிலி ஆண்டையொட்டி நானாட்டான் பங்கு மக்களால் பவுல் அடிகளாரின் வாசகப்பா மேடையேற்றப்பட்டது. கடந்த யூலை மாதம் 17ம் திகதி நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை ஆலய முன்றலில் இடம்பெற்ற இந்நிகழ்வை மேதகு மன்னார் ஆயர் அவர்கள் ஆரம்பித்துவைத்தார். நானாட்டான் பங்குத்தந்தை அருட்பணி. எம். ஏ. ஜெயசீலன் அடிகளாரின் தலைமையில் நானாட்டான் பங்கில் உள்ள அனைத்துத் துணைப்பங்குகளில் உள்ள நடிகர்கள், கலைஞர்களின் ஒத்துழைப்போடு இந்நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

## நோபட் அடிகளாரின் 31ம் நாள் நினைவு நிகழ்வுகள்



அமரர் அருட்பணியாளர் எஸ். நோபட் அடிகளாரின் 31ம் நாள் நினைவு நிகழ்வுகள் கடந்த யூலை மாதம் 21ம் திகதி அவருடைய பிறந்தகமான நானாட்டானில் உள்ள சூரியகட்டைக்காட்டில் இடம்பெற்றது.

அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு சூரியகட்டைக்காடு புனித செபஸ்ரியார் பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து வருகை தந்த அனைவருக்கும் அடிகளாரின் இல்லத்தில் மதிய உணவு வழங்கப்பட்டது. இதில் குருக்கள், துறவிகள் உட்பட அடிகளாரின் உறவினர்கள், நண்பர்கள், முன்னாள் பங்கு மக்கள் என பெருந்தொகையானோர் கலந்துக்கொண்டனர்.

## மன்னார் மறைமாவட்டக் குருக்களின் இடமாற்றம் - யூலை – 2009



அருட்பணி. அசிசி யூட் - உதவிப் பங்குத்தந்தை, வவுனியா
அருட்பணி. செல்வநாதன் பீரிஸ் - உதவிப் பங்குத்தந்தை, பேசாலை
அருட்பணி. ரஜனிகாந்த் - உதவிப் பங்குத்தந்தை, மன்னார்
அருட்பணி. தேவராஜ் (நியூட்டன்) உதவிப் பங்குத்தந்தை, மன்னார்
அருட்பணி. சுகுணராஜ் குரூஸ் - உதவிப் பங்குத்தந்தை, நானாட்டான்
அருட்பணி. றூபன் பெனாண்டோ - உதவிப் பங்குத்தந்தை, செட்டிகுளம்

## மன்னா பத்திரிகை விநியோகஸ்தர்களே!

உங்கள் பங்கில், ஊரில், அன்பியத்தில் மன்னா பத்திரிகையைப் பெறாத குடும்பங்களைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து அவர்களும் மன்னாவைப் பெற வழிசெய்யுங்கள், ஊக்குவியுங்கள்.

மன்னா உங்கள் கைக்குக் கிடைத்ததும் காலம் தாழ்த்தாமல் வழமையாக பத்திரிகையைப் பெறும் வாசகர்கள் மற்றும் குடும்பங்களுக்கு மன்னாவை விரைவாக வழங்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றோம். (மன்னா நிர்வாகம்)

## மன்னார் பேராலயப் பங்கில் விவிலியக் கண்காட்சி

மன்னார் பேராலயப் பங்கைச் சேர்ந்த மறைக்கல்வி ஆசிரியர் மற்றும் மாணவர் -களினால் நற்செய்தி அறிவிப்பு ஆண்டு மற்றும் பவுலடியார் ஆண்டு ஆகியவற்றை முன்னிட்டு நடாத்தப்பட்ட விவிலியக் கண்காட்சி கடந்த யூன் மாதம் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணித் திருப்பலியைத் தொடர்ந்து இடம்பெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் இதைப் பார்வையிட்டு பயனடைந்தனர்.

## நலம்பெறச் செபிப்போம்



மன்னார் திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் இருக்கும் அருட்சகோதரி கனிசியஸ் பிலிப்புப்பிள்ளை (தி. கு) அவர்கள் சுகவீனம் காரணமாக கொழும்பில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

எமது மன்னா பத்திரிகைப் பணியில் திரைமறைவில் இருந்து எமக்கு பல்வேறு உதவிகளைத் தொடர்ந்து செய்துவருகின்றார். அருட்சகோதரி கனிசியஸ் விரைவில் பூரண சுகம் பெற்று தமது வழமையான பணிகளுக்குத் திரும்ப அவருக்காகச் செபிக்கும்படி மன்னா வாசக அன்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## மறையாசிரியர்களுக்கான மூன்று மாத வதிவிடப் பயிற்சி

# சான்றிதழ் வழங்கும் விழா

மன்னார் மறைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்பட்ட மறையாசிரியர்களுக்கான மூன்று மாத வதிவிடப்பயிற்சியை நிறைவுசெய்து வெளியேறிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழா கடந்த யூன் மாதம் 25ம் திகதி மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையின் தலைமையில் திருப்பலியும் 10.30 மணிக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. கடந்த மார்ச் மாதம் 24ம் திகதி இப்பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டது. விவிலியக் கல்வியை ஆழப்படுத்தல், ஆன்மீக வாழ்வில் முதிர்ச்சி, கிறிஸ்தவ நன்நெறி என்ற மூன்று விடயங்களை மையமாகக்கொண்டு இப்பயிற்சி இடம்பெற்றதாக இந்நிகழ்வுக்குப் பொறுப்பான மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்பணியாளர் எம். ஜெயபாலன் அடிகளார் மன்னாவுக்குத் தெரிவித்தார்.

## பயிற்சியை நிறைவுசெய்து சான்றிதழ் பெற்றோர் விபரம்

### மன்னார் மறைமாவட்டம்

1. அ. சலேஜினி டயஸ் - தலைமன்னார்
2. அ. சாளினி - கீளியன்குடியிருப்பு
3. ப. மேர்லின் - தோட்டவெளி
4. அ. வாணி கல்பனா - ஜோசவ்வாஸ் நகர்
5. ஜே. சுதாஜினி - ஜோசவ்வாஸ் நகர்
6. எ. கோமதி மார்க் - வங்காலை
7. ம. பிரமா மிராண்டா - வங்காலை
8. அ. கிறேஸ் சொப்னா - நானாட்டான்
9. அ. மேரி திரேசா - அளவக்கை
10. நீ. நிரோஜினி - அளவக்கை
11. யோ. லோரன்ஸா - முருங்கன்
12. அ. பெனடிற்லெம்பேட் - அரிப்பு
13. சூ. திரும்மறை காகு - அரிப்பு
14. அ. றஞ்சினி - கோமரசன்குளம்
15. வி. நிஷாந்தினி - பம்பைமடு
16. ச. விக்ரர் - பம்பைமடு
17. வோ. அஞ்சலின் - பம்பைமடு
18. ப. திரேசில்டா - பம்பைமடு
19. சி. மினினோல்டா - வவுனியா
20. தி. கலிஸ்ரா - வவுனியா

### பதுளை மறைமாவட்டம்

21. செ. யமுனா நொயலின்- பதுளை
22. லோ பெப்பச்சுவா - பதுளை
23. போ. கிரேஸ் நிரோஷினி - பதுளை
24. அ. நியோமி - ஹப்புத்தளை
25. ச. மெட்டில்டா - ஹப்புத்தளை

### இரத்தினபுரி மறைமாவட்டம்

26. சு. கலைவாணி - தொலஸ்வல
27. ம. அமல்ராணி - தொலஸ்வல
28. சி. துஷிகா ஹர்சினி - தொலஸ்வல

# வாழ்வு தரும் வார்த்தை

# செபியுங்கள்! தெய்வீக அருள் உங்களைச் சூழ்ந்திருக்கும்!

தந்தை வி. இக்னேஷியஸ், சே.ச.

2005ஆம் ஆண்டு யூலை மாதம் 25ம் திகதி மெட்சுகோரியே நகரில் பரிசுத்த கன்னித்தாய் காட்சி தந்து மக்களுக்கெல்லாம் ஒரு அரிய அழைப்பு கொடுத்திருக்கின்றார்கள்.

அந்த அழைப்பின் செய்தி :

*"அன்புக் குழந்தைகளே! இன்றும் உங்களை அழைக்கின்றேன். உங்களுடைய அன்றாட தினத்தை சிறிய சிறிய அன்பு அனல் மூட்டும் செபங்களினால் நிரப்புங்கள்! நீங்கள் செபிக்கும்பொழுது உங்கள் இதயம் திறக்கும்! கடவுள் உங்களை விசேஷ அன்பினால் நேசிக்கிறார். விசேஷ கிருபைகளை உங்களுக்குத் தருகிறார்! எனவே இந்தக் கிருபையின் நேரத்தை நன்றாகப் பயன்படுத்துங்கள்! இதுவரை இல்லாத அளவுக்கு அதை கடவுளுக்கு அர்ப்பணம் செய்யுங்கள்!*

*உபவாசத்துடனும், ஒறுத்தலுடனும் நவநாள் செபம் செய்யுங்கள்! இவ்வாறு சாத்தானை துரத்துவீர்கள்! தெய்வீக அருள் உங்களைச் சூழ்ந்திருக்கும்! நான் உங்களுக்கு அருகாமையில் இருக்கிறேன். உங்கள் ஒவ்வொருவருக்காவும் கடவுளிடம் பரிந்துரைக்கிறேன். என் அழைப்பிற்குச் செவிமடுத்த உங்களுக்கு நன்றி!"*

அன்புக்குரியவர்களே! அன்னை அவர்கள் கொடுத்த செய்தியிலே மிக முக்கியமான வார்த்தையை நாம் கவனிக்க வேண்டும்.

"உங்களுடைய அன்றாட தினத்தை சிறிய சிறிய அன்பு அனல் மூட்டும் செபங்களினால் நிரப்புங்கள்" இதயத்திலே இருந்து எழக்கூடிய செபமாக, அன்பினால் பற்றி எரியும் செபமாக நமது செபம் இருக்க வேண்டும்.

நம்மிலே பலர் செபிக்கின்றபொழுது, கிளிப்பிள்ளைப் பாடமாக யாரோ சொன்ன ஒரு செபத்தையோ, எங்கோ எழுதி வைத்த ஒரு செபத்தையோ, கடமைக்காக எவ்வளவு சீக்கிரமாக சொல்லி முடிக்க வேண்டுமோ அவ்வளவு சீக்கிரமாக சொல்லி முடித்து விடுவோம். கடமை முடிந்துவிட்டது என்று அவசரப்பட்டு செபிப்பார்கள். இப்படிப்பட்ட செபத்திலே ஆழம் இருக்காது.

அன்னை அவர்கள் நம்மைச் செபிகக அழைக்கின்றபொழுது குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வார்த்தையே இதுதான். அதாவது, பற்றி எரியக்கூடிய ஒரு இதயம்! இதயத்திலே அன்பு நெருப்புப் பற்றி எரியும்பொழுது அந்தச் செபம் கடவுளுக்கு மிகவும் பிரியமாய் இருக்கின்றது. அப்படிச் செபிக்கும்பொழுது அந்த செபமே நம் இதயத்தைத் திறந்துவிடுகின்றது! அப்படி நாம் செபிக்கின்றபொழுது கடவுள் நம்மை விசேஷ அன்பினால் நிரப்புகின்றார்! கடவுளுடைய கிருபைகள் நம்மைச் சூழ்ந்திருக்கின்றன!

செபிக்கின்றபொழுது நம்முடைய ஜெபம் மிகுந்த உபவாசத்துடனும் ஒறுத்தலுடனும் இருக்க வேண்டும். உபவாசம் என்று சொன்னால் கடவுளுக்காக நமக்குத் தேவையான உணவுப் பண்டங்களை சாப்பிடாமல், கடவுளுடைய வார்த்தையே எனக்கு உணவு என்று சொல்லி இந்த உலக காரியங்களில் இருந்து விலகி நிற்பதுதான்! கடவுளுடைய வார்த்தையே எனக்கு உணவு என்று இருப்பதுதான் உபவாசத்தின் அர்த்தம்!


ஆகவே கடவுளின் வார்த்தைமேல் ஆழ்ந்த நம்பிக்கையுடன் நாம் செபிக்கும்பொழுது நம்மை அறியாமலேயே இந்த உணவைப் பற்றிய கவலையை நாம் மறந்துவிடுவோம்!

இன்னொரு மனப்பான்மையையும் அன்னை அவர்கள் விரும்புகின்றார்கள். என்னவென்றால், சாப்பிடாமல் இருப்பது எளிது, ஆனால் நம்முடைய உலகார்ந்த காரியங்களில் இருந்து விடுபட்டு அவைகளை நாம் விலக்கிவைப்பது எளிதல்ல! எத்தனை எத்தனையோ காரியங்கள் நல்ல காரியங்களாக இருக்கும். அந்த நல்ல காரியங்களையும்கூட நாம் கடவுளுக்கென்று விட்டுவிட்டு கடவுளையே கண் முன்பாக வைத்து நாம் செபிக்க வேண்டும்.

"கடவுளே உம்மையே என் கண் முன்பாக வைத்திருக்கின்றேன். உம்மைத்தவிர எனக்கு வேறு ஒன்றும் இல்லை" என்கிற ஒரு நிலையிலேயே தங்கி இருந்து ஆண்டவரையே இதயத்தில் தாங்கியவராய் செபிக்க வேண்டும். இப்படி உபவாசத்துடனும் ஒறுத்தல் முயற்சிகளுடனும் நாம் செபிக்கும்பொழுது சத்துருவாகிய சாத்தான் வெகு தூரத்திலே ஓடிப்போவான். ஆண்டவருடைய கிருபையும் அவருடைய அருளும் நம்மைச் சூழ்ந்து நிற்கும்! இப்படிப்பட்ட செபத்தைத்தான் அன்னை அவர்கள் நம்மிடத்திலே விரும்பிக் கேட்டுக்கொள்கிறார்கள்.

## செபத்தின் மேன்மை

இப்படி அன்னை அவர்களின் வேண்டுதலை நாம் தியானிக்கின்றபொழுது நம்முடைய பைபிளிலே இருக்கக்கூடிய செபத்தின் மேன்மையையும் செபத்தின் கூடிய தேவையையும் பல இடங்களில் நாம் வாசிக்கின்றோம்.




மத்தேயு நற்செய்தியை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். இதில் ஆண்டவருடைய வாழ்க்கை முழுவதுமே ஒரு செப வாழ்க்கை என்பதை உணரலாம். ஆண்டவர் அடிக்கடி செபித்தார். அவர் சிறுவயதிலும் செபித்தார். அவர் வளர்ந்து பகிரங்க வாழ்க்கையை ஆரம்பிக்கும்பொழுதும் செபித்தார். இறுதியில் அவர் தன் உயிரை சிலுவை மரத்தில் ஒப்புக்கொடுப்பதற்கு முன்பாகவும் செபித்தார். இயேசுவின் வாழ்க்கை முழுவதுமே ஒரு செப வாழ்க்கையாக இருந்தது.

மத்தேயு நற்செய்தியில் நான்காவது அதிகாரத்தில், ஆண்டவர் சோதிக்கப்பட்டதைப் பற்றி நாம் வாசிக்கின்றோம். அவர் தூய ஆவியினால் அழைத்துச்செல்லப்பட்டு பாலைவனத்திலே நாற்பது நாட்கள் இரவும் பகலும் நோன்பு இருந்தார். தன்னுடைய பரம தந்தையையே சிந்தையில் வைத்து அவர் செபித்தார். அப்படி செபிப்பதற்கு தூய ஆவியானவருடைய வல்லமையும் அழைப்பும் அவருக்கு இருந்தது.

## தூய ஆவியானவரின் அழைப்பு

நாம் செபிக்க வேண்டும் என்றால் தூய ஆவியானவருடைய வல்லமையும் அவருடைய அழைப்பும் நமக்கு அவசியம். இன்றைய வாழ்க்கையிலும் நமக்கு தூய ஆவியின் வல்லமையும், அவருடைய வழிநடத்துதலும், அவருடைய உந்துதலும், அவருடைய அழைப்பும் நம் ஒவ்வொருவருக்குமே அவசியம். தூய ஆவியானவருடைய தூண்டுதலில் மாத்திரமே நாம் செபிக்கக் கற்றுக்கொள்கிறோம். மத்தேயு நற்செய்தி ஆறாவது அதிகாரத்திலே நம் ஆண்டவர் கற்றுக்கொடுத்த செபத்தை நாம் வாசிக்கின்றோம். ஆண்டவர் செபித்தது மாத்திரமல்ல, நமக்கும் செபிக்கக்கற்றுக் கொடுத்தார். நாம் எப்படிச் செபிக்க வேண்டும் என்றும் சொல்லிக்கொடுத்தார்.

அவர் காலத்திலேயே பலர் பலவிதமாக மக்களின் புகழ்ச்சிக்காக செபித்ததையும் வெளிவேடக்காரராக வாழ்ந்ததையும் ஆண்டவர் பார்த்திருக்கிறார். மத்தேயு நற்செய்தி ஆறாவது அதிகாரத்தில் 5 முதல் 8 வரை உள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள். ஆண்டவர் தனிமையிலும் அந்தரங்கமாகவும் கடவுளோடு செபித்தார். வெளி உலகுக்கு எல்லோருடைய பார்வையில் நாம் செபிப்பதை விடவும் விஷேமாக தனிமையிலே அந்தரங்கத்திலே கடவுளையே கண் முன்பாக வைத்து செபிப்பது அவசியம்.

இறைவனிடம் வேண்டும்பொழுது உங்கள் உள் அறைக்குச் சென்று, கதவை அடைத்துக் கொண்டு, மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைமாறு அளிப்பார்.

நம்முடைய இதய சிந்தனைகளை எல்லாம் காணும் கடவுள், நம்முடைய மௌவுனத்திலே நம்முடைய இதயத்தின் தேவைகளை எல்லாம் உணர்ந்து நமக்குப் பதிலளிக்கின்றார். இப்படி நாம் நமது வானகத் தந்தையிடம் அந்தரங்கத்திலே உறவாட வேண்டும். இதுவே செபம் என்பதை நம் ஆண்டவர் கூட்டிக் காண்பிக்கின்றார்.

## செபிப்பது ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை முறை

இதே நேரத்தில் நம்முடைய கிறிஸ்தவ திருச்சபையில் ஆதிகாலத்தில் இருந்து இன்று வரைக்கும் பொதுமக்கள் கூடக்கூடிய பொது இடங்களிலே நாம் கூடிச் செபிப்பது வழக்கம். உதாரணமாக கத்தோலிக்க திருச்சபையிலே, நாம் வழிபாடு நடத்தி திருப்பலி ஆற்றுகிறோமே அந்தத் திருப்பலி இரகசிய செபம் அல்ல, மௌவுன செபம் அல்ல, கூட்டமாக - குழுவாக - குடும்பமாக திருச்சபை விசுவாசிகள் கூடிவந்து விசுவாசத்தை அறிக்கையிட்டு கடவுளுக்கு முன்னால் கைவிரித்து பகிரங்கமாக குரல் எழுப்பி செபிக்கக்கூடிய அனுபவம். நம்முடைய வாழ்க்கையின் சுருக்கம் என்று சொல்லலாம். பகிரங்கச் செபம், பகிரங்க வழிபாடு என்று சொல்லக்கூடிய திருப்பலி ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை முறை!

ஒவ்வொரு கிறிஸ்தவனும் கடவுளுக்கு முன்பாக எப்படி வாழ்கிறான்? எப்படி வாழ வேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் ஒரு வாழ்க்கை! அந்தச் சாட்சிய வாழ்க்கையே திருப்பலியாக, வழிபாடாக அமைந்திருக்கின்றது.

நம் ஆண்டவர், "நீங்கள் செபிக்க வேண்டும், மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையிடம் செபிக்க வேண்டும், அந்தரங்கமாக செபிக்க வேண்டும்" என்று கூறுகிறார். கடவுளோடு நமக்கு இருக்கக்கூடிய உறவு, நாம் வாழும் சமுதாயத்திலே விசுவாசிகளோடு நமக்கு இருக்கக்கூடிய உறவு, நம்முடைய மனநிலை, ஒருவரோடு நாம் பழகும்பொழுது எப்படி எப்படி இருக்கிறோமோ அதை எல்லாம் எடுத்துக் காட்டக்கூடிய ஒரு முறையைத்தான் செபமாக ஆண்டவர் நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கின்றார்.

மத்தேயு நற்செய்தியிலே ஆறாவது அதிகாரத்தில் 9 முதல் 13 வரை ஆண்டவர் நமக்குக் கற்றுக்கொடுத்த செபத்தை வாசிக்கின்றோம். "விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப் பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக! இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும்! எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீயோனிடமிருந்து எங்களை விடுவியும். ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமக்கே ஆமென்!

இந்த அருமையான செபத்தை நாம் வாசிக்கின்றோம். ஒவ்வொரு நாளும் பல இடங்களிலும் சந்தர்ப்பங்களிலும் சொல்லிச் செபிக்கின்றோம்.

அன்பானவர்களே! இது கிளிப்பிள்ளை பாடமல்ல! ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை முறை! அந்த வாழ்க்கை முறையே ஒரு செபம்! அதில் அடிப்படையாகக் கடவுளை நாம் நினைக்க வேண்டும். கடவுளுடைய திருநாமத்தை நாம் மகிமைப்படுத்த வேண்டும். கடவுளுடைய அரசாட்சி நம்முடைய உள்ளங்களிலும் இல்லங்களிலும் இந்தப் பூமியிலும் வரவேண்டும் என்பதை ஆசித்து பரம தந்தையிடம் உளமார செபிக்கின்றோம். பரிசுத்த கன்னித்தாய் சொன்னதுபோல், மனப்பூர்வமாக, இதயபூர்வமாக, அனல் மூட்டும் இதயத்தோடு செபிப்பதற்கு அடிப்படையில் இருப்பது கடவுளைப் பற்றிய ஒரு ஆசை!

கடவுளுடைய சித்தமும் திட்டமும் ஆட்சியும் இந்தப் பூமியிலே வளர வேண்டும் என்ற விருப்பமும் ஆசையும்! இதைச் செபமாக ஆண்டவர் நமக்கு சொல்லிக் கொடுக்கின்றார். நமது தேவைகளை கடவுள் பார்த்துக் கொள்ளுவார். கடவுளிடத்திலே முழுமனதோடு நாம் மன்றாட வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுக்கின்றார்.

**இது தவிர நமக்கு ஆண்டவர் இப்படி செபிக்கக் கற்றுக்கொடுக்கும்பொழுது அடிப்படையான ஒரு சமூக நல உறவைப் பற்றியும் சொல்லி இருக்கின்றார்.**

நம்முடைய செபம் செபமாக இருக்க வேண்டும் என்று சொன்னால் ஒருவர் ஒருவரை மன்னிக்க வேண்டும். மன்னித்திருக்க வேண்டும் மன்னிக்கும் மனப்பான்மை வேண்டும். ஒருவர் ஒருவரைத் தாங்கிக்கொண்டு பொறுத்துக் கொண்டு அவர்கள் செய்த குற்றங்களையும் நாம் மன்னித்துவிட்டு கடவுளிடத்திலே மன்றாட வேண்டும்.

"தெய்வமே! எங்களுக்கு மன்னிப்புத் தாரும்! நாங்கள் ஒருவர் ஒருவரை மன்னித்துவிட்டோம் எங்களுக்கு மன்னிப்புத் தாரும் அப்பா!" என்று செபிக்கக் கற்றுக்கொடுக்கின்றார் நம் ஆண்டவர்.

## கேளுங்கள்! தேடுங்கள்! தட்டுங்கள்!

மத்தேயு நற்செய்தி 7வது அதிகாரத்தில் 7வது வசனத்தில் இருந்து 11 வரைக்கும் படித்துப் பாருங்கள். "கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில். கேட்போர் எல்லோரும் பெற்றுக்கொள்கின்றனர், தேடுவோர் கண்டடைகின்றனர், தட்டுவோர்க்குத் திறக்கப்படும். உங்களுள் எவராவது ஒருவர் அப்பத்தைக் கேட்கும் தம் பிள்ளைகளுக்குக் கல்லை கொடுப்பாரா? அல்லது பிள்ளை மீன் கேட்டால் பாம்பைக் கொடுப்பாரா? தீயோராகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாக நன்மைகள் அளிப்பார் அல்லவா!

கேளுங்கள்! தேடுங்கள்! தட்டுங்கள்! கேட்பவர்கள் எல்லோரும் பெற்றுக் கொள்கின்றனர். தேடுவோர் கண்டடைகின்றனர். தட்டுபவருக்குத் திறக்கப்படும் என்று ஆண்டவர் அழுத்தமாகச் சொல்கின்றாரே! அப்படியானால் ஏன் கேட்கப்படுவதில்லை? தட்டும்பொழுது திறக்கப்படுவதில்லை? தேடும்பொழுது கிடைப்பதில்லை? அதற்கு அடிப்படைக் காரணமே நம்முடைய மனப்பான்மைதான்! செபம் நம்முடைய வாழ்க்கையின் அனுபவமாக, மனப்பான்மையாக இருக்க வேண்டும்! கடவுளை நாம் எப்படிக் காண்கிறோம்? கடவுளை எப்படி நம் கண்முன்பாக வைத்திருக்கிறோம்? கடவுளை ஒரு தோழனாக, ஒரு தோழியாக, ஒரு தகப்பனாக, நம்மோடு இருக்கக்கூடிய ஒருவராக நினைக்கின்றோமா? ஏதோ நமக்கு வேண்டிய நேரத்தில் நமது அவசியத்தைத் தீர்த்து வைக்கும் ஒருவராக நினைக்கின்றோமா? காசு கொடுத்து அவரை வாங்க முடியுமா? சில்லறையை காணிக்கையாகப் போட்டால் அவரை வாங்கிக்கொள்ள முடியுமா? சில மெழுகுதிரிகளை ஏற்றிவைத்த உடன் எல்லாம் சரியாகி விடுமா? இப்படி ஒரு மனப்பான்மை நமது செபத்தில் இருக்கக்கூடாது.

கடவுளை தகப்பனாக, உயிர் உள்ள நமது தகப்பனாக நாம் பார்க்க வேண்டும் என்று இயேசு சொல்லிக் கொடுக்கின்றார். 'அப்பா' என்று கூப்பிடுங்கள் 'எங்கள் அப்பா' என்று கூப்பிடுங்கள் என்று ஆண்டவர் நமக்கு சொல்லிக் கொடுத்த காரணமே இதுதான்! இதைத்தான் பரிசுத்த கன்னித் தாயும், "இதயத்திலே பற்றி எரியும் அன்புடன்கூடிய செபம் செய்யுங்கள்" என்று கூறுகின்றார்கள்.

**ஆகவே, இதயத்திலே பாச பற்றுதலோடு செபிக்கின்றபொழுது, அங்கே அடிப்படையிலே தொனிக்கக்கூடிய ஒரு விசுவாசம் உந்தித்தள்ளுகின்றபொழுது, நம்முடைய செபத்தைக் கடவுள் கேட்கின்றார்.**

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்


# ஒற்றுமையால் நாம் வளம் பெறுவோம்
# பிரிவினையால் நாம் அழிவுறுவோம்

### பேராயர் ஒஸ்வோல்ட் கோமிஸ்

ஏதோ ஒரு அர்த்தத்தில் நாம் வெற்றிகொண்டுவிட்டோம் என்று கூறலாம். ஆனால் போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை. நாம் ஒரு தேசத்து மக்கள். சம உரிமை கொண்டவர்கள் என்று நாம் உணரும்போதும் நாம் ஒரே நாட்டவர் என்ற எண்ணத்துடன் வளரும்போதும்தான் போர் முடிவுக்கு வரும் என கொழும்புப் பேராயர் மேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் தெரிவித்துள்ளார். போர் முடிவுற்றதாக அரசாங்கம் அறிவித்த நிலையில் அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாம் பல்லின, பல்மத, பல்கலாச்சாரங்களைக் கொண்ட ஒரு சமூகம் என்ற உண்மையை உணர வேண்டும். எனவே எமது இன, மத, அரசியல் வேறுபாடுகளை மறந்து தேசத்தைக் கட்டியெழுப்பும் பாரிய பணி எமக்குத் தரப்பட்டுள்ளது.

சிறுபான்மையினருக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி நாம் அனைவரும் ஒரு நாட்டுமக்கள் என்ற எண்ணக்கருவை உருவாக்கும் அரசியல் தீர்வு கட்டாயமானது. கடந்த மூன்று தசாப்த கால துயரம் நிறைந்த கசப்பான அனுபவங்களைப் பின்தள்ளிவிட்டு நம்பிக்கையுடன் வருங்காலத்தைப் பார்க்க வேண்டும். இந்தப் பிரிவினையில் அனைவருக்கும் பங்குண்டு என்பதை உணர்ந்து ஒருவர் ஒருவரை மன்னிப்போம். கடந்தகாலத்துயர அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக்கொள்வதற்கான தாழ்மையும் ஞானமும் எமக்குத்தேவை. அப்பொழுதுதான் எமது நாட்டிற்கு உண்மையான அமைதி கிடைக்கும். ஒற்றுமையினால் நாம் வளம் பெறுவோம் பிரிவினையால் நாம் அழிவுறுவோம் என்பதை எப்பொழுதும் நாம் நினைவில் கொள்வோம்.



## குறைபாடுள்ள சிறார்களுக்கும் வாழும் உரிமை உண்டு

அன்புச்சகோதரர் சபை முதல்வர் அருட்சகோதரர் ஸ்ரொக்மன் அவர்கள் அண்மையில் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார். இச்சபையினரின் குறைபாடுள்ள சிறார், இளைஞர் பயிற்சி நிலையத்தையும் அவர் தரிசித்தார். அப்பொழுது, "கருக்கலைப்பு இறைவனுக்கும் மனுக்குலத்திற்கும் எதிரான குற்றச்செயல். தற்கால மருத்துவத்துறையின் முன்னேற்றத்தினால் கருவிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து அவை அழிக்கப்படுகின்றன என்று கூறினார். இத்தகையவர்களைச் சமுதாயத்திலிருந்து ஒதுக்கிவைப்பது மற்றொரு குற்றச் செயல். அவர்கள் இவ்வுலகிற்கு வருவதை யாரும் தடைசெய்ய முடியாது. சாதாரண மக்களைப் போன்று இவர்களுக்கும் இவ்வுலகில் வாழும் சமஉரிமை உண்டு. என்றும் அவர் கூறினார்.

## ஒருங்கிணைந்த கல்விநிலைய பரிசளிப்புவிழா

அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரியின் ஆங்கிலப்பயிற்சி வகுப்பின் பரிசளிப்பு விழா கடந்த மார்ச் 20ம் திகதி 2009ல் நடைபெற்றபோது பெருந்தொகையான குருக்கள், துறவிகள், பெற்றோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இங்கு உரையாற்றியவர்கள் மாறிவரும் இன்றைய உலகில் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தைப்பற்றி எடுத்துக்கூறினர். நாட்டின் ஒவ்வொரு மூலைமுடுக்குகளிலும் வாழும் மக்களின் வாழ்வில் ஆங்கிலம் ஊடுருவி உள்ளது. எனவே போதுமான ஆங்கில அறிவைப் பெறாதவர்கள் வாழ்வதற்கான பாதுகாப்பைப் பெறாதவர்களே எனக் கூறப்பட்டது.

## உரோமையில் நடைபெற்ற
### சமூகத் தொடர்பாடல் கருத்தரங்கில் ஆயர் கிங்ஸ்லி



திருத்தந்தையின் சமூக தொடர்பாடல் ஆலோசனைக் குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்டு 2009 மார்ச் 9-15 வரை உரோமாபுரியில் நடைபெற்ற சமூகத் தொடர்பாடல் கருத்தரங்கில் சமூகத் தொடர்பு ஆணைக்குழுவின் உபதலைவரான ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை கலந்துகொண்டார். கருத்தரங்கின் தலைப்பு: "திருச்சபைத் தொடர்பாடலின் மட்டிலான புதிய கண்ணோட்டம்: தொழில் நுட்பத்திலும் தொடர்பாடல் கலாச்சாரத்திலும் மாற்றங்கள் - ஒரு இறையியல் மேய்ப்புப் பணிச் சிந்தனை" என்பதாகும். இதில் பல்வேறு நிபுணர்களின் உரைகள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## வன்னிப்பிரதேசத்தில் உள்ள கிளி/ முல்லை மறைக்கோட்டத்தின்
# 16 பங்குகள் மூடப்பட்டுள்ளன!

### நல்லாயன் யேசுவின் வழியில் குருக்கள் துறவியரும் மக்களோடு இருந்தனர்

யாழ் மறைமாவட்டத்தின் ஒரு பகுதியாகிய கிளிநொச்சி - முல்லைத்தீவு மறைக்கோட்டத்தைச் சேர்ந்த (கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள்) 16 பங்குகள் முற்றாக மூடப்பட்ட நிலையில் அந்த மக்கள் அனைவரும் வவுனியா மாவட்டத்தில் அரசினால் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி, உருத்திரபுரம், அக்கராயன், ஜெயபுரம், வலைப்பாடு, முழங்காவில், குமுழமுனை, மல்லாவி/ மாங்குளம், அமதிபுரம், வட்டக்கச்சி, பரந்தன்/தர்மபுரம், அளம்பில், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, இரணைப்பாலை ஆகிய 16 பங்குகளே இவ்வாறு மூடப்பட்டுள்ளன.

அத்துடன் இந்த இரண்டு மாவட்டங்களில் இருந்த துறவியர் மடங்களும், சிறுவர், இளையோர் பராமரிப்பு இல்லங்களும் மற்றும் அனைத்து திருச்சபை சார்ந்த அமைப்புக்களும் மூடப்பட்டுள்ளன.

இந்த மக்கள் பலமுறை பல இடங்களில் இடம்பெயர்ந்து, தஞ்சமடைந்து இறுதிக்கட்டமாக வலைஞர்மட ஆலய வளாக சூழலில் குடிசைகளிலும் முகாம்களிலும் பதுங்கு குழிகளிலும் வாழ்ந்தனர்.

17 குருக்களும், 22 அருட்சகோதரிகளும் நல்லாயன் இயேசுவின் முன்மாதிரிகையைப் பின்பற்றி தம் மக்கள்மீது கொண்ட அன்பினால் அர்ப்பணத்துடன் பணிபுரிந்தனர். நாளாந்தம் மழைபோல் பொழியப்படுகின்ற செல் குண்டுத் தாக்குதல்களுக்குள் உயிரை கையில் பிடித்தவண்ணம் செபமாலையை கையில் ஏந்தி மக்களுக்கு ஆறுதல் கூறுவதும் போரினால் துன்பப்படும் மக்களின் துறைகளுக்கு செவிமடுப்பதும் ஆறுதல்கூறி அவர்களுக்கு நம்பிக்கை கொடுப்பதும் இவர்களது பணியாக இருந்தது. இக்குருக்கள் துறவியரில் சிலர் காயங்களுக்கும் உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இறுதிக்கட்ட இராணுவ நடவடிக்கையை அடுத்து அனைத்து மக்களும் முற்றுமுழுதாக அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தபோது எஞ்சியிருந்த குருக்கள் துறவிகளும் மக்களோடு சேர்ந்து வெளியேறினர். இவர்களில் சிலர் இன்றுவரை நலன்புரி நிலையங்களிலேயே இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## நீதி, அமைதிக்கான பரிசு பெற்ற இலங்கையின் வழக்கறிஞர்

தற்பொழுது இலங்கையில் நடைபெறும் யுத்தத்தினால் சொல்லொண்ணாத் துயரத்துக்கு உட்பட்டுள்ள மக்களுக்கு ஆற்றிய பணிகளுக்காக இலங்கையின் மனித உரிமைகள் வழக்கறிஞர் மேரியஸ் ருக்ஷன் பெர்னாண்டோ 2009ம் ஆண்டுக்கான ரிஜிகக் சூன் என்னும் நீதி, அமைதிக்கான பரிசைப் பெற்றுக்கொண்டார்.

தென்கொரியா, சியோலில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றிய பெர்னாண்டோ "இந்தப் பரிசைப் பெற்றுக்கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். அதேவேளை பல மக்கள் கொல்லப்படுவதையிட்டு நான் கவலையடைகிறேன்" என்று கூறினார்.

## உயர் மறைமாவட்ட கறிற்றாஸ் நிறுவனம் தொடர்ந்து உதவும்

வடபகுதியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கும், காயப்பட்டுள்ள படையினருக்கும் உதவிபுரிவதற்கான வேண்டுகோளைப் பேராயர் உயர் மறைமாவட்ட கத்தோலிக்க மக்களுக்கு விடுத்தார்.

இதன்படி பல்வேறுபட்ட பங்குகளிலிருந்தும் பெருந்தொகைப் பணம், உலர் உணவு, சுகாதாரத் தேவைக்கான பொருட்கள் சேகரிக்கப்பட்டு அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. அருட்சகோதரிகள், ஆசிரியர் குழாம், பாடசாலை மாணவர்களும் தமது பங்களிப்பினை நல்கினர்.

## புதிய பணிப் பொறுப்புக்கள்

வன்னியில் பல நெருக்கடிகள் மத்தியில் பணியாற்றிய அருட்பணியாளர்களான பா. பிராயன், தே. செல்வரெட்னம் ஆகியோர் முறையே இளவாலை புனித, கென்றியரசர் கல்லூரியிலும், கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் பணியாற்ற நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

## பொதுநிலையினர் ஆணைக்குழுவின் கருத்தரங்கு

"புனித பவுலின் அப்போஸ்தலிக்க ஆர்வத்திலும் முத்திப்பேறுபெற்ற யோசவ்வாஸ் அடிகளாரின் மறையறிவிப்பு ஆர்வத்தினாலும் உள்ளுணர்வு பெற்ற பொதுநிலையினர் திருச்சபைப் பணியில் கொண்ட ஈடுபாடு" என்பதே 2009ம் ஆண்டு வைகாசி 8-10ம் நாள்வரை நடைபெற்ற கருத்தரங்கின் கருப்பொருளாகும்.

பொதுநிலையினருக்கான கத்தோலிக்க தேசிய ஆணைக்குழுவினால் இது ஒழுங்குபடுத்தப்பட்டது.

'வைகாசி 3ம் நாளில் இடம்பெற்ற தேசிய பொதுநிலையினர் ஞாயிறு தினத்தைத் தொடர்ந்து இந்தக் கருந்தரங்கு இடம்பெற்றது.

இந்நிகழ்ச்சித் திட்டம் மறைமாவட்ட பொது நிலையினர் தலைவரின் தொடர்ச்சியான ஈடுபாட்டை இலகுபடுத்த உதவும். ஆணைக் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் இந்தக் கருத்தரங்கில் பங்குபற்ற வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

## வன்னி கறிற்றாஸ் அமைப்பின் புதிய இயக்குனராக கனிசியஸ் அடிகள்

வன்னி கறிற்றாஸ் அமைப்பின் புதிய இயக்குனராக யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் கனிசியஸ் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பணிக்கு முன்னர் பொறுப்பாக இருந்த அருட்பணியாளர் வசந்தசீலன் அடிகளார் வன்னியின் இறுதிக்கட்ட போர் நடவடிக்கையின்போது எறிகணைத் தாக்குதல்களுக்கு உள்ளாகி காயமடைந்து தனது வலது காலை இழந்த நிலையில் கொழும்பில் சிகிச்சைபெற்று வருகின்றார். இவர் வகித்த இந்தப் பொறுப்பே தற்போது கனிசியஸ் அடிகளாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

## நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கான பணிகளில்
# யாழ் மறைமாவட்டக் குருக்கள்


நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கான பணிகளில் யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த 8 குருக்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் அருட்பணியாளர்கள் ஜேம்ஸ் பத்திநாதர், செபஸ்ரியான் கூர், அன்ரன் அமலதாஸ் ஆகியோர் வவுனியாவிலும் அருட்பணியாளர்கள் பெனற், இராஜசிங்கம், எரிக் றொசான், நேசன் ஆகியோர் செட்டிகுளத்தில் உள்ள சின்னக்குளம் என்ற கிராமத்தில் ஒரு வாடகை வீட்டில் இருந்துகொண்டு செட்டிகுளத்திலும் பணிசெய்கின்றனர். இதைவிட அருட்பணியாளர்கள் அமல்றாஜ் மற்றும் ஸ்ரீபன் ஆகியோர் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள நிலையில் அங்கிருந்தவாறே தமது ஆன்மீகப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழ் நகரில் மாபெரும் நற்கருணைப் பவனி

கடந்த யூன் மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ் நகரில் மாபெரும் நற்கருணைப் பேரணி இடம்பெற்றது.

யாழ் பழைய பூங்கா வீதியில் உள்ள இறை தியான இல்லத்திலிருந்து ஆரம்பமாகி பழைய பூங்கா வீதி, குருசோ வீதி, வழியாக மரியன்னை பேராலயத்திற்கு வந்து பின்னர் பாங்சால் வீதி வழியாக குருநகர் புனித இயாகப்பர் ஆலயத்திற்கு வந்து பின்னர் பிரதான வீதி, 4ம் குறுக்குத்தெரு வழியாக அடைக்கல அன்னை ஆலயத்தைச் சென்றடைந்து நிறைவடைந்தது.

மரியன்னை பேராலயம், புனித இயாகப்பர் ஆலயம், அடைக்கல அன்னை ஆலயம் ஆகிய இடங்களில் பவனி தரித்து தியான உரைகள், ஆசீர்வாதம் என்பன இடம்பெற்றன.



பெரும்பாலான இறைமக்கள் வெள்ளை உடை அணிந்து, கைகளில் வெள்ளை அல்லது சிவப்புநிற கொடிகளைத் தாங்கியவண்ணம் இப்பவனியில் கலந்துகொண்டு நற்கருணை ஆண்டவரை மகிமைப்படுத்தி அவருடைய வல்லமையான ஆசீர்வாதங்களைப் பெற்றுச் சென்றனர்.

# உலகத் திருச்சபைச் செய்திகள்

## மூன்று மதங்களுக்கான புனித இடமாக விளங்கும் புனித பூமிக்காகச் செபிக்கத் திருத்தந்தை அழைப்பு

புனித பூமிக்காகவும் அப்பகுதி மக்களுக்காகவும் தன்னுடன் சேர்ந்து சிறப்பாகச் செபிக்குமாறு திருத்தந்தை 16ம் பெனடிக்ற் கேட்டுள்ளார். நம் ஆண்டவர் பிறந்து, இறந்து உயிர்த்த மற்றும் ஒரே கடவுள்மீது நம்பிக்கைகொண்ட மூன்று மதங்களுக்கான புனித இடமாக விளங்கும் புனித பூமி, அறுபது ஆண்டுகளுக்கு மேலாக வன்முறைகளாலும் அநீதிகளாலும் நிறைந்துள்ளது. இது அங்கு நம்பிக்கை யின்மையையும், நிச்சயமற்ற தன்மையையும் பயத்தையும் கொண்ட பொதுவான சூழலை உருவாக்கியுள்ளது என்றும் அவர் கவலை தெரிவித்தார். திருத்தந்தை மே மாதம் 8 முதல் 15ம் திகதி வரை புனித பூமிக்கான திருப்பயணத்தை மேற்கொண்டபோதே இந்த அழைப்பை விடுத்தார்.

புனித பூமி மக்கள் ஒப்புரவு, நம்பிக்கை, அமைதி ஆகிய கொடைகளைப் பெறுவதற்கு அவர்களுக்காகச் செபிக்குமாறு அழைப்பு விடுத்த திருத்தந்தை, போர், பிளவு, வறுமை, ஏமாற்றம் ஆகியவற்றால் நிறைந்துள்ள இன்றைய உலகுக்கு கடவுளின் அமைதியின் அருள் உண்மையிலே மிகவும் தேவைப்ப - டுகின்றது என்றார். இன்று அகில உலகும் மிகுந்த கவலை தரும் பொருளாதாரச் சூழலோடு போராடிவரும் இவ்வேளையில் கிறிஸ்தவர்கள் நம் ஆண்டவரின் ஆறுதல் தரும் வார்த்தைகள் கேட்கப்படுவதற்குக் கடினமாக உழைக்குமாறும் திருத்தந்தை வலியுறுத்தினார். ஒருவருக்கொருவர் உதவுதல், பலப்படுத்துதல், நம்பிக்கை ஆகியவற்றின் புளிக்காரமாக கிறிஸ்தவர்கள் வாழுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.



### செப்டம்பர் 26-28, 2009 செக் குடியரசுக்கு திருத்தந்தை திருப்பயணம்

திருத்தந்தை 16ம் பெனடிக்ற் செக் குடியரசுக்கு வருகிற செப்ரம்பர் 26முதல் 28வரைத் திருப்பயணம் மேற்கொள்வார் எனத் திருப்பீடம் அறிவித்தது.

செக் குடியரசுத் தலைவர் வாக்லாவ் க்ளாவ்ஸ் மற்றும் செக் ஆயர்கள் பேரவையின் அழைப்பை ஏற்று வருகிற செப்ரம்பரில் இத்திருப்பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக திருப்பீடம் கூறியது.

செக் குடியரசுத் தலைவர் க்ளாவ்ஸ் தலைமையிலான குழு திருப்பீடத்தில் திருத்தந்தையை சந்தித்த பின்னர் திருப்பீடம் இச்செய்தியை வெளியிட்டது

### கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா கிழக்கிலும் மேற்கிலும் ஒரே நாளில்

2010 மற்றும் 2011ம் ஆண்டுகளில் ஜூலியன் மற்றும் கிரகோரியன் நாட்காட்டிகள் ஒன்றாக இணைவதால், கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா கிழக்கிலும் மேற்கிலும் ஒரே நாளில் சிறப்பிக்கப்படுவதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கின்றது என்று சர்வதேச கிறிஸ்தவ ஒன்றிப்பு கருத்தரங்கு ஒன்றில் கூறப்பட்டது.

உக்ரேய்ன் நாட்டு லிவ் கத்தோலிக்கப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்குகொண்டோர் இவ்வாறு கூறினர்.

இந்த இரண்டு நாட்காட்டிகள் ஒன்றாக இணைவதால் அனைத்துக் கிறிஸ்தவர்களும் 2012ம் ஆண்டு ஏப்ரல் 8ம் திகதி கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடுவர் என்றுரைத்த அவர்கள், இனிமேல் ஆண்டுதோறும் ஒரே நாளில் எல்லாக் கிறிஸ்தவர்களும் இப்பெருவிழாவைக் கொண்டாட இது நல்ல வாய்ப்பாக இருக்கின்றது என்றனர். கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழாவிற்குப் பொதுவான திகதியை குறிக்கும் முயற்சி 325ம் வருடத்தில் நீசே பொதுச் சங்கத்தில் தொடங்கப்பட்டது.

### இவ்வாண்டில் 23 கோடியே 90 இலட்சம் பேர் வேலையின்றி இருக்கக்கூடும்

உலக அளவில் தொழிற் சந்தை நலிந்து வரும் வேளை, இவ்வாண்டில் 23 கோடியே 90 இலட்சம் பேர் வேலையின்றி இருக்கக்கூடும் என்று உலக தொழில் நிறுவனம் கவலை தெரிவித்துள்ளது.

வேலையில்லாதோரின் எண்ணிக்கை கடந்த மார்ச் மாதத்தில் கணித்ததைவிட தற்சமயம் அதிகமாக இருக்கும் என்று தெரிவதாக அந்நிறுவன இயக்குனர் ஹீவான் சோமாவியா ஜெனீவாவில் நிருபர்களிடம் கூறினார். தற்போதைய இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் இந்நிலை இன்னும் ஆறு முதல் எட்டு வருடங்களுக்கு நீடிக்கும் என்றும் எச்சரித்தார்.

### திருச்சபையுடன் சேர்ந்து செயல்பட ஐரோப்பிய சமுதாய அவை அழைப்பு

ஆபிரிக்க நாடான சாம்பியாவில் எயிட்ஸ் நோயை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் அரசு அந்நாட்டுக் கத்தோலிக்கத் திருச்சபையுடன் சேர்ந்து செயல்படுமாறு ஐரோப்பிய சமுதாய அவை கேட்டுள்ளதாக பிதேஸ் செய்தி நிறுவனம் கூறியது.

ஜாம்பிய தலைவராகிய சூசன் தாமஸ், பொது மக்களுக்கு தாய் சேய் நலக்கல்வி மற்றும் பாலியல் சார்ந்த விழிப்புணர்வுக் கல்வி வழங்குவதில் திருச்சபை முக்கிய பங்காற்றுவதால், எச்.ஐ.வி நோய்க் கிருமிகள் பரவுவதைத் தடுப்பதற்கான முயற்சிகளில் அரசு திருச்சபையுடன் சேர்ந்து செயற்படுமாறு வலியுறுத்தினார்.

ஆபிரிக்காவில் சில நாடுகளில் எய்ட்ஸ் நோய்களுக்கான சேவைகளில் ஐம்பது விழுக்காடுவரை கத்தோலிக்கத் திருச்சபையால் மேற்கொள்ளப்படுகின்றன.

### கத்தோலிக்க இறையியலாளர் வத்திக்கான் தூதுவராக நியமனம்

பிரசித்திப்பெற்ற கத்தோலிக்க இறையியலா -ளரான மிகுவேல் டயஸ் அவர்களை அமெரிக்க ஜனாதிபதி ப்ராக் ஒபாமா வத்திக்கானுக்கான தூதுவராக நியமித்துள்ளார். ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், யப்பான், இந்தியா மற்றும் பல நாடுகளுக்கான தனது தூதுவர்களை வெள்ளை மாளிகை அறிவித்த போதே டயஸ் அவர்களின் பெயரையும் அது வெளியிட்டது. இவர் பல்கலைக்கழகத்திலும் இறையியல் பேராசிரியராக உள்ளார்.



### நிலநடுக்கப் பாதிப்புக்கு வத்திக்கான் அருங்காட்சியகம் உதவி

வத்திக்கான் அருங்காட்சியகம் வழக்கமாக ஞாயிறு தினங்களில் மூடப்பட்டிருக்கும். இத்தாலியின் லாக்விலாவில் பூமி அதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக மே மாதம் 10ஆம் தேதி ஞாயிறு அன்று வத்திக்கான் அருங்காட்சியகம் திறக்கப்பட்டு அன்றைய வசூல் லாக்விலாவுக்கு வழங்கப்பட்டது.

கோடைக்காலம் தொடங்கியுள்ளதால் ஒவ்வொரு நாளும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் உரோமைக்கு வருகின்றார்கள் என்பதும், அருங்காட்சியகத்தில் நுழைவதற்கு முன்னர் வெகு தொலைவு வரிசையில் நிற்கவேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### யூதர்களைக் காப்பாற்றிய கத்தோலிக்கரைக் கௌரவிக்க முயற்சி

யூத இனப்படுகொலைகள் இடம்பெற்றபோது கத்தோலிக்கரால் காப்பாற்றப்பட்ட யூதர்களின் சாட்சியங்களைச் சேகரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது ராவுல் வல்லன்பேர்க் என்ற சர்வதேச அமைப்பு.

திருத்தந்தை 16ம் பெனடிக்றின் புனித பூமிக்கான் திருப்பயணத்தையொட்டி இம்முயற்சியில் இறங்கிய இச்சர்வதேச அமைப்பு, இரண்டாம் உலகப்போரின்போது நாசிகளால் வதைக்கப்பட்ட யூதர்களைக் காப்பாற்றுவதற்காக ஐரோப்பாக் கண்டத்தில் பெரும் எண்ணிக்கையில் கத்தோலிக்கர் தங்கள் உயிர்களைப் பணயம் வைத்து செயற்பட்டுள்ளனர் என்று கூறியது.

இக்கத்தோலிக்கரில் மிகச்சிலரே இனம் காணப்பட்டு நன்மதிப்பு அளிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவ்வமைப்பு கூறியது. யூதர்களைக் காப்பாற்றிய கத்தோலிக்கரை இனம்கண்டு கௌரவிப்பதன் மூலம் திருத்தந்தையின் புனித பூமிக்கானத் திருப்பயணத்தைக் கொண்டாடவும் கத்தோலிக்கருக்கும் யூதருக்கும் இடையே தோழமையை ஊக்குவிக்கவும் விரும்புவதாக அவ்வமைப்பின் அறிக்கை கூறியது.

### அணு ஆயுத ஒழிப்பை ஊக்குவிக்கத் திருப்பீடம் அழைப்பு

நாடுகள் மத்தியில் நம்பிக்கை, பாதுகாப்பு மற்றும் அமைதியை வளர்ப்பதற்கு அணு ஆயுதங்கள் ஒழிக்கப்படவும் ஆயுதப் பரவல் நிறுத்தப்படவும் சர்வதேச சமுதாயம் நாடுகளை ஊக்குவிக்கவேண்டுமென ஐ.நா.வுக்கானத் திருப்பீடத்தின் நிரந்தரப் பார்வையாளர் பேராயர் செலஸ்தீனோ மிலியோரே அழைப்பு விடுத்தார்.

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தப் பரிசீலனை செய்யும் 2010ம் ஆண்டின் கூட்டத்திற்கான தயாரிப்புக் குழுவில் உரை - யாற்றிய அவர் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

கடந்த 40 வருடங்களாக சர்வதேச சமுதாயத்தின் நற்பணிக்குத் தன்னை அர்ப்பணித் -துள்ள திருப்பீடம், இந்த ஒப்பந்தத்திற்கு உறுதி- யான ஆதரவைத் தொடர்ந்து கொடுக்கின்றது என்பதைக் கோடிட்டுக் காட்டினார்.

### ஈராக்கில் 2005ஆம் ஆண்டிலிருந்து 87,215 குடிமக்கள் கொலை

ஈராக்கில் குண்டுவெடிப்புக்கள், தூக்கிலிடுதல் என இடம்பெறும் இத்தகைய இடர்களில் 2005ம் ஆண்டிலிருந்து 2009 ஏப்ரல் வரை 87,215 குடிமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று அந்நாட்டு அரசு வெளியிட்ட புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

இறந்துள்ள 87,215 குடிமக்களில் 59,957 பேர் 2006க்கும் 2007க்கும் இடைப்பட்ட காலத்தில் இறந்தவர்கள் என்றும் அரசின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

மருத்துவமனை வட்டாரங்கள் மற்றும் ஊடகங்களின் அறிவிப்புப்படி, 2003ம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தலைமையில் நடந்த ஆக்கிரமிப்புக்குப் பின்னர் இதுவரை 1,10,600க்கும் அதிகமான ஈராக்கியர்கள் இறந்துள்ளனர்.

### உலகில் கடந்த ஆண்டில் இராணுவத்திற்கென 1,46,400 கோடி டாலர் செலவழிக்கப்பட்டுள்ளது!

உலகில் கடந்த ஆண்டில் இராணுவத்திற்கென 1,46,400 கோடி டாலர் செலவழிக்கப்பட்டிருப்பதாகவும், இதில் அமெரிக்க ஐக்கிய நாடு முன்னிலை வகிப்பதாகவும் சிப்ரி என்ற ஸ்டாக்கோல்ம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்தது.

ஆயுதங்கள் கப்பல்களில் ஏற்றுமதியானது 2007ம் ஆண்டைவிட 4 விழுக்காடும் 1999ம் ஆண்டிலிருந்து 45 விழுக்காடும் அதிகம் என்று அந்நிறுவனத்தின் உலக ஆயுத வியாபாரம் குறித்த ஆண்டறிக்கை கூறுகிறது. பயங்கரவாதத்திற்கெதிரான போர் என்ற எண்ணத்தில் பல நாடுகள் இராணுவத்திற்கான செலவை அதிகரித்துள்ளன என்று அவ்வறிக்கை தெரிவிக்கிறது.

அதேசமயம், ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானின் சண்டைகளுக்கென அமெரிக்க ஐக்கிய நாடு மட்டும் 90,300 கோடி டாலரை செலவழித்துள்ளது என்றும் சிப்ரி கூறியது.

1999க்கும் 2008க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் அதிகரித்துள்ளதில் 58 விழுக்காட்டிற்கு அமெரிக்க ஐக்கிய நாடு பொறுப்பு என்றும், அமெரிக்க ஐக்கிய நாடு, இரஷ்சியா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ், இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் ஆகிய 8 நாடுகளில் 23,300 அணு ஆயுதங்கள் உள்ளன என்றும் சிப்ரி தெரிவித்தது.

### பாகிஸ்தான் மக்கள் வெறுப்புணர்வை அகற்ற கிறிஸ்தவத் தலைவர்கள் அழைப்பு

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் இராணுவத்துக்கும் தாலிபான்களுக்கும் இடையேயான மோதல்கள் வலுத்துவரும் வேளை, மக்கள் வெறுப்புணர்வை அகற்றி வாழுமாறு அந்நாட்டுக் கிறிஸ்தவத் தலைவர்கள் அழைப்புவிடுத்துள்ளனர்.

சமயத் தீவிரவாதிகளாலும் புரட்சியாளர்களாளும் ஏற்படுத்தப்பட்டுள்ள அச்சமூட்டும் நிலை நாட்டின் விதிமுறைகளுக்கு மட்டும் சவாலாக இல்லை. மாறாக ஜனநாயக அமைப்புமுறை பற்றிய குழப்பத்தையும் நாட்டு மக்களிடையே உருவாக்கி வருகின்றது என்று லாகூர் பேராயர் லாரன்ஸ் சல்தான்ஹா நிருபர்களிடம் கூறினார்.

ஆயுதம் தாங்கிய குழுக்களின் நடவடிக்கைகள், பெருமளவில் மனித வாழ்வுக்குச் சேதம் விளைவிப்பது மட்டுமல்ல, அதோடு நாட்டின் இயல்பான அமைப்பையும் பாதிக்கின்றன என்று பேராயர் சல்தான்ஹா அறிவித்தார்.

பாகிஸ்தானில் அமைதி ஏற்படவும் வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களுடன் ஒருமைப்பாட்டுணர்வைத் தெரிவிக்கவுமென மே 30ம் திகதியை செப மற்றும் நோன்பு நாளாக அறிவித்தனர் அந்நாட்டுக் கிறிஸ்தவத் தலைவர்கள்.

பாகிஸ்தானில் கத்தோலிக்க மற்றும் பிற கிறிஸ்தவ சபைகளின் தலைவர்கள் இணைந்து லாகூர் இயேசுசபை மையத்தில் நடத்திய கூட்டத்தின் முடிவில் இதனை அறிவித்தனர்.

### சீனாவில் மதசுதந்திரம் மதிக்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும் ஹாங்காங் திருச்சபை வேண்டுகோள்

சீனாவில் மதசுதந்திரம் மதிக்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும். மற்றும் சீனக் கத்தோலிக்கர் சித்திரவதைப்படுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என ஹாங்காங் நீதி மற்றும் அமைதி அவை .சீன அரசுக்கு விண்ணப்பம் ஒன்றை விடுத்துள்ளது.

சீனாவுக்கான செப நாளாக அறிவிக்கப் பட்டிருந்த ஞாயிறன்று ஹாங்காங்கிலுள்ள சீன ஆட்சி அலுவலகத்தின் முன் கூடிச் செபித்த கத்தோலிக்கர், சீனாவில் மதசுதந்திரம் குறித்த புத்தகம் ஒன்றையும் வெளியிட்டனர். சீனாவில் மத அடிப்படையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதைத் தடுக்க இப்புத்தகம் உதவும் என்ற நம்பிக்கையும் ஹாங்காங் கத்தோலிக்கரால் வெளியிடப்பட்டது.

ஜெங்டிங் ஆயர் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளது, ஆயர்கள் சு. ஜினியன், ஷி. என்ஜியாங், குரு லு ஜென்சுன் ஆகியோர் காணாமற்போயுள்ளது போன்றவை குறித்தும் ஹாங்காங் கத்தோலிக்கர் சீன அரசுக்கான தங்கள் கடிதத்தில் கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### வாழ்க்கை

நேசம் என்னும் தாய்மடியில்
பாசமுடன் தவழ்ந்து வந்தேன்
அன்பு எனும் உறவு சொல்லி
ஆனந்தமாய் தழுவிக் கொண்டேன்.

ஆறு வயதில் அறியாக் கல்வியை
ஆசையுடன் கற்றுவந்தேன்
ஏணியான ஆசானிடம்
பெருமைகளைப் பெற்றுவந்தேன்.

வாழ்க்கை என்னும் பேரிடியை
வட்டமிட்டு வாழ்ந்துகொண்டேன்.
வாசமுடன் கலைகள் கற்று
வசந்தத்தில் வாழ்ந்து வந்தேன்.

பாதை மாறிச் சென்றதனால்
காலம் ஒன்றை எதிர்பார்த்தேன்
சோகம் என்னை வாட்டும்போது
சோர்ந்து போனேன் என் வாழ்வில்.

உறவு கொண்டோர் திசை மாற்றம்
உள்ளமெல்லாம் தடுமாற்றம்
கனம் கொண்டது என் உள்ளம்
கடவுள் பாதம் சரணடைந்தேன்.

- கே. றெபேக்கா, தரம் 9, பேசாலை




### அவலத்தின் அழுகுரல்

அகிலமே போற்றி அரவணைத்து
அன்புகூரும் தாய்க் குலமே
அருமை உடன் பிறப்புகளே - உம்
அவலநிலை கண்டு எம் நெஞ்சம்
கலங்கித் தவிக்கின்றது!

அநாதையாய் அலையும் உமக்கு ஆதரவுதர
ஆரும் அற்ற நிலைகண்டு
கண்ணீர் வடிகின்றது.

தாய் கையில் சேயும் தந்தை கையில் தடியும்
முகத்தில் தாடியும் உயிருக்காக ஓடிவரும்
உறவுகள் ஒன்றுகூடி பட்டதுயர் பலதையும்
பகிர்ந்து கூறி கட்டியணைத்துக் கதறியழும்
எம் உறவுகளைப் பார்க்க
கண்ணீர் கண்களால் வழிகின்றன.

ஞா. கிறிஷாந்தா (குயின்சி), 12 கலை
மன்/ பரிகாரிகண்டல் அ.த.க.பா, முருங்கன

### காத்திருப்போம்

கண் விழித்தால் கலைந்திடும் எம் வாழ்வு
கயவனின் பிடிக்குள்ளே பலர் சாவு!
மலர்ந்த அன்பு உதிர்ந்து போனது
சிறகடித்த சுதந்திரம் சிறகுடைந்து போனது!
துன்பத்தில் இன்பம் காணும் மானிடரின்
மனங்களில் மனிதநேயம் மாண்டொழிந்தது.
யுத்தமென்னும் இரத்த வெள்ளத்தில்
மூழ்கிய உயிர்களின் அழுகுரல்களும்
இயற்கையின் கொடூரத்தால்
இறந்தொழிந்த மக்களின் அவலக்குரல்களும்
இன்னும் ஓயவில்லை!
ஆன்மீகமற்ற மனிதர்களால்
கலைந்துபோன வாழ்வை மறந்துவிட்டு
சாதி மதம் கடந்து ஆன்மீக வாழ்விலே
அன்பென்னும் ஆயுதத்தால்
சமாதான விடியலுக்காய்க் காத்திருப்போம்!

- இ. ஜீவிதா,
கற்கிடந்தகுளம், முருங்கன்

### சோகம்

ஒற்றைக் கால்! அதுகூட எனக்கு அதிஸ்டம்தான்
பலர் இரண்டு கால்களுமே இல்லாமல் இருக்க
பிச்சைக்காரனின் உடைபோல கிழிந்து தொங்கும்
எனது முகம் அதுகூட அதிஸ்டம்தான்
பலர் தலைவேறு உடல் வேறாக போனதின்பின்.

உலக வரைபடம்போல் என் மேனியெல்லாம்
வெடிமருந்துகள் சிதறிய தளும்புகள்!
இப்போ இதுகூட என் மனதுக்கு ஆறுதல்தான்
பதுங்கு குழிகளில் பட்டினியால் செத்தவரைவிட.

என் கற்பைப்பறித்து காகங்கள் சேர்ந்து உண்டன
கவிதை எழுத வரிகள் ஞாபகம் வந்தன
இப்போது ஆடையின்றி அவதியுற்றேன்
ஈரத்துணியால் இதயத்தை வரிந்து கட்டிவிட்டேன்

உண்ண உணவு கிடைக்குமென்று தவித்தேன்
உறங்கக் கண்கள் மூடும் என்று நினைத்தேன்
பகல் இரவுபோலும் இரவு பகல்போலும் ஆயிற்று
பாசமுள்ள என் குடும்பம் பறிபோச்சே
இனி என்னதான் வாழ்வு? சோகப் பேச்சே!

சொகுசு வாழ்வும் சுதந்திரமும்
சில மனிதருக்கு மட்டுமே எழுதப்பட்டதோ?
சுருள்சுருளாய் வளைந்து கிடக்கும்
முள்வேலிக்குள் நின்றுகொண்டு
சகிக்க முடியாத மனித அவலத்தை
சத்தம் செய்யாது எப்படிப் பாடுவேன்?

உயிர் காக்க உயிர் அணுக்களால்
கட்டப்பட்ட கூடு ஓட்டை வீடுபோல் ஆச்சு
வயிற்றை ஒறுத்துச் சேர்த்த சொத்துக்கள்
கண் முன்னே எரிந்து சாம்பலாச்சு!

ஒற்றைக்காலில் உலக வாழ்க்கை
பிச்சைக்காரனிலும் கேவலமாச்சு
மிச்சம் இருக்கும் என் உயிரையும்
யாரும் கேட்டால் இலவசமாகத் தருகிறேன்.

கனிலன், முருங்கன் பங்கு

### தேடும் பயணமதில்

*காணாமல்போன ஜிம்றவுன் அடிகளின் 3ம் ஆண்டு நினைவாக!*



பரமன் இயேசுவின் உன்னத பணியை
பாரில் ஆற்ற உவப்புடன் வந்தீர்
பிஞ்சு உள்ளங்களை மகிழ்வித்து
பீதியற்ற வாழ்வை வழங்கி நின்றீர்
புனிதமான பணியை புவிதனில் ஆற்றி
பூத்துக்குலுங்குவீர் என்றே நினைத்தோம்
பெயர்ந்தது எம் கனவுக் கோட்டை
பேரிடியாக வந்ததே ஓர் செய்தி
பொய்யென எம் மனதைத் தேற்றினோம்.
காணாமல்போனோர் பட்டியலில்
உம் பெயரும் பதிவாயிற்று!
ஆண்டுகள் மூன்று ஓடிற்று ஆனாலும்
உம்மை மறவாது மன்னார் மண்.
மறையாசிரியருக்கு நல் ஆசானாய்
திருப்பாலகருக்கு பயிற்றுவிப்பாளராய்
இளையோருக்குத் நற்தோழராய்
நீர் ஆற்றிய அரிய சேவைகளை
நெஞ்சந்தான் மறக்குமோ?
ஒன்றல்ல.... ஓராயிரம் யுகமாயினும்
உம் பாதம்பட்ட மன்னார் மண்ணில்
உம் சேவை மறக்கப்படமாட்டாது!
மறைக்கப்படமாட்டாது!

- த. டக்ஷினி,
கற்கிடந்தகுளம், முருங்கன்

## சிறுகதை

### உயிரில் கலந்த உறவு

- இ. ஸ்ரீபனா, களிமோட்டை, முருங்கன்.

இரவுச் சாப்பாட்டை அருந்துவதற்குச் சென்ற ஜெனியால் சாப்பிட முடியவில்லை. சாப்பாட்டை எடுத்து மூடிவைத்துவிட்டு மெல்லச் சென்று கட்டிலில் அமர்ந்துகொள்கிறாள். எதிரில் அவளைப் பார்த்துப் புன்னகைத்தவாறே அன்புத் தங்கை நிஷாவின் புகைப்படம் சுவரில் தொங்கிக் கொண்டிருந்தது. அழகான ஒரு மாலை அவ்ளின் படத்திற்குப் போடப்பட்டிருக்க அந்த மாலையின் நடுவிலே புதுமலராய் நிஷாவின் முகம் மின்னியது. ஜெனியின் கண்கள் குளமாக நிரம்பி, கண்ணீர் கன்னத்தை முத்தமிட அவளின் உள்ளம் நிஷாவுடன் வாழ்ந்த நாட்களை இசையாக மீட்டிப் பார்க்கிறது.



சின்னச்சின்ன சண்டைகள், கோபங்கள், பிரிவுகள் மத்தியிலும் அளவுகடந்த பாசமழை பொழிந்த அந்தப் பசுமையான காலத்தை யாரால்தான் மறக்கமுடியும்? ஆசைத் தங்கையுடன் அவள் வாழ்ந்த காலங்கள் இறந்த காலமாக மாறியிருக்கலாம். ஆனால் ஜெனியைப் பொறுத்தவரை காலத்தால் அழிக்க முடியாத கானங்கள் அந்த நாட்கள்!

அந்தப் பிரதேசத்திலே பிரசித்திபெற்ற கிராமம் அது. அதைச் சுற்றியிருந்த பிற கிராம மக்கள் வன்முறையால் அகதியாக தஞ்சம் புகுந்த கிராமம் அது. ஜெனியும் அவளின் தாயாரும் ஆருயிர்த்தங்கையும் அகதியாக அங்கு சென்றனர். ஆயிரம் துன்பம் இருந்தாலும் எப்போதும் இதழ்களில் புன்னகைச் சாயத்தைப் பூசி முகமலர்ச்சியுடன் காணப்படுவாள் நிஷா. ஆசிரியராகப் பணிபுரிந்த நிஷா வீட்டின் செல்லப்பிள்ளை, ஜெனியின் உயிர்மூச்சு. நிஷா தனது பணிக்காக வேறொரு இடத்திலே தங்கி நின்றாள். விடுமுறைக் காலங்களில் வீட்டிற்கு வருவாள். நிஷாவின் விடுமுறைக்காக நாட்களை எண்ணியபடி காத்திருப்பாள் ஜெனி.

விடுமுறைக்கு நிஷா வீடு வந்தால் போதும் ஜெனியின் மகிழ்ச்சியை அளவிட முடியாது. ஜெனி - நிஷா இருவரும் சகோதரிகள் என்பதைவிட இணைபிரியா தோழிகள் எனலாம். உயிரும் உடலுமாய் வலம் வந்தனர். அக்காச்சி... அக்காச்சி... என ஜெனியைச் சுற்றித் திரிவாள் நிஷா. அவளுக்கு உணவும் ஊட்டிவிடுவாள். காலம் முழுவதும் நிஷாவுடனே இருந்துவிடலாம் போலிருக்கும்.

காலங்களும் கரைந்துகொண்டே இருந்தன. யுத்தங்களும் வன்முறைகளும் தொடர்ந்து கொண்டே இருந்தன. எதுவும் நிற்பதாய் தெரியவில்லை. எத்தனையோ உயிர்கள் யுத்தத்திற்கும் வெடிகுண்டுக்கும் இரையாகிக் கொண்டிருந்தது.

பாடசாலை முதல் தவணை ஆரம்பம் என்பதால் விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டனர். மாணவர்களை உற்சாகமூட்டுவதில் ஆசிரியர்களும் குறியாயிருந்தனர். ஜெனியும் அவ்வாறான ஆசிரியர்களில் ஒருத்திதான். மாணவர்களோடு விளையாட்டுப் போட்டி முடிந்தபின் வீட்டிற்குப் புறப்பட்டாள். வழமையாக வரும் பேரூந்தில் ஏறிக்கொண்டாள். வெளியே வெடிச்சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது.

"இன்று வெள்ளிக்கிழமை. எப்படியும் என் நிஷா வந்துவிடுவாள்" என்று வழிமீது விழி வைத்து அன்புத்தங்கையின் வருகைக்காய் காத்து நின்றாள் ஜெனி. வெகுநேரமாகியது! வந்தது பஸ் அல்ல, அவளின் ஆருயிர்த் தங்கை இறந்த செய்தி மட்டுமே!

சிலையாகி நின்ற ஜெனிக்கு நினைவுவர சில நிமிடங்கள் எடுத்தது. அன்புத்தங்கை வந்த பஸ் கிளைமோர் தாக்குதலுக்கு உள்ளாகியது! பல உயிர்கள் ஸ்தலத்திலேயே பலியாகியது. அதில் நிஷாவும் ஒருத்தி. கண்மூடித் திறப்பதற்குள் எல்லாம் நிறைவேறி முடிந்துவிட்டது.

உறவுகள் கூடி அழுதனர். ஜெனியின் ஆருயிர்த் தங்கை பிணமாய் வைக்கப் - பட்டிருந்தாள். உதிர்ந்திடும் புன்னகை மட்டும் நிஷாவின் இதழ்களில் அப்போதும் பூத்திருந்தது. ஜெனி அழுதாள், புரண்டாள், துடிதுடித்தாள்! போன உயிர் மீள வருமா? இறுதிக்கடன் முடிந்து சில நாட்களில் உறவுகளும் விடைபெற்றனர். ஆறுதல்கூற ஆயிரம் பேர் வந்தாலும் அம்மாவும் ஜெனியுமே வீட்டில். பிரிவு அவர்களை விட்டுப்பிரிவதாய் இல்லை.

இவ்வாறாக நிஷாவின் நினைவோடு உறங்கினாள் ஜெனி. காலைத் தென்றல் சூரியக்கதிர்களோடு போட்டியிட்டுக்கொண்டு சாளரத்தினூடாக வந்து ஜெனியை வருடிச் சென்றது. கண்களைத் திறந்தபோது முன்னால் சுவரிலிருந்த நிஷா அவளைப் பார்த்துப் புன்னகைத்தவாறு இருந்தாள். எழுந்து சென்று தனது கடமைகளை முடித்து விட்டு பூமாலையோடு வந்து நிஷாவின் படத்தில் அதை மாட்டிவிட்டு படத்தை முத்தமிடுகிறாள்.

உலகப் பார்வையில் நிஷா இறந்துவிட்டாள். ஆனால் ஜெனியின் வாழ்க்கையில் கண்ணின் மணியாய், உயிரில் கலந்த உறவாய் நிஷா வாழ்ந்துகொண்டிருக்கிறாள்.

### வாழ்க்கையை வாழ்!

வாழ்க்கை ஒரு சவால் - அதைச் சமாளி
வாழ்க்கை ஒரு பரிசு - அதைப் பெற்றுக்கொள்
வாழ்க்கை ஒரு சாகசம் - அதில் துணிவு காட்டு
வாழ்க்கை ஒரு கடமை - அதை முடித்து விடு
வாழ்க்கை ஒரு விளையாட்டு - பங்குகொள்
வாழ்க்கை ஒரு புதிர் - அதற்கு விடை காணு
வாழ்க்கை ஒரு பாடல் - அதைப் பாடிவிடு
வாழ்க்கை ஒரு வாய்ப்பு - அதைப் பயன்படுத்து
வாழ்க்கை ஒரு பயணம் - அதை முடித்துவிடு
வாழ்க்கை ஒரு வாக்குறுதி - அதைக் காப்பாற்று
வாழ்க்கை ஒரு காதல் - அதை அனுபவி
வாழ்க்கை ஒரு வனப்பு - அதன் புகழ்பாடு
வாழ்க்கை ஒரு போராட்டம் - அதை வெற்றிகொள்
வாழ்க்கை ஒரு குழப்பம் - அதைத் தீர்த்துவிடு
வாழ்க்கை ஒரு இலக்கு - அதை அடைந்துவிடு
வாழ்க்கை தெய்வீகமானது - அதை அறிந்துகொள்

- அ. இனிக்கா றோஸி, தரம் 8B, வங்காலை -

### துளிப்பா



**பூக்கள்**
தன் இதழ்கள் விரித்து
இன்முகத்துடன் தன்னகத்தே
அழைத்திடும் இயற்கையின் பரிசு.



**மெழுகுதிரி**
தன் கண்ணீரினாலே
அடுத்தவர் வாழ்வின்
இருளை அகற்றி
ஒளிகொடுத்திடும் உன்னத ஜீவன்!

**ஜனனம்**
இரு உணர்வுகளின்
ஒன்றிணைப்பால் உருவான
ஓர் புதிய உயிரின் வருகை!

*- திருமதி. றூபி விமலதாஸ், நவாலி*

**செபம்**
இறைவனோடு மனம் விட்டுப் பேசும்
மகிழ்ச்சியான நேரம்.



**கல்வி**
அறிவுக் கடலைக் கடந்து
வாழ்வுக் கலங்கரை விளக்கை
அடையும் படகு.

**தூபம்**
இறை பிரசன்னத்தை மகிமைப்படுத்திடும்
அன்பின் அடையாளம்.

**மரணம்**
நீண்ட ஆயுளும்... நிரந்தர அமைதியும் ...
உடைய பயணம்.

*- பெனடிக்ற் டெரன்சியா, மட்டக்களப்பு*



### சிரிப்பவர்



இடம்பார்த்து சிரிப்பவன் - எத்தன்
இருக்கும் இடமெல்லாம் சிரிப்பவன் - கோமாளி
கண் பார்த்துச் சிரிப்பவன் - காரியவாதி
கற்பனையில் சிரிப்பவன் - கவிஞன்
காணாமல் சிரிப்பவன் - கஞ்சன்
கோபத்தில் சிரிப்பவன் - சிந்தனையாளன்
நீதியோடு சிரிப்பவன் - அறிஞன்
மகிமையில் சிரிப்பவன் - மன்னன்
கூட்டத்தில் சிரிப்பவன் - சாமர்த்தியன்
குழைந்து சிரிப்பவன் - சந்தர்ப்பவாதி
கொடுக்கும்போது சிரிப்பவன் - சூழ்ச்சிக்காரன்
துன்பத்தில் சிரிப்பவன் - மனிதன்

- யோ. மேரி நிமல்கா பெனாண்டோ, தரம் 13. (கலைப்பிரிவு) முத்தரிப்புத்துறை

## புனித பவுல் ஆண்டு மற்றும் நற்செய்தி அறிவிப்பு ஆண்டு


கட்டுரைத் தொடர் 6

# கலாத்தியர் திருமுகம்

எழுத்துருவாக்கம் ஆயர் செ. சூசைமாணிக்கம்

பவுல் தமது முதல் தூதுரைப் பயணத்தின் போது கலாத்திய மாநிலத்தின் தென் பகுதியில் இருந்த இக்கோனியா, லிஸ்திரா, தெருபை ஆகிய நகரங்களுக்குச் சென்று பலரை மனந்திருப்பினார் (திப 13:51-14:23). தம் இரண்டாம் பயணத்தின்போது இந்நகர்களுக்கு மீண்டும் சென்று வந்தபின், கலாத்தியாவின் வடபகுதிக்கு அவர் செல்ல விரும்பியும், தூய ஆவி அதற்குத் தடைவிதிக்கவே அப்பகுதியைக் கடந்து சென்றார் (திப 16:1-6). ஆனால் மூன்றாம் பயணத்தின்போது அவர் வடகலாத்தியா எங்கும் சுற்றிவந்து சீடர்களை உறுதிப்படுத்தினார் (திப 18:23).

மூன்றாம் பயணத்தின்போது தாம் நிறுவிய வடகலாத்திய சபைகளுக்கு எபேசிலிருந்து கி.பி 53-இல் பவுல் இம்மடலை வரைந்தார் என்பதே பெரும்பாலான அறிஞர்களின் கருத்து.



கிறிஸ்துவில் கொள்ளும் நம்பிக்கை வழியாகவே மானிடர் இறைவனுக்கு ஏற்புடையோர் ஆக முடியும் என்று பவுல் ஆணித்தரமாகப் போதித்து வந்தார். திருச்சட்டத்தினாலேயே மாந்தர் மீட்பு அடைய முடியும் என்று மாற்று முழக்கம் செய்துவந்த யூதக் கட்சியினரோ கலாத்தியச் சபைகளில் புகுந்து கலகம் விளைவித்தனர். பவுல் ஒரு போலித் திருத்தூதர் என்றும், அவரது போதனை போலி நற்செய்தி என்றும் கூறி, மக்களைக் குழப்பி வந்தனர். இக்கட்டத்தில் தன்னிலை விளக்கம் கொடுப்பதற்காகப் பவுல் தீட்டிய மடலே இது.

**கடித அமைப்பு**

1. முன்னுரை (1:1-10)
2. நிகழ்ச்சிப் பகுதி (1:11-2:14)
3. கோட்பாட்டுப் பகுதி (2:15-4:31)

*திருச்சட்டத்தினின்று விடுதலை*
*(பவுலின் நற்செய்தி)*

4. அறிவுரைப் பகுதி (5:1-6:10)

- உரிமை வாழ்வில் நிலைத்திருக்க எச்சரிக்கை (5:1-12)
- உரிமையை முறையாகப் பயன்படுத்த அறிவுரை (5:13-6:10)

5. முடிவுரை (6:11-18)

### 1. கிறிஸ்து மையம்

நம்பிக்கையாலேயே ஏற்புடைமை அருளப்படுகிறது என்னும் முக்கியமான கருத்தே இக்கடிதத்தின் மையப் பொருளாக அமைந்துள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர். ஆனால் கிறிஸ்து மையம் என்னும் கருத்தின் அடிப்படையில்தான் நாம் அதை முறையாகவும் முழுமையாகவும் புரிந்துகொள்ள முடியும்.

பவுல் தம் மடல்கள் எல்லாவற்றிலும் கிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுக்கிறார் என்பது உண்மை. எனினும் வேறு எந்த மடலிலும் இல்லாத அளவுக்கு இம்மடல் முழுவதும் கிறிஸ்துவைப் பற்றிய கருத்துக்கள் படர்ந்து பரவியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. பவுலுடைய கிறிஸ்துவைப் புரிந்துகொள்ள இம்மடல் பெரிதும் துணை புரியும்.

**கிறிஸ்து – பவுல் உறவு**

பவுல் விளக்கும் கிறிஸ்தியல் அவருடைய வாழ்க்கையோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டது. ஏனெனில் அவருடைய வாழ்வில் கிறிஸ்துவே சிறப்பிடம் பெற்றிருந்தார். கடிதத்தின் முதல் வசனமே இதற்குச் சான்று. தாம் உண்மையான திருத்தூதர் என்பதை எண்பிக்க விழைந்த அவர், இயேசுக் கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பெற்ற திருத்தூதர் என்று தம்மைக் கலாத்தியருக்கு அறிமுகம் செய்துகொள்கிறார். (1:1) தமஸ்கு நகர் செல்லும் பாதையில் கிறிஸ்துவைச் சந்தித்த நாள்தொட்டு (திப 9:3-6) அவருடைய வாழ்க்கை புதுத்திருப்பம் கண்டது. கிறிஸ்துவுக்கும் அவரால் தடுத்தாட் கொள்ளப்பெற்ற பவுலுக்கும் இடையே புது உறவு பிறந்தது. கிறிஸ்துமயமான, முழுவதும் கிறிஸ்து மையம் கொண்ட உறவே இது!

பவுல் எந்த அளவுக்கு ஆண்டவர் இயேசுவைத் தம்மில் பிரதிபலித்தார் என்றால் (6:17), கலாத்தியர் அவரைக் கிறிஸ்துவின் உண்மையான பிரதிநிதியாக மட்டுமல்ல, மறு கிறிஸ்துவாகவே – ஏன், கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டது போலவே – ஏற்றுக்கொண்டார்கள் (4:14). எனவேதான் கிறிஸ்துவோடு இரண்டறக் கலந்துவிட்ட நிலையில், "இனி வாழ்பவன் நான் அல்ல: கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்" (2:20) என முழங்குகிறார். இதனால் கிறிஸ்துவின் ஊழியராய் இருந்து அவருக்குத் தொண்டு செய்வதையே தமது பணியின் நோக்கமாகக் கொண்டார் (1:10) அவருடைய அடிமை அல்லது பணியாளர் என்றும் தம்மை அழைத்துக் கொள்வதில் பெருமை கண்டார் (உரோ 1:1). மனிதருக்கு அல்ல, கிறிஸ்துவுக்கே உகந்தவராய் இருக்க விரும்பினார். (1:10) பல முறை துன்புற்று (5:11) கிறிஸ்துவின் தழும்புகளையும் ஏற்றுக்கொண்டார் (6:17). அடிமையாக மட்டும் அல்ல, துன்புறும் அன்னையின் நிலைக்கும் தம்மை ஆளாக்கிக்கொண்டார்: *"என் பிள்ளைகளே, உங்களில் கிறிஸ்து உருவாகும் வரை உங்களுக்காக நான் மீண்டும் பேறுகால வேதனையுறுகிறேன்"*(4:19).

**கிறிஸ்து – கிறிஸ்தவர் உறவு**

நம்பிக்கையால் திருமுழுக்கின் வழியாகத் தம்மையே கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கும் கிறிஸ்தவரும் பவுலுடைய வாழ்வில் ஏற்பட்ட அதே உள்ளனுபவத்தைப் பெறுகிறார். கிறிஸ்துவில் புதிய படைப்பு ஆகிறார் (6:15). கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தவருக்கும் இடையே பிறக்கும் இப்புது உறவை, ஆழ்ந்த ஒன்றிப்பை விளக்குவதற்குச் சொற்கள் இன்றித் தவிக்கிறார் பவுல். எனவே ***கிறிஸ்துவில், கிறிஸ்துவோடு இணைந்து*** எனப் பல தொடர்களைத் தாமே உருவாக்குகிறார். ***கிறிஸ்துவை அணிந்து கொள்ளும்*** (3:27) போன்ற உருவகங்களையும் பயன்படுத்துகிறார்.

கிறிஸ்துவில் நம்பிக்கைகொள்ளும் மக்கள் இறைவனுக்கு ஏற்புடையோராக மாறுகிறார்கள். ஆதலின் இறை மக்கள் என்னும் தகுதியைப் பெறுகிறார்கள். (3:26) *"நீங்கள் பிள்ளைகளாய் இருப்பதால் கடவுள் தம் மகனின் ஆவியை உங்கள் உள்ளங்களுக்குள் அனுப்பியுள்ளார். அந்த ஆவி, 'அப்பா, தந்தையே' எனக் கூப்பிடுகிறது" (4:6)* திருச்சட்டத்தினாலோ விருத்தசேதனத்தினாலோ கொடுக்க முடியாத இப் புதிய நிலையினால் (3:2:5:6), மனிதர் யூதச் சட்டத்தைப் பெற்று மகிழ்கிறார்கள் (2:4). ஆதலின் இவ் உரிமை வாழ்விலே நிலைத்திருக்குமாறு பவுல் கலாத்தியருக்கு அறிவுரை வழங்குகிறார் (5:1). ஊனியல்பின் செய்திகளை விடுத்துத் தூய ஆவியின் தூண்டுதலுக்கு ஏற்ப வாழுமாறு அவர்களை வேண்டுகிறார் (5:13-25).

கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் நடுவே ஏற்படும் இப்புதிய உறவு சிதறிக்கிடக்கும் கிறிஸ்தவர்களை மிக நெருக்கமாகக் கொண்டு வருகிறது. பல வேறுபாடுகளுக்கு நடுவிலும், "கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்" (3:28) என்னும் ஐக்கிய உணர்வை வலியுறுத்தி உறவுகளை வளர்க்கிறது. அடுத்தவர் மட்டில் ஆர்வமும் சகோதர அன்பும் கொள்ளத் தூண்டுகிறது. "ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக்கொள்ளுங்கள். இவ்வாறு கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுவீர்கள்" (6:2). ஆதலின் கிறிஸ்தவர்கள், அதாவது கிறிஸ்துவின் அடிமைகள் ஒருவருக்கு ஒருவர் அன்பின் அடிமைகளாய் வாழுமாறு கலாத்தியருக்கு திருத்துாதர் பவுல் அறிவுறுத்துகிறார் (5:13).

**கிறிஸ்து: பவுலின் நற்செய்தி**

பவுலுடைய சிந்தனை, சொல், செயல் அனைத்தும் கிறிஸ்துவைச் சுற்றியே வட்டமிட்ட வண்ணமாய் இருந்தன. ஆதலின் கிறிஸ்துவைப் பற்றிப் பிறருக்கு எடுத்துக்கூறாமல் இருக்க அவரால் முடியவில்லை. எந்த மனிதரிடமிருந்தும் பெற்றுக்கொண்ட அல்லது கற்றுக்கொண்ட செய்தியை அவர் போதிக்கவில்லை. மாறாக இயேசுக் கிறிஸ்து அருளிய வெளிப்பாட்டின் வழியாகக் கிடைத்த நற்செய்தியையே அவர் போதித்து வந்தார் (1:12-16). அவருடைய வாழ்க்கை எவ்வாறு கிறிஸ்து மயம் ஆகியிருந்ததோ, அதேபோன்று அவருடைய போதனையும் கிறிஸ்து மயம் ஆகியிருந்தது. அதை 'என்னுடைய நற்செய்தி' என அவர் அழைத்துக்கொண்டபோதிலும், கலாத்தியர் கண் முன்னால் கிறிஸ்துவையே படம்பிடித்துக் காட்டினார் (3:1). கிறிஸ்துவின் பணி பற்றி குறிப்பாக சிலுவையின் பொருள் பற்றி இம்மடலில் பல குறிப்புக்கள் உள்ளன. வழக்கமான வாழ்த்தானது (1:3-5) கிறிஸ்துவினுடைய வருகையின் பொருளை விளக்கும் கோட்பாடாக விரிகிறது.

திருச்சட்டத்திற்குக் கீழ்ப்பட்டிருந்தவர்களை மீட்டுக்கொள்வதற்காக, கிறிஸ்து திருச்சட்டத்திற்குக் கீழ்ப்பட்டவராகப் பிறந்தார் (4:4) என்று கூறிய பவுல், "நமக்காகக் கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மைச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக்கொண்டார்" (3:13) என்கிறார். இதன் மூலம் கிறிஸ்து எவ்வளவு தூரம் பாவ மனிதரோடு தம்மையே ஒன்றுபடுத்திக் கொண்டார் என்பது சொல்லாமலே விளங்கும். இவ்வாறு கிறிஸ்துவினுடைய மீட்புப் பணியின் பல கூறுகளையும் கிறிஸ்தியலின் சில முக்கியமான கோட்பாடுகளையும் கோடிட்டுக் காட்டுகிறார். இவையே பவுலுடைய போதனையின் முதலும் முடிவுமாகத் துலங்கின: ஏனைய அனைத்தும் இரண்டாவது இடத்தையே பெற்றன.

*(அடுத்த இதழிலும் தொடரும்)*

---



### மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில்

# இளைஞர்களுக்கான கருத்தமர்வுகள்

### நான்கு பங்குகளில் 200றக்கும் அதிகமான இளைஞர்கள் பங்கேற்றனர்



மன்னார் மறைமாவட்ட இளைஞர் - களுக்கான கருத்தமர்வுகள் கடந்த மாதங்களில் பல்வேறு இடங்களில் நடாத்தப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் 19ம் திகதி தாழ்வுபாடுப் பங்கு இளைஞர்களுக்கு தாழ்வுபாட்டு ஆலய வளாகத்திலும், மே மாதம் 02ந் திகதி வவுனியா மாவட்டத்தின் இலுப்பைக்குளம் ஆலய மண்டபத்திலும், 30ந் திகதி அளவக்கைப் பங்கு இளைஞர்களுக்கு அளவக்கை ஆலய வளாகத்திலும் 31ம் திகதி வங்காலைப் பங்கு இளைஞர்களுக்கு வங்காலை ஆலய மண்டபத்திலும் இடம்பெற்றன.

தாழ்வுபாடு மற்றும் வங்காலையில் இடம்பெற்ற கருத்தமர்வின் வளவாளர்களாக திருக்குடும்ப கன்னியர் சபையின் அருட்சகோதரி கிறிஸ்ரபெல் அவர்களும் அவரது பணியாளர்களும், இலுப்பைக்குளத்தில் வவுனியா கல்வியற் கல்லூரியின் இளைப்பாறிய துணைப் பீடாதிபதி திருவாளர் இன்ப தேவறாஜா அவர்களும் அளவக்கைப்பங்கில் அருட்பணி. மரிய செபஸ்ரியான் (அமதி) அடிகளாரும் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு இடங்களிலும் இக்கருத்தமர்வுகள் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை இடம்பெற்றன. வெவ்வேறு தலைப்புக்களில் இடம்பெற்ற இக்கருத்தமர்வுகள் இளைஞர்களின் உள்ளங்களைத் தொடக்கூடிய வகையிலும் அவர்களைச் சிந்திக்கத் தூண்டுபவைகளாகவும் அமைந்தன. தாழ்வு பாட்டில் இடம்பெற்ற கருத்தமர்வு ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் தம்மில் புதைந்து கிடக்கும் திறமைகளை இனம்கண்டு அவைகளை வெளிக்கொணர்ந்து தமது அன்றாட வாழ்வில் பயன்படுத்தி நற்பிரஜைகளாகவும் சமுதாயத்தில் தலைவர்களாகவும் மிளிரவேண்டுமென்ற வகையில் இடம்பெற்றது. பதுங்கி, ஒதுங்கி, பயந்து, ஒழிந்து வாழ்வதை விடுத்து முற்போக்கு எண்ணங்களை சிரமேற்கொண்டு முன்வர வேண்டுமென்ற பாங்கில் உரைகள், கலந்துரையாடல்கள், விளையாட்டுக்கள் போன்றவை இடம்பெற்றன.

இலுப்பைக்குளத்தில் இடம்பெற்ற கருத்தமர் வானது இன்றைய இளைஞர் சமுதாயம் எதிர் நோக்கும் சவால்கள் பற்றியும் அச்சவால்களை மேற்கொண்டு நல்லதொரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் நோக்கோடு செயற்படும் வழிமுறைகள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது.

அளவக்கையில் இடம்பெற்ற கருத்தமர்வில் இளைஞர் தமது இளமைப் பருவத்தின் மகத்து - வத்தை நன்குணர்ந்து அதை நேரிய வழியில் வழிப்படுத்தி ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிசமைக்க வேண்டுமென்ற வகையில் உரைகளும் குழு அமர்வுகளும் மற்றும் விளையாட்டுக்களும் இடம்பெற்றன. வங்காலையில் இடம்பெற்ற கருத்தமர்வும் இதே வகையிலேயே நடைபெற்றது.

தாழ்வுபாட்டில் 102 பேரும், இலுப்பைக் - குளத்தில் 27 பேரும் அளவக்கையில் 32 பேரும், வங்காலையில் 55 பேரும் பங்கெடுத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நான்கு நிகழ்வுகளிலும் பங்கெடுத்தோர் பல நன்மைகளைத் தாம் பெற்றுக்கொண்டதாகவும் தமது எதிர்காலத்தை நல்வழியில் கட்டியெழுப்ப இக்கருத்தமர்வுகளுடாகத் தாம் பெற்றுக் கொண்டவைகள் நிச்சயம் நிறைந்த பயனளிக்கும் என தமது மீளாய்வு அறிக்கைகளினூடாகத் தெரியப்படுத்தியிருந்தனர்.

இந்த நான்கு கருத்தமர்வுகளும் மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்திரு பி. ஜேசுறாஜா அவர்களினால் மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் நிர்வாக உறுப்பினர்களது உதவியுடன் நெறிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத் -தக்கது.

இந்நிகழ்வுகள் யாவும் நல்ல வகையில் அமைய முன்னின்று உழைத்த தாழ்வுபாட்டுப் பங்குத்தந்தை அருட்திரு. செ. ஸ்ரீபன், இலுப்பைக்குளம் பங்குத்தந்தை அருட்திரு. பி. அருள்நாதன், அளவக்கைப் பங்குத்தந்தை அருட்திரு. ஆரோக்கியம், வங்காலைப் பங்குத் தந்தையர்களான அருட்திரு. சூ. ஜெயபாலன் குரூஸ், அருட்திரு அ. லக்ஸ்ரன் சில்வா மற்றும் அந்தந்தப் பங்கு இளைஞர் ஒன்றிய நிர்வாக உறுப்பினர்கள் பாராட்டப்படுவதோடு வளவாளர்கள், கருத்தமர்வுகளில் பங்கெடுத் - தோருக்கு உணவு வழங்கிய பங்கு மக்கள் யாவரும் பாராட்டுக்குரியவர்கள்.

---


## அன்னை திரேசாவின் பரிந்துரைக்காக நன்றி



நான் முத்திப்பேறுபெற்ற அன்னை திரேசாவிடம் கேட்ட மன்றாட்டு கிடைக்கப்பெற்றமைக்காக என் மனமார்ந்த நன்றியை அன்னை அவர்களுக்குத் தெரிவிக்கின்றேன். அன்னை திரேசாவின் பரிந்துரை மூலம் இறைவன் அருளிய நன்மைகளுக்காக அவருக்கு மகிமையும், துதியும், கனமும் செலுத்துகிறேன்.

நீங்களும் அன்னை திரேசா ஊடாக இனைவனிடம் செபியுங்கள். அன்னை திரேசாவின் பரிந்துரை வழியாக இறைவன் உங்கள் தேவைகளையும் நிறைவுசெய்வார். இறைவனுக்கே நன்றி! - **ஓர் பக்தன்.**


(இது கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்)



# சிறுவர் பொழில்



## அப்பா எங்கே..?



அ. வேளாங்கன்னி றோஸ்
பொன்தீவுகண்டல்,
முருங்கன்

"ச்சே.... இரண்டு மணியாச்சி, தூக்கமும் வரல்லையே ... ம்.... பெடியனின் நடவடிக்கையும் சரியில்ல, பிள்ளையும் சொற் பேச்சு கேக்கிற மாதிரி இல்ல, கடவுளே.... நீதான் காக்கணும்" கலங்கினார் சந்தானந்தம். அன்று இரவு தூக்கத்திற்கும் அவரின் விழிக்கும் நீண்ட இடைவெளி கொடுக்கப்பட்டது. காரணம் தனது ஒரே மகளின் எதிர்கால வாழ்க்கை நிலைகுறித்து அவர் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார்.

சிறுவயதிலேயே தன் தாயை இழந்த சௌமியா, தந்தையின் அரவணைப்பில் வளர்ந்தாள். தந்தை கூலிவேலை செய்து மகளைப் படிப்பித்தார். சௌமியா நன்றாகப் படிப்பவள். சாதாரணதர தரத்தில் சித்தி எய்தி, உயர்தரம் படித்துக் கொண்டிருந்தாள். படிப்பில் மட்டுமல்ல ஏனைய துறைகளிலும் மிகுந்த ஆற்றலும், நல்லொழுக்கமும் கொண்டவள். பாடசாலையில் சிறந்த மாணவியாகவும், வீட்டில் சிறந்த பிள்ளையாகவும், நண்பர்களுக்கு சிறந்த நண்பியாகவும் அவள் திகழ்ந்தாள். பார்ப்பதற்கு மிகுந்த எழில் கொண்டவள். இனிமையாகப் பேசுவாள். சௌமியாவின் நண்பர்கள் அவளின் பேச்சுக்கு இசைந்து செயற்படுவார்கள். இவ்வாறு பாடசாலை நாட்கள் உருண்டோடிக்கொண்டிருந்தது.

வாலிப வயது யாரைத்தான் விட்டுவைக்கும். காலப்போக்கில் சௌமியாவும் காதல் வலையில் சிக்கினாள். தனது வகுப்பில் நண்பனாகப் பழகிய வினோத் காலம் செல்லச் செல்ல அவளின் காதலன் ஆனான். இதை அறிந்த தந்தை தன் மகளிடம், "இங்க பாரு சௌமி, இப்ப படிக்கிற வயசில உனக்கு காதல் கீதல் ஒன்றும் வேணாம்மா. நாம ஏழைக் குடும்பம். நீ நல்லாப் படிச்சு பட்டம் பெறணும். பிறகு, அப்பா ஒரு நல்ல பையனா உனக்கு கலியாணம் பண்ணி வைப்பேன். நீ நல்லா இருக்கணும் இதுதான் என் கனவு" என்று குழைந்து மொழிந்தார்.

"சரி இனித் தொடங்கினா முடியாது இந்தப் பல்லவி.... இங்க வந்தா அப்பாவோட தொல்ல, எங்காவது போய் செத்து தொலைஞ்சிடனும் ச்சே..." என்று பொரிந்து தள்ளினாள். தந்தை அதிர்ந்து போனார்.

"எனக்குக் கலியாணம், கத்தரிக்காய் என்று எதுவும் நீங்க பார்க்க வேண்டாம்" என்று முழங்கினாள். தந்தை ஒடுங்கிப்போனார். தனது ஒரே மகள் அதுவும் தாயின்றி வளர்ந்தவள் என்பதால் தந்தை அதிகமாகவே செல்லமாக வளர்த்தார். நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் ஒரு வருடமாகியது. சௌமியின் பாடசாலை வாழ்வு முடிந்தது.

தந்தை கூறியது அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராகின. தந்தையின் சொல் மீறிய சௌமியா இல்லற பந்தத்தில் இறங்கினாள். பழகிய பாசத்தில் பருவக் காதல் இருவரின் அகக் கண்களையும் மறைத்தது. வினோத்தும், சௌமியாவும் தாங்களாகவே தம்பதிகளானார்கள். இல்லற வாழ்வில் இன்பமாகக் கழித்தனர். சௌமியாவோ ஒரு பெண் பிள்ளைக்குத் தாயானாள். தான் ஒரு பிள்ளைக்குத் தந்தை என்பதையும் நினைக்காது பல தீய நண்பர்களோடு சேர்ந்து வினோத் குடிப்பழக்கத்திற்கு அடிமையானான். சூது, போதை, அரட்டை என்று காலம் கடந்தது. இல்லறம் வறுமைக்கோட்டை எட்டியது. இவற்றை 'விதியே' என்று அனுபவித்துக்கொண்டு சிந்தித்தவண்ணம் வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தாள் சௌமியா. தன் எதிரில் மது மயக்கத்தில் வந்து நின்ற கணவனைக் கண்டு கண்ணீராய்ச் சொரிந்தாள்.

"என்னடி .... ஏன்? நான் சாகணுமா? அல்லது செத்திட்டனா? என்று கூறிய கணவனின் காலில் விழுந்து, "குடிபோதையால் மாறிவிட்டீர்கள்" என்றுதான் அழுதேன்" என்று மூச்சுத் திணறக் கூறிமுடித்தாள். "என்னடி எதிர்த்துப் பேசுறா? வாய் நீண்டு போச்சு" என்று ஓங்கி ஓர் அறை கொடுத்தான். புழுவாய்த் துடித்தாள் சௌமியா. ஒன்றுக்குமே வழியில்லாம இருந்தாயே எண்டு உன்னப் போய் கலியாணம் பண்ணினேனே..." என்று மீண்டும் ஓங்கி அறைந்தான். அவள் துடியாய்த் துடித்தாள்.

அப்போதுதான் தந்தை சொன்னது நினைவுக்கு வந்தது. "அப்பா... அப்பா.. என்று ஏங்கி அழுதாள். "எங்கே அப்பா..?" அவர்தான் மகளின் பிரிவுத்துயர் தாங்காமல் மாரடைப்பு நோயினால் இறந்து நீங்காத துயில் கொள்கிறாரே!

## மௌனம் காப்பது நல்லது

ஆர். எஸ். சேவியர் - கனடா

➢ பிறர் என்ன செய்கின்றனர் அல்லது செய்யவில்லை என்பதை மதிப்பிடுவதில் உனது நேரத்தைக் கழிக்காது உன் மன அழுக்கினைப் போக்கி தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபடுவது சிறந்தது.

➢ வாழ்வில் உண்டாகும் துன்பங்களைக் கண்டு கலங்காதீர்கள். நம் துன்பங்களைப் போக்கி அனைத்தையும் சீராக்கும் பெரிய சக்தியாகிய ஆண்டவனிடம் நம்பிக்கை வையுங்கள். இறைவன் ஒருபோதும் நம்மைக் கைவிடுவதில்லை.

➢ மௌனம் காப்பது மிகவும் நல்லது. பேச்சுக் கொடுத்தால் பத்தில் ஒன்பது முறை நம் அறியாமையை வெளிப்படுத்துகிறோம். ஆனால் மௌனத்தில் தீங்கு சிறிதும் கிடையாது.

➢ ஒருவன் தன்னைத்தான் ஆழக் கற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நம் துன்பங்களையும் வேதனைகளையும் போக்க முடியாது. தன்னை அறிந்த ஒருவனால் மட்டுமே பிறருக்கு வழிகாட்ட முடியும். "உன்னையே நீ அறிவாய்" என்பது ஓர் அறிஞரின் கூற்று.

➢ பயத்தை விட்டொழியுங்கள். அச்சம் கேட்டை விளைவிக்கும். அச்சமற்றவனுக்கே வெற்றியை எட்டிப்பிடிக்கும் ஆற்றல் உண்டாகும். "அச்சம் என்பது மடமையடா அஞ்சாமை திராவிடர் உடமையடா" என்ற சினிமாப் பாடலையும் நினைவுகூருவது நல்லது.

## வாழ்வை உயர்த்தும் சிந்தனைகள்



☸ நம்முடைய இலட்சியம் என்ன என்பதை மனதில் நன்றாகப் பதிய வைத்துக்கொண்டால் நமது அறிவு அதை அடைய உதவியாக இருக்கும்.

☸ சாதாரண மனிதனையும் சாதனை மனிதராக்க இலக்கு அவசியம். குறிவைக்கப்பட்ட இடத்தைத் தாக்கும் தொழில்நுட்பம் ஏவுகணையில் இருக்கிறது.

☸ இலட்சியத்தை அடைவதற்கு கட்டுப்பாடும் ஒழுக்கமும் அவசியம். ஓடுகின்ற நதிக்கு யாரும் வழிகாட்டுவதில்லை. தன்னுடைய வழியை நதி தானே அறிகிறது!

☸ ஆற்றலைக் காட்டிலும் ஆர்வமே வெற்றிக்குக் காரணம்.

- சு. நியூஜினி (றெனி - கன்னாட்டி, அடம்பன்)

## சிரிப்பு (பூ)க்கள்

**முதலாளி:** ராமு, ஏன் இன்று தோட்டத்துக்கு நீ தண்ணி ஊத்தவில்லை?
**ராமு:** மழைபெய்ததால் தண்ணி ஊத்தவில்லை ஐயா!
**முதலாளி:** மழை பெய்தால் குடை பிடித்துக்கொண்டு ஊற்றலாம் தானே ..!

♣ ♣ ♣ ♣ ♣ ♣

**ஆசிரியர்:** "கற்கக் கசடற கற்பவை கற்றபின் ..." இத் திருக்குறளின் மிகுதியைச் சொல்லுங்கள்?
**மாணவன்:** கற்றபின் கொப்பிகளைக் கடலைகாரனுக்கு விற்க அதற்குத் தகுந்த விலையில்!
**ஆசிரியர்:**.....?............!.............?..............!

♣ ♣ ♣ ♣ ♣ ♣

**ஒருவர்:-** ஏன் உனது தலை வீங்கியிருக்கு?
**மற்றவர்:-** எனது மனைவி கையிலிருந்த உலக்கையால் "உங்களுக்கு இனி அடிக்கமாட்டேன்" என்று கூறி சத்தியம் செய்தாள். அதுதான் ..... !

♣ ♣ ♣ ♣ ♣ ♣

**நீதிபதி:-** நீ ஏன் பொலிஸ் வீட்டில் இரண்டு தடவை திருடினாய்?
**கள்ளன்:-** நான் முதல் தடவை திருடிவிட்டு வாசலில் வந்த பார்த்தபோது, "நன்றி மீண்டும் வருக" என எழுதியிருந்தது அதனால்தான் மறுபடியும் திருடினேன்.

*- ம. டிசாளினி - தாஸ்கோட்டம், நெளுக்குளம், வவுனியா*

**நீதிபதி:-** நீ ஏன் சுவரேறிக் குதித்து திருடினாய்?
**திருடன்:-** அவங்களுடைய பூட்டு புதுசா பளபளன்று இருந்திச்சு அத உடைக்க மனசு வரலேங்க.

*- ம. திருசாளினி - தாஸ்கோட்டம், வவுனியா*

### கடி ஜோக்ஸ்

- ஒருவருக்கு எண்பத்தெட்டு வயதாகிவிட்டது. அவருக்கு ஒரு நரையும் இல்லை ஏன்? அவருக்கு மண்டையில் வழுக்கை!

.................................

- ஒரு குடைக்குள் 8 பேர் போனார்கள் நனையவில்லை. ஏன்? மழை பெய்யவில்லை. அதனால்தான்!

*- எஸ். அஸ்வின், தரம் 6D, ப. க.கொட்டு மேற்கு, மன்னார்*

**வெற்றி**

☞ வெற்றி தொட்டுவிடும் தூரம்தான்.
முயன்றால் இமயமும் இடுப்பளவுதான்.
☞ முடியாது என்பது மூடத்தனம்.
☞ முயுமா என்பது அவநம்பிக்கை.
☞ முடியும் என்பதே தன்னம்பிக்கை.
☞ தோழா நிலவைப் பிடிக்க முயன்றால்
இமயமும் இடுப்பளவுதான், தொட்டுவிடு!

*ஜெ. ஜெயரூபிணி - இல. 161, மடுக்கரை, நானாட்டான்.*

# கவிதைப் பூக்கள்

## சமாதானமே நீ வரவேண்டும்



வன்னியில் நடக்கும் அவலங்கள் நீங்கி
எம் மக்கள் நிம்மதியாக வாழ்ந்திடவும்
யுத்தங்கள் அனைத்தும் நீங்கிடவும்
சமாதானமே நீ வர வேண்டும்.

போரினாலே அங்கங்களை இழந்து
உறவுகளை இழந்து, சொந்தங்களை இழந்து
தனிமையிலே வாடிநிற்கும் உள்ளங்களுக்கு
சமாதானமே நீ வரவேண்டும்



கல்வியை இழந்து வாடி நிற்கும்
சின்னஞ் சிறுவர்கள் அனைவருக்கும்
அமைதியைக் கொடுத்திட
சமாதானமே நீ வரவேண்டும்

வன்னியில் அகதிகளாக அங்கலாய்க்கும்
எம் சகோதர சகோதரிகளுக்கும்
உண்பதற்கு உணவின்றியும்
குடிப்பதற்கு நீரின்றியும் வாடும்
மக்களுக்கும் சமாதானமே நீ வரவேண்டும்.

*- பி. ஜெயறூபி வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை*

## சர்வதேசமே!



சர்வதேசமே திரும்பிப் பார்
எம் மக்கள் அனுபவிக்கும் அவலத்தை
உன் ஊனக்கண்களால் உற்றுப்பார்.
பேரினவாதிகளின் குண்டு வீச்சில்
எம் மக்களின் உடல்கள் சிதறுவதையும்
பச்சிளம் குழந்தைகள் துடிப்பதையும்
கருவில் இருக்கும் எம் நாளைய சந்ததி
அழிக்கப்படுவதையும் உற்றுப்பார்.
எம் மக்களின் ஓலக் குரலை
உன் காதால் உற்றுக் கேள்.
யுத்தத்தால் பலியானவர்கள் வியட்நாமில்
பசியால் பலியானவர்கள் சோமாலியாவில்
இவை இரண்டாலும் பலியாகும் எம்
தமிழ் மக்களுக்கும் எம் ஈழத்துக்கும்
ஒரு சுதந்திர விடியலைத் தா சர்வதேசமே!

*- கெ. மொறின் மியேல் - பெரியபண்டிவிரிச்சான், மடு*

## வேண்டாம் இனி யுத்தம்



இடியோசை கேட்ட காதுகளில் - நிதம்
கேட்பதெல்லாம் வெடியோசைகளே!
மழையருவி பாய்ந்த மண்ணில் - இப்போ
இரத்த அருவி பாய்கின்றது.
நெல் விளைந்த இடங்களெல்லாம் - இப்போ
சுடுகாடாக மாறுகின்றனவே
ஏன் இந்த மாற்றம்? ஏன் இந்தக் கொடுமைகள்?
வேண்டாம் இனி இந்த யுத்தம்
நாம் மகிழ்வாய் வாழ்ந்திட நித்தம்

*- அ. சுதர்சினி, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை*

## அகதி வாழ்க்கை



அகதி வாழ்க்கை ஓய்ந்திடவும்
அழுகுரல்கள் நீங்கிடவும்
பசி பட்டினி போக்கிடவும் - எம்
பாராபரன் இயேசுவின் சமாதானம்!

எம்மைப் போன்ற சிறார்களெல்லாம்
உறவுகளை இழந்து தவிக்கின்றார்களே
பத்து மாதம் சுமந்த அன்னையை இழந்து
தனிமையில் தவிக்கும் சிறார்களுக்கு
எம் பாராபரன் இயேசுவின் சமாதானம்!

*பி. ஜெயறூபி, வாழ்க்கைப்பெற்றான்கண்டல், அளவக்கை*

## சிறப்பு ஆசி அருள்வீரே!



சின்னச் சின்ன ஆசையை
சிறுவர் நாமும் சொல்கின்றோம்
சின்ன இயேசு ராஜாவே
சிரித்து அதை நீர் ஏற்பீரே!

சிகரம் தொடும் ஆசையை
சிறிதும் மனம் ஏற்காமல்
சின்ன இயேசு நின்பாதமே
சிறிய மலராய் வருகின்றோம்.



சிரிப்பு முகம் மாறாமல்
சினத்தை நீரும் காட்டாமல்
சிறப்பாய் எம்மை மாற்றிடவே
சிறியோர் எம்மவர் ஆசையாகும்.

சிறுகை நீட்டி உமை அழைக்கும்
சிட்டுக்குருவியாய் எம் சிறுவர்
சிறகை விரித்து செயற்படவே
சிறப்பு ஆசி அருள்வீரே!

*- கி. ஜெக்குலின் விதுனா, கோவில் வீதி, உயிலங்குளம்*

# 50வது யூபிலி விழாக் காணும் அருட்பணி. ச.யோ. பிரான்சிஸ் (அ.ம.தி.)

– யாளவன் –

யாழ் வலிகாமம் வடக்குப் பிரிவின் கடல்வளமும், நிலவளமும் ஒருங்கே அமைந்த புராதன கிராமங்களில் மாதகலும் முக்கியத்துவம் பெறுகின்றது. இங்கே கிறிஸ்தவமும், சைவமும் செழிந்தோங்கி வளர்ந்து வருவதுடன், சிறந்த பண்பாடுகளுடன்கூடிய ஓர் உயரிய சமூக அமைப்பாகவும் இக்கிராமம் திகழ்கின்றது.

மாதகலில் கிறிஸ்தவர்கள் செழிப்பாக வாழும் பகுதியின் மத்தியில் புனித தோமையாரின் அழகிய ஆலயம் கெம்பீரமாக எழுந்து நிற்பது இக்கிராமத்துக்குரிய தனிச்சிறப்பாகும். இவ்வாலய நிழலில் வாழ்ந்துவந்த பழம்பெரும் கிறிஸ்தவர்களான யோசேப்பு யோகத்தம்மாள் தம்பதியரின் ஏக புதல்வனான அருட்திரு ச. யோ. பிரான்சிஸ் அடிகளார் மரியன்னைமீது கொண்ட பக்தியின் காரணமாக தன்னை அமல மரித்தியாகிகள் சபையில் அர்ப்பணித்துக் கொண்டார். தமது குருத்துவ வாழ்வில் இறைவனுக்கான நீண்ட பணிகளைத் தொடர்ந்த இவர் தமது 50 ஆண்டுகள் நிறைவின் யூபிலி விழாவினை கடந்த 13.06.2009 அன்று புனித அந்தோனியாரின் புனித நாளில் கொண்டாடி மகிழ்ந்தார்.

இவரது யூபிலி விழா நீர்கொழும்பு கொச்சிக்கடை செபமாலைத்தாசர் சபைச் சிற்றாலயத்தில் சிறப்பிக்கப்பட்டது. இவ்விழாவிற்கு வருகை தந்த யூபிலி நாயகரையும், ஏனைய் குருக்களையும், அருட்சகோதரிகளையும் அங்கு வருகை தந்திருந்த பெருமக்கள் மாலை அணிவித்து, ஆராத்தி எடுத்து, திருப்பீடத்திற்கு அழைத்துச் சென்றனர். நன்றித் திருப்பலியினை விழா நாயகருடன் சகோதரக் குருக்களும், புடைசூழ நின்று ஒப்புக்கொடுத்தமை கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது. இங்கு மறையுரை ஆற்றிய பொன்விழா நாயகர் "உன் பிடிகளைத் தளர்த்திவிடு, உன்னில் அவரே செயற்பட விட்டுவிடு." என்னும் கருப்பொருளின் ஆழமான தத்துவங்களை எடுத்து இயம்பியமை கூடியிருந்த அனைவரது உள்ளங்களையும் வெகுவாகத் தொட்டது.

திருப்பலி முடிவில் யூபிலி நாயகர் அவர்கள் ஆலய முன்றலில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து செபமாலைத் தாசர் சபைத் தலைவர் அருட்திரு எ. ஸ்ரீபன் அடிகளார் விழா நாயகர் அவர்களின் குருத்துவ வாழ்வின் சிறப்புப் பணிகளையும், ஆன்மீக வாழ்வு பற்றியும் விரிவாக எடுத்துரைத்ததுடன் சமூகமளித்த அனைவரது சார்பிலும் யூபிலி நாயகருக்கு பொன்விழா நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார்.



24.09.1993ல் பிறந்த ச.யோ.பிரான்சிஸ் அடிகளார் தமது ஆரம்பக் கல்வியை மாதகல் புனித தோமையார் பாடசாலையிலும், புனித சூசையப்பர் பாடசாலையிலும், யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்று முடித்தார். சிறுவயதிலேயே குருத்துவ அழைப்பினால் உந்தப்பட்ட இவர், யாழ் புனித மாட்டின் குருமடத்தில் இணைந்துகொண்டார். அமலமரிதியாகிகள் சபையில் தன்னை அர்ப்பணிக்கத் திட்டமிட்ட இவர் ஆரம்ப குருத்துவக் கல்வியை களுத்துறை, நுகேகொடை ஆகிய இடங்களில் உள்ள கல்லூரிகளில் தொடர்ந்தார். ஈற்றில் கண்டி அம்பிட்டியா தேசிய குருத்துவக் கல்லூரியில் குருத்துவ உயர் கல்வியைக் கற்று முடித்தார். தொடர்ந்து 13.06.1959 திகதி கண்டி தேசிய குருத்துவக்கல்லூரி ஆலயத்தில் முன்னாள் ஆயர் பேரருட்திரு. ரெஞ்யோ ஆண்டகையால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் தனது முதற் திருப்பலியை மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் ஒப்புக்கொடுத்தார்.

குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட பிரான்சிஸ் அடிகளார் தமது பணிகளை யாழ் மறை மாவட்டத்தில் ஊர்காவற்றுறை, பண்டத்தரிப்பு, சேந்தான்குளம், வதிரி, கரவெட்டி, அச்சுவேலி, குருநகர் பங்குகளிலும் மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார், விடத்தல்தீவுப் பங்குகளிலும் மேற்கொண்டார்.

ஆன்மீகத் துறையில் அதிக ஈடுபாடு கொண்ட இவர், அருங்கொடைகள் இயக்கத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் சிறிது காலம் இந்தியாவிலும் பணியாற்றியுள்ளார். மேலும் இவரது பணிவாழ்வு சிறந்து விளங்க விழா நாயகரை வாழ்த்தி இறைவனை வேண்டுவோம்.

*மாதகல் மண்ணின் குருமணியே வாழ்க!*
*அமல்மரித் தாயவளின் தவத்திருவே வாழ்க!*
*தோமையார் பெருமைசேர் நற்குருவே வாழ்க!*
*யோசேப்பு, யோகத்தாள் மனநிறைவே வாழ்க!*
*யூபிலி விழாக்காணும் அருள் நிறைவே வாழ்க!*

# பிரான்ஸ் நாட்டுச் செய்திகள்

தொகுத்துத் தருபவர் :
திரு. என். எம். ஜெயரெட்ணம், மன்னா தொடர்பாளர், பிரான்ஸ்

## கலைஞர் குழந்தை அவர்களுக்கு பாராட்டு விழா

மன்னார் மாவட்டத்தில் "குழந்தை மாஸ்டர்" என்று அழைக்கப்படும் கலைஞர் குழந்தை (திரு. செ. செபமாலை) அவர்கள் மன்னாரில் ஆற்றிய கலைச்சேவையை அனைவரும் அறிவர். இவர் தற்போது பிரான்ஸ் நாட்டிற்கு தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டுள்ள நிலையில் பிரான்ஸ் நாட்டில் இயங்கும் 'மன்னார் மாவட்ட அபிவிருத்தி அமைப்பு' இவரைக் கௌரவிக்கும் நடவடிக்கையை முன்னெடுத்தது.

கடந்த 2009 யூன் மாதம் 28ம் திகதி பிரான்ஸ் நாட்டில் உள்ள அனைத்து மன்னார் மாவட்ட மக்களும் ஒன்றிணைந்து குழந்தை மாஸ்ரரின் கலைச் சேவையைக் கௌரவிக்கும் முகமாக பாராட்டு விழா ஒன்றை நடாத்தினர். இவ்விழாவில் கலைஞரைப் பாராட்டி வாழ்த்து மடல் வாசிக்கப்பட்டு பொன்னாடையும் போர்த்தப்பட்டது.

இவ் அமைப்பின் தலைவர் திரு. றொனி சந்தாம்பிள்ளை அவர்கள் கலைஞருக்கு பொன்னாடை போர்த்தினார். இவ்வைபவத்தில் பிற மாவட்ட மக்களும் கலந்து சிறப்பித்துப் பாராட்டுக் கூறினார்கள்.

மன்னார் மாவட்ட அபிவிருத்தி அமைப்பானது மன்னார் 'வாழ்வுதயம்' அமைப்பின் மூலம் மன்னாரில் பல்கலைக்கழகம் சென்று படிக்க வசதியற்ற 25 மாணவர்களைத் தெரிவுசெய்து அவர்களின் கல்வி அபிவிருத்திக்கென ஒரு தொகைப் பணத்தை மாதா மாதம் வாழ்வுதயம் மூலம் வழங்கி வருகின்றது. இதுபோன்ற மேலும் பல திட்டங்களைச் செயல்படுத்த பிரான்சில் உள்ள அனைத்து மன்னார் மக்களும் இவ்வமைப்பில் இணையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

## வருடாந்த லூர்து திருத்தலத் திருயாத்திரை – 2009

பிரான்ஸ் நாட்டில் உள்ள உலகப் பிரசித்திபெற்ற யாத்திரைத் தலமான லூர்து திருத்தலத்திற்கு ஒவ்வொரு வருடமும் தமிழ் மக்கள் திருயாத்திரை மேற்கொள்வார்கள். உலகெங்குமுள்ள தமிழ் மக்களுக்கான திருயாத்திரை இவ்வருடம் ஆவணி மாதம் 6ம் திகதி தொடக்கம் 10ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பிரான்ஸ் இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் இந்த யாத்திரைக்கான சகல ஏற்பாடுகளையும் செய்துவருகின்றது. அன்றைய திருயாத்திரைக்கு லண்டன், ஜேர்மனி, நோர்வே, இத்தாலி, டென்மார்க் போன்ற நாடுகளில் இருந்தும் தமிழ் மக்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.

8ம் திகதி சனி காலை லூர்து அன்னை காட்சி கொடுத்த கெபியில் தமிழ் மொழியில் சிறப்புத் திருப்பலி இடம்பெறும்.

9ம் திகதி ஞாயிறு 20க்கும் மேற்பட்ட ஆயர்கள், நூற்றுக்கும் அதிகமான அருட்பணியாளர்கள் கலந்து சிறப்பிக்கும் பன்னாட்டுமொழித் திருப்பலியில் தமிழ் மொழியிலும் சில வழிபாடுகள் நடாத்தப்படும்.

இத்திருப்பலியில் எம் தாய் நாட்டில் நீதியுடன் கூடிய சமாதானமும் சுபீட்சமும் கிடைக்க விசேடமாக மன்றாடப்படும். எனவே அனைத்து மக்களையும் இதில் பங்குபற்றி லூர்து அன்னையிடம் விசேடமாக மன்றாடும்படி அறியத்தருகின்றோம்.


## அருட்பணியாளர்களுக்கான நன்றி நவிலலும் வரவேற்பும்

கடந்த ஆறு வருட காலமாக பிரான்ஸ் - இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியக இயக்குனராகப் பணிபுரிந்த அருட்பணி. ஏ. அமலதாஸ் அடிகளார் தனது பணிக்காலம் முடிவடைந்து தாய்நாட்டிற்குத் திரும்பவுள்ளார்.

அதே சமயம் புதிய இயக்குனர் பதவியைப் பொறுப்பேற்க அருட்பணி. லீனஸ் சொய்சா அடிகளார் பிரான்ஸ் நாட்டிற்கு வருகை தந்துள்ளார். எனவே இவர்களுக்கான நன்றி நவிலல் - வரவேற்பு விழா 2009 ஆவணி மாதம் 22ம் திகதி சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடாத்தப்படவுள்ளது. பணியகத்தின் மத்திய சபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது. அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு நன்றி நவிலல் திருப்பலியும், பணி ஏப்பு வைபவமும் நடைபெறும். பாரிஸ் GONCOURT புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலியும், பின்னர் ஆலய மண்டபத்தில் பாராட்டு வைபவமும், வரவேற்பும் மிகவும் எளிமையான முறையில் (தாயக மக்களின் துயரை மனதில்கொண்டு) நடாத்த பணியகத்தின் மத்திய சபை ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது. இதில் பிரான்ஸ் வாழ் தமிழ் மக்கள் பெருமளவில் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அறிந்துகொள்வோம்

## செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆரம்பம் என்ன?



சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் பிறந்த என்றி டுனன்ட் என்பவர் பெரிய பணக்கார வியாபாரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் 1859ம் ஆண்டு யூன் மாதத்தில், அப்போது இத்தாலியில் இருந்த பிரெஞ்ச் பேரரசர் மூன்றாம் நெப்போலியனை, அவரது அல்ஜீரிய வியாபார விடயமாக சந்திக்கச் சென்றார். யூன் 24ம் திகதி மாலை சோல்∴பெரினோ என்ற சிறிய நகரை அவர் அடைந்தபோது அங்கே ஆஸ்ட்ரிய – சர்தீனிய போரைப் பார்த்தார்.

ஒரே நாளில் ஏறத்தாள நாற்பதாயிரம் படைவீரர்கள் இரண்டு தரப்பிலும் இறந்தனர், மற்றும் காயமடைந்தனர். பேரரசரைச் சந்திக்கச் சென்ற நோக்கத்தையே மறந்து போரில் காயமடைந்தவர்களுக்கு உதவி செய்யத் தொடங்கினார். அந்த ஊர் மக்களையும் அந்த உதவியில் ஈடுபடுத்தினர். பின்னர் ஜெனீவா திரும்பினாலும் அவரது மனம் வியாபாரத்தில் ஈடுபடவில்லை. 1862ம் வருடம் தனது சொந்த செலவில் "சோல்∴பெரினோ நினைவுகள்" என்ற நூலை எழுதி வெளியிட்டார். அதை ஐரோப்பாவில் முக்கியமான அரசியல் தலைவர்களுக்கும் அனுப்பினார்.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

# திருமறைக் கலாமன்றத்தின் இயக்குனர் அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளின் மன்னார் விஜயம்

திரு. அ. த. மோகன்ராஜ்

திருமறைக்கலாமன்றத்தின் இயக்குனர் தந்தை அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள் பாதுகாப்பு அமைச்சின் சிறப்பு அனுமதிபெற்று கடந்த 10.07.2009 அன்று மன்னாருக்கு விஜயம் செய்தார்.

அருட்தந்தை அவர்கள் தமது 47வது குருத்துவ ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் நன்றித் திருப்பலியை நிறைவேற்றுவதற்காகவும், மன்னார் திருமறைக் கலாமன்றத்தினைப் பார்வையிடுவதற்காகவும் இரு நாள் விஜயத்தினை மேற்கொண்டு மன்னாருக்கு வருகை தந்தார். அவர் மன்னாரில் உள்ள மடு மாதா சிறிய குருமடத்தில் குருமட அதிபரும் தனது குருத்துவ நண்பருமான அருட்திரு. சேவியர் குரூஸ் மற்றும் உதவி அதிபர் அருட்திரு. ஞானதிக்கம் ஆகியோருடன் இணைந்து கூட்டாக நன்றித் திருப்பலியை நிறைவேற்றினார். இத்திருப்பலியில் குருமட மாணவர்கள் பங்கேற்றனர்.

சேவியர் குரூஸ் அடிகளும் மரிய சேவியர் அடிகளும் உரோமாபுரியில் ஒன்றாகப் படித்து குருப்பட்டம் பெற்றவர்கள்.

நன்றித்திருப்பலியை நிறைவேற்றியபின் மன்னார் ஆயர் இல்லத்தில் அருட்தந்தையர்களைச் சந்தித்த இயக்குனர், மன்னார் திருமறைக் கலாமன்றத்தின் அலுவலகத்தையும், கவின் கலைகள் பயிலகத்தையும் பார்வையிட்டதோடு அன்றைய தினம் மன்னார் திருமறைக் கலாமன்றத்தின் கலைஞர்கள், இளைஞர்கள், பெண்கள் அவையினர், சிறுவர் கலைக்கூட ஆசிரியர்கள், சிறுவர் கலைக்கூடச் சிறுவர்கள், மன்ற அலுவலர்கள், பயிற்சியாளர் வட்டத்தினர் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடியதோடு






எதிர்காலத்தில் கலை தொடர்பான பல ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களை மாவட்டத்தில் கூட்டாக இணைந்து செயற்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்தார். மன்னார் மன்றம் மிகவும் சிறப்பாக இயங்குவதாகவும் கூறி அனைவரையும் பாராட்டி ஆசீர்வதித்தார்.

மேலும் திருமறைக்கலாமன்றத்தின் தூர நோக்கான "இன, மத, மொழி பேதமற்ற மனிதத்தைப் போற்றும் ஒரு கலைக்குடும்பத்தை உருவாக்குதல்" என்பதற்கு ஏற்றவாறு சைவ, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களைச் சார்ந்த கலைஞர்களையும் சந்தித்து கலந்துரையாடிய இயக்குனர் இன, மத, மொழி பேதமற்ற வகையில் தனித்துவத்தோடு கலைப்பணி ஆற்றிவரும் திருமறைக்கலாமன்றத்தில் அனைவரும் ஒரு குடும்பம் என்ற உணர்வோடு கலைப்பணித் தொடர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை முதல் நாள் நிகழ்வினை முடித்துக்கொண்ட இயக்குனர் இரண்டாம் நாளான 11.07.2009 அன்று சனிக்கிழமை பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்திற்குச் சென்று அன்னையைத் தரிசித்த பின்னர் பங்குத்தந்தையையும் சந்தித்தார்.

பின்னர் தோட்டவெளியில் அமைந்துள்ள மன்றத்தின் தோட்டத்தினையும் பார்வையிட்டார். இதனைத் தொடர்ந்து மன்னார் திருமறைக் கலாமன்றத்தின் காரியாலயத்தில் இடம்பெற்ற பணியாளர்கள் சந்திப்பின்போது மன்றத்தின் எதிர்காலத்திட்டம் பற்றியும் மன்னார் மன்றம் முன்னெடுக்கவேண்டிய செயற்பாடுகள் பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. இச்சந்திப்பின்போது இயக்குனருடன் மன்னார் திருமறைக்கலாமன்ற இணைப்பாளரும், பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

தாம் வந்த நோக்கத்தினை நிறைவேற்றிய மனநிறைவோடு 12ம் திகதி மன்னாரிலிருந்து இயக்குனர் அவர்கள் கொழும்பு திரும்பினார்.



# இயேசு கிறிஸ்துவின் வாழ்வும் பணியும்

வாகரைவாணன்

உலக வரலாற்றினை மாற்றி அமைத்த ஒரு பெரும் சக்தியாக விளங்குபவர் இயேசுக் கிறிஸ்து. இதனை கிறிஸ்துவுக்கு முன் (கி. மு.), கிறிஸ்துவுக்குப் பின் (கி. பி.) என ஆண்டுகள் வகுக்கப்பட்டதிலிருந்து நாம் உணர்ந்துகொள்ளலாம்.

இத்தகைய சிறப்புக்குரிய கிறிஸ்துவின் வாழ்க்கை ஓர் உயர்ந்த புனித நாடக இலக்கியத்தைப் போன்றதாகும். ஒரு நாடக இலக்கியம் முதல், இடை, முடிவு என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டதாக இருக்க வேண்டுமென கிரேக்கப் பேரறிஞன் அரிஸ்டோட்டில் கூறியுள்ளதுபோல கிறிஸ்துவின் வாழ்வும் அவதாரம், ஆயத்தம், பணி, போராட்டம், வெற்றி என்னும் ஐந்து அங்கங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. இவற்றில் 'அவதாரம்' என்னும் ஆரம்பப்பகுதி இரண்டு நற்செய்தியாளர்களால் (மத்தேயு, லூக்காஸ்) மட்டுமே எடுத்துரைக்கப்படுகின்றது. ஏனைய இருவரும் இதுபற்றி எழுதாததற்கு வேறு நோக்கம் இருந்திருக்கக்கூடும்.

இறைவன் மனிதனான நிகழ்வே இயேசுக் கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறாகும். இந்த வரலாறு மனித மீட்பையே மையமாகக் கொண்டது. இயேசுக்கிறிஸ்து என்னும் இரண்டு பெயர்ச் சொற்களும் இரட்சணியம், திருநிலை என்னும் பண்புநலன்களைக் குறிப்பிடுவதனால் அவரின் அவதாரத்தின் நோக்கத்தை மிக எளிதாகவே புரிந்துகொள்ள முடியும். இயேசுவின் வாழ்க்கையோடு தொடர்புடைய சில அற்புத நிகழ்ச்சிகளைத் தவிர்த்துப் பார்த்தாலும்கூட அவரது வாழ்க்கை ஏட்டின் ஒவ்வொரு வரியும் தங்கமாகவே பிரகாசிக்கின்றது. இறைவனின் மனித அவதாரத்தை அடுத்து வருவது அவரது இறைபணிக்கான ஆயத்தமாகும். அதாவது புனித லூக்காசின் நற்செய்தியின்படி (3:23) இயேசு தமது பணியைத் தொடங்கும்போது அவருக்கு வயது முப்பது.

பெத்லெகம் என்னும் ஒரு சிறு கிராமத்தில் பிறந்த ஒரு குழந்தை சூழ்நிலை காரணமாக எகிப்து சென்று பின் கலிலேயாவின் நசரேத்தில் தம் வாழ்க்கையைத் தொடங்குகின்றது. இந்த நிலையில் ஒரு பெரும் நீண்ட இடைவெளிக்குப் பின் அந்தக் குழந்தை பன்னிரண்டு வயதுப் பாலகனாக எருசலேம் ஆலயத்தில் சந்திக்கும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கின்றது. எனவே முப்பது வயதிற்குட்பட்ட அவரது இளமைக் காலம் பற்றிய வேறு செய்திகள் எதுவும் நமக்குக் கிடைக்காமல் இருந்தபோதும்கூட அந்தக் காலப்பகுதியையே அவரது இறைபணிக்கான ஆயத்தக் காலப்பகுதி என நாம் கொள்வது மிகவும் பொருத்தமான தொன்றாகும். ஏனென்றால் அத்திவாரம் இல்லாமல் எதுவும் அமைவதில்லை. இயேசுவின் இந்த ஆயத்தக் காலத்தை புலன் ஒடுக்கம் (Retreat) என நாம் கொள்ளலாம். இயேசுவின் வரலாற்றில் மிக முக்கியமான இக்காலப்பகுதியை புனித லூக்காஸ் ஒரு வாக்கியத்தில் முடித்துவிடுவது நமக்கு ஆச்சரியத்தையே தருகிறது.

எனவே இந்த ஆயத்தக் காலப்பகுதி இயேசுவை பொறுத்தவரையில் எப்படிப் - பட்டதாக இருந்திருக்கும் என்பதை நாம் உய்த்துணர வேண்டுமானால் அவர் பிறந்த யூத இனத்தின் அன்றைய வாழ்க்கை முறைகளை நாம் அறிந்தாக வேண்டும்.

இயல்பாகவே நாம் வாழும் சமுதாயத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வாழும் தன்மை உடையவர் இயேசுக்கிறிஸ்து. இதற்கான சான்றுகளை நாம் நற்செய்தி ஏடுகளில் காணலாம். உதாரணத்திற்கு சொசருக்கு வரி செலுத்தலாமா? (மத் 22:17-22) என்ற கேள்விக்கு இயேசு அளித்த பதிலைக் காட்ட முடியும். இந்த நல்லியல்பு சின்னஞ்சிறு வயதிலேயே இயேசுவின் உள்ளத்தில் நிச்சயமாகக் குடியிருந்திருக்கும். மேலும், அவரது தாய் தந்தையரும் அத்தகைய இயல்புகளால் நிரம்பப்பெற்றவர்கள் என்பது வெளிப்படை. எனவே, இயேசு தமது குழந்தைப்பருவத்தில் தம்மைச் சூழஇருந்த குழந்தைகளைப் போலவே தமது வாழ்க்கையையும் அமைத்திருப்பார். இதனை மனதில் கொண்டே இயேசுவின் ஆயத்த கால வாழ்க்கை இப்படி இருந்திருக்கலாம் என நாம் கொள்ளலாம்.

யூத இனத்தைச் சார்ந்த ஒவ்வொரு குழந்தையும் பாடசாலை சென்று பின்வரும் ஐந்து பாடங்களைப் படித்தாக வேண்டும்.

அ) சீமா (Shema) எனப்படும் யூத மதக்கொள்கை. சீமா என்பது கீபுரு மொழியில் ஒரு வினைச் சொல்லாகும். கேள் என்னும் பொருளுடைய இதுவே யூத மறைநூலின் முதற் சொல்லாக விளங்குகின்றது.

ஆ) கலால் (Hallel) என்னும் வணக்கப்பாடல். இதில் 113-118 வரையுமுள்ள பாடல்கள் பரமனைப் பாடிப் பரவுகின்றன.

இ) ஜெனசிஸ் (Genesis) என்னும் மனித இனத்தின் தொடக்க வரலாறு.

ஈ) லெவற்றிக்கஸ் (Leviticus) என்று அழைக்கப்படும் சட்டத் தொகுப்பு.

உ) மாணவர்கள் அனைவரும் தங்கள் கல்வி சம்பந்தமாக மேற்கொள்ளும் சுயமுயற்சி.

அதாவது ஒரு பெயரில் முதல் எழுத்தைத் தொடக்கமாகவும் இறுதி எழுத்தை முடிவாகவும் இடை எழுத்துக்களை இடையிலும் வைத்து அமைக்கும் ஒரு வாக்கியமே 'சுயமுயற்சி' என்று சொல்லப்படும். இத்தகைய ஞான வளர்ச்சியை ஏனைய யூத இனக்குழந்தைகளைப்போல இயேசுவும் பெற்றிருக்கக்கூடிய சூழ்நிலையில் பின்வரும் வழிகளில் அவரின் ஆயத்தகால வாழ்க்கை மேலும் மெருகூட்டப்பட்டிருக்கலாம். அவ்வழிகளாவன :

அ) பெற்ற தாய் ஒருத்தி தன் மகனைப் பெருமை மிக்க ஒருவனாக வளர்க்க முடியும் என்பதற்கு உலக வரலாற்றில் பல சான்றுகள் உள. இதற்கிணங்க தாய் மரியாளிடமிருந்து தனது எதிர்காலப் பணி தொடர்பாக எத்தனையோ அனுபவ மொழிகளையும் பாடங்களையும் இயேசு பெற்றிருக்க முடியும். இதுபோன்று தனது தந்தையின் தச்சுத் தொழிலிலும் அவர் தக்க உதவியாளனாக இருந்திருப்பார். இதனால் ஏற்பட்ட அனுபவமே "வருந்திச் சுமை சுமக்கின்றவர்களே என்னருகே வந்து எனது நுகங்களை எடுத்துக்கொள்ளுங்கள் . ஏனெனில் அவை மிகவும் இலகுவானவை" என்று அவரைப் பிற்காலத்தில் சொல்லத் தூண்டியிருக்கலாம். மேலும் தந்தையின் தொழிலினூடாகப் பல்வேறுபட்ட மனிதர்களோடு பழகும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியிருக்கும். இந்தப் பழக்கமும் அவரது பொதுப் பணிக்குப் பயன்பட்டிருக்கும்.

ஆ) இயேசு தனிமையை விரும்புவார். இதற்கான சான்றுகள் நற்செய்தி ஏடுகளில் இருக்கின்றன. எனவே தாய் தந்தையரோடு அவர் வாழ்ந்த காலத்தில் தனிமையில் இருந்து தனது எதிர்கால வாழ்க்கைபற்றி நிறையச் சிந்தித்திருக்கலாம். இவை தவிர ஆண்டுதோறும் அன்று நடைபெற்றுவந்த ஜெருசலேம் யாத்திரை அதையொட்டி ஆலயத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் அவரது வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும் எப்படி?

யூத இனச் சிறுவர்கள் பன்னிரண்டு வயதை எட்டியதும் தங்கள் சமூகத்தில் சில பொறுப்புக்களை ஏற்பது வழக்கமாயிருந்தது. இதன்படி யேசுவின் காலத்தில் கொண்டாடப்பட்ட வாரங்களின் திருநாள், அறுவடைத் திருநாள், அடிமை மீட்பின் திருநாள் எனும் முப்பெரும் விழாக்களில் பங்கேற்பதும் அவரது கடமைகளில் ஒன்றாகிவிட்டது. இந்தக் கடமையை நிறைவேற்றும் பொருட்டே தமது பன்னிரண்டாவது வயதில் தாய் தந்தையரோடு எருசலேம் சென்றார். இங்கே அவர் பெற்ற அனுபவம் அவர் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை என்றே சொல்ல வேண்டும். அடிமை மீட்புத் திருநாளில் மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது செம்மறி ஆட்டுக்குட்டியாகும். இது ஒரு புனிதமான பலிப்பொருளாகப் போற்றப்பட்டதால் இதை யாரும் இறைச்சிக்கடைக்காரனிடம் வாங்குவதில்லை. எனவே கோயிலுக்கு கொண்டு வரப்படும் செம்மறி ஆட்டுக்குட்டியைக் கொன்று அதன் குருதியை இறைவனுக்கு அர்ப்பணித்து விட்டு வெற்றுடலை குருக்கள் அதற்குரியவர்க - ளிடம் கையளிப்பது அன்றைய ஒரு வழக்கமாகும்.

அன்பே மயமான இயேசுவுக்கு இந்த நிகழ்ச்சி நிச்சயம் அதிர்ச்சியை அளித்திருக்கும். பிற்காலத்தில் ஆடு ஒன்று காணாமற் போனதற்காக அகம் நெகிழ்ந்த ஒருவனைப் பற்றிய கதை ஒன்றை உவமை மூலம் வெளிப்படுத்திய இயேசுவிற்கு இந்நிகழ்ச்சி (உயிர்ப்பலி) பெரும் அதிர்ச்சியாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நிகழ்வு தவிர அங்கு நடந்த இன்னுமொரு சம்பவமும் அவரது இதயத்தைக் கீறி ரணமாக்கியிருக்கும். அடிமை மீட்புத் திருநாள் வாரத்தில் மட்டுமே யூதர்களின் நீதிமன்றம் பகிரங்கமாக நடைபெற்றது. அந்நீதிமன்றத்தில்கூட மறைநூல் அறிஞர்கள் விவாதங்களிலேயே ஈடுபட்டனர். உதாரணத்திற்கு ஓய்வுநாளில் ஒருவர் எவ்வளவு தூரம் நடக்கலாம்? எவ்வளவு பாரத்தைச் சுமக்கலாம்? யாருக்கு விதி விலக்களிக்கலாம்? அளிக்கக்கூடாது? என்பன போன்ற உரையாடல்களே அந்த நீதிமன்றத்தில் இடம்பெற்றன. இவ்விவாதங்கள் இயேசுவுக்கு வெறுப்பைத் தந்திருக்கும் என்பதையே லூக்காஸ் நற்செய்தி 2ம் அதிகாரம் 46ம், 47ம் வசனங்களில் நாம் பார்க்கின்றோம்.

இயேசுவின் ஆயத்த காலத்தை வளப்படுத்திய இந்நிகழ்ச்சிகளோடு இன்னும் சில முக்கிய நிகழ்ச்சிகளையும் நாம் இணைத்துப் பார்க்க வேண்டும். அந்நிகழ்ச்சிகளை மத்தேயுபோல் அருளப்பர் தவிர்ந்த ஏனைய இரு நற்செய்தியாளர் -களும் குறிப்பிட்டுள்ளனர். அவற்றில் ஒன்று இயேசுவின் 'திருமுழுக்கு' அடுத்தது அவருக்கு ஏற்பட்ட 'சோதனை'.

ஸ்நாபக அருளப்பரின் வருகைக்கு முன் யூதர்கள் திருமுழுக்குப் பெற்றதாக வரலாறே கிடையாது. எனவே இயேசுவும் அன்றைய யூத சமுகத்தின் பழக்கவழக்கங்களுக்கு உட்படுத் தன்னை மிகவும் தாழ்த்தி, அருளப்பரிடம் திருமுழுக்குப் பெறுகின்றார். இம்முழுக்கு தூய்மையின் அடையாளமாகக் கொள்ளப்பட்டது. இத்தூய்மைப்படுத்தல் நிகழ்ச்சிக்குப் பின்பே இயேசுவுக்கு அப்படி ஒரு சோதனை ஏற்பட்டது. இது உண்மையில் அவரது உள்ளத்தில் நடைபெற்ற ஒரு இயல்பான போராட்டம் என்றே சொல்ல வேண்டும். நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடைபெற்ற போராட்டத்தில் நன்மையே இறுதியில் வெற்றி பெறுகின்றது. அதாவது இயேசு என்ற தங்கம் சோதனை என்ற தீயிலே புடம் போடப்பட்டு தனது பொதுப்பணிக்கு ஆயத்தமானதை இந்நிகழ்ச்சி காட்டுகின்றது.

திருமுழுக்கு, சோதனை ஆகிய இரு பெரும் நிகழ்ச்சிகளினாலும் தன்னைத் தயார் பண்ணிக்கொண்ட இயேசு மூன்று ஆண்டுகள் மட்டுமே நடத்தப்போகும் எதிர்கால இறைபணியை ஆரம்பிக்கின்றார்.

இயேசுவின் இந்த மூன்று ஆண்டுகால வாழ்க்கையைத் திறந்த புத்தகத்திற்கு ஒப்பிடலாம். நற்செய்தியாளர் நான்கு பேரும் இந்த மூன்றாண்டுகால வாழ்க்கையையே பேசுகின்றனர். இந்தச் சமயத்தில் நாம் ஒன்றை மனதிற்கொள்ள வேண்டும். இயேசுவின் முப்பது ஆண்டு கால வாழ்க்கையை நாம் மறைந்த வாழ்க்கை அல்லது ஆயத்தகாலம் என்று குறிப்பிட்டால் மிகுதி மூன்று ஆண்டு கால வாழ்க்கையை பகிரங்க வாழ்க்கை என்று சாற்றுதலே பொருந்தும். எனினும் இப்பகிரங்க வாழ்க்கை அவரது பணியோடு பின்னிப் பிணைந்தது; பிரிக்க முடியாதது. அதாவது அவர் வாழ்ந்ததே இப்பணிக்காக என்று சொல்லுவதே சாலப் பொருந்தும். எனவே இயேசுவின் மூன்றாண்டுகால வாழ்க்கையை வெறுமனே வாழ்க்கை என்று குறிப்பிடாமல் இறைபணி வாழ்க்கை என்று கொள்ள வேண்டும். இந்த இறைபணியின்போது அவர் பயன்படுத்தும் சொற்களிலிருந்தே அவரது வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருந்தது என்பதனை நம்மால் மிக எளிதில் அனுமானிக்க முடிகின்றது.

ஓர் ஏழைத் தச்சனால் வளர்க்கப்பட்ட இயேசு இறுதிவரை ஓர் ஏழையாகவே வாழ்ந்தார். இதனை "பறவைகளுக்குக் கூடும் நரிகளுக்கு வளைகளும் உண்டு. ஆனால் மனுமகனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" என்ற அவரின் வார்த்தைகளே நிரூபிக்கின்றன. இதுபோன்று இயேசு எவ்விதப் பற்றும் அற்றவராக, எல்லாம் துறந்தவராக வாழ்ந்தார் என்பதனை எழுபத்திரண்டு சீடருக்கு அவர் அருளிய உபதேசத்தின் (லூக் 10:-1-12) மூலம் நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

இயேசு எல்லாவிதமான உயர்ந்த பண்புகளையும் கொண்டவராக விளங்கினார் என்பதை அவரது மலைப்பிரசங்கமே எடுத்துக் காட்டுகிறது. எளிமை, தூய்மை, உண்மை, நேர்மை, அன்பு, கருணை, அநீதியைச் சகியாமை, சமத்துவம், தன்னல மறுப்பு, மக்கள் பணி, தியாகம் ஆகியனவே அந்த உன்னதமான மனிதநேயப் பண்புகள் என்பதை நாம் மறத்தல் கூடாது. அதன் காரணமாகவே "நானே உலகின் ஒளி" என்று சொல்லும் தகைமை அவரிடம் தாராளமாக இருந்தது. "உள்ளத்தின் நிறைவினின்று வாய் பேசுகிறது" என்னும் அவரின் வாக்கிற்கு அவரது எளிய தூய்மையான வாழ்க்கையே நல்ல சான்று.

இயேசு தமது இறைபணியின்போது பல புதுமைகளையும் செய்தருளினார். அவற்றைக் கூட அவர் இறைவனின் மாட்சிமைக்காகச் செய்தாரே தவிர, தமது புகழுக்காகவோ பெருமைக்காகவோ செய்யவில்லை. இக்கூற்றினை மத்தேயு 9ம் அதிகாரம் 30, 31ஆம் வசனங்கள் நிரூபிக்கின்றன.

இயேசுவின் இந்த இறைபணி வாழ்க்கையிலே அவரது 'போராட்டம்' 'வெற்றி' என்னும் ஏனைய இரு பகுதிகளும் அடங்கிவிடுகின்றன. அவருடைய போராட்டத்தை மூன்று விதமாகக் கொள்ளலாம்.

அ) அன்றைய பெரிய மனிதர்கள் எனக் கணிக்கப்பட்ட குருக்கள், மூப்பர்மாரின் கருத்துக்களோடு அவரால் பல விதங்களிலும் உடன்பட்டுப் போக முடியவில்லை. மோயீசனின் சட்ட திட்டங்களோடு அவர் பெரிதும் மாறுபட்டார். அவரது மலைப்பிரசங்கமே இதற்கு நல்ல சான்று (உதார. மத் 5:38-42).

ஆ) தமது நற்செய்திகளைவிடத் தாம் செய்யும் புதுமைகளே சனங்களைப் பெரிதும் கவருகின்றன என்று அவர் மிகவும் வேதனைப்படுவதை நாம் நற்செய்தி ஏடுகளில் பார்க்கின்றோம் (உதாரணம் மத். 13:10-15).

இ) உரோமைப் பேரரசின்கீழ் தமது மக்கள் அடிமைகளாக வாழ்வதை இயேசு விரும்பி - யிருக்கவில்லை என்பதை அவரது நசரேத் செபக்கூட வாசகம் உறுதிப்படுத்துகிறது (லூக் 4:19). ஆனால் அவரது இந்தப் போராட்டம் அறவழி சார்ந்ததாகவே காணப்படுகின்றது. இதற்குக் காரணம் அவரது இயல்பும் அவர் இறைவனிடம் வைத்த ஆழமான நம்பிக்கையுமே என்றால் மிகையாகாது.

நாம் நினைப்பதுபோல இயேசுவின் பாடுகள் அவர் யூதாசினால் காட்டிக் கொடுக்கப்பட்டதி -லிருந்து (மத் 26:27) ஆரம்பமாகவில்லை. உண்மையில் அவரது பாடுகள் அவர் பகிரங்க வாழ்க்கையை ஆரம்பித்தபோதே கருவாகி - விட்டது.

அநீதிக்கெதிராகத் தனிமனிதன் ஒருவன் நெஞ்சு நிமிர்ந்து நின்று நடத்திய ஓர் அறவழிப் போராட்டமே இயேசுவின் பாடுகள் என நாம் வகைப்படுத்தலாம். இந்தப் போராட்டத்தில்கூட தான் தோற்றுவிடுவாரோ என்ற ஐயம் அவருக்கு ஏற்பட்டதையே கெத்சமெனித் தோட்ட நிகழ்வு நமக்கு எடுத்துக் காட்டுகிறது (மத். 26:36 - 40). அப்போதும் அவர் காட்டும் இறைநம்பிக்கை உணர்வு நமக்கு ஒரு சவாலாகவே அமைந்து விடுகிறது. துன்பம் வரும்போது இறைவனைத் தூஷிப்பதையே பழக்கமாகக் கொண்டுள்ள மானிடப் பூச்சிகளாகிய நாம் எங்கே? இயேசு எங்கே? பாடுகளின் முடிவில் இயேசு அவரது சீடர்களே எதிர்பார்க்காத விதத்தில் வெற்றிபெறுகிறார். இந்த வெற்றியோடுதான் அவரது தெய்வீகத் தன்மை சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது.

நம்மைப்போல முழுமையான மனித இயல்போடு பிறப்பிலிருந்து இறப்பு வரை அனைத்துப் பிரச்சினைகளையும் சந்தித்துத் தமது எதிரிகளையே (குருக்கள், மூப்பர், சமய அறிஞர்கள்) ஆச்சரியத்துக்குட்படுத்திய அவர் தமது அவதாரத்தின் நோக்கம் நிறைவேற வேண்டும் என்பதற்காக சிறுமைகளையும் சிலுவை மரணத்தையும் ஏற்றுக்கொண்டார்.

இறுதியில் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தபோது "எல்லாம் நிறைவேறிற்று" (யோவான் 19 - 30) என்று அவர் உதிர்த்த வாக்கியும் அவரது வாழ்வும் பணியும் முழுமை அடைந்துவிட்டது என்பதை நமக்கு துலாம்பரமாக எடுத்துக்காட்டுகிறது.

ஆம், இயேசுவின் வாழ்வும் பணியும் ஒன்றையே நோக்கமாகக் கொண்டிருந்தன. இந்த ஒன்று இறைவனின் நற்செய்தியை உலகிற்கு எடுத்துச் சொல்வதே. அதனை முழுமையாக இயேசு நிறைவேற்றிவிட்டார் என்பதே கிறிஸ்தவன் ஒருவனுக்குக் கிடைக்கக் கூடிய பெருமையும் வெற்றியும் எனலாம்.




# மாணவர் பகுதி



மாணவ மணிகளே! இது உங்களுக்கான பகுதி. இதில் உங்களுக்குப் பயனுள்ள சிறிய,பெரிய கட்டுரைகள் இன்னும் பொது அறிவோடு தொடர்பான விடயங்கள் பலவும் ஒவ்வொரு மாதமும் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம். - பதிப்பாசிரியர்

## ஞாபகசக்தியை வளர்ப்பது எப்படி?




என்னுடைய ஆசிரியர் ஞாபகசக்தியை எப்படி அதிகரிக்கலாம் என்று வகுப்பு நடத்திக் - கொண்டிருந்தார். வகுப்பின் தொடக்கத்தில் 25 அரசியல்வாதிகளின் பெயரைக் கூறும்படி சொன்னார். நாங்களும் கூறினோம் (ஒரே ஒரு முறைதான்). கூறிமுடிந்ததும் அந்த 25 அரசியல்வாதிகளின் பெயர்களையும் அப்படியே வரிசையாக ஒன்றுகூட பிசகாமல் அவர் திரும்பக் கூறினார். எங்களுக்கெல்லாம் பெரும் அதிர்ச்சியாக இருந்தது. ஒருவருக்கொருவர் சைகை காட்டி ஆசிரியரின் திறமையை வியந்தோம்.

இந்த வேளையில் எங்கள் ஆசிரியர் கூறிய வார்த்தைகள் எங்களை இன்னும் வியப்பின் உச்சிக்கு இட்டுச் சென்றது. "நீங்கள் ஒவ்வொருவரும் இவ்வாறே என்னைப்போல் 25 அரசியல்வாதிகளின் பெயர்களையும் ஒரே ஒரு முறை கேட்டபின் சொல்லலாம்" என்றார். எங்களால் நம்ப முடியவில்லை. ஆனால் வகுப்பின் இறுதியில் எங்களால் நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. ஏனென்றால் எங்களில் பலரால் 25க்கு மேற்பட்ட பொருட்களின் பெயர்களை ஒரே முறை கேட்டபின் வரிசையாக ஒன்றுவிடாமல் திருப்பிச் சொல்ல முடிந்தது.

அப்போதுதான் எங்களுக்கு ஓர் உண்மை அனுபவபூர்வமாய்ப் புரிந்தது. "ஞாபகசக்தி குறைந்தவர்கள் அல்லது இல்லாதவர்கள் என்று நம்மில் யாரும் இல்லை, தங்கள் ஞாபகசக்தியைப் பயன்படுத்துகிறவர்கள் மட்டுமே நம்மிடையே உண்டு. ஞாபகசக்தி புத்திசாலி மாணவர்களுக்கே உரித்தான தனிப் பொக்கிஷம் அல்ல, மாறாக எல்லா நடுத்தர சாதாரண மாணவர்களுக்கும் நல்ல ஞாபகசக்தி உண்டு" என்பதுதான் அந்த உண்மை.

எனவே "சில நபர்கள் ஒரு செய்தித்தாள் அல்லது புத்தகத்தை ஒரே ஒரு முறை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு அதை முழுவதும் பார்க்காமல் திருப்பிச் சொல்கிறார்கள்" - என்று வாசிக்கக் கேட்கும்போது, சொல்லிக் கேள்விப்படும்போது ஆச்சரியப்பட வேண்டியது ஒன்றுமில்லை. நம்மாலும் இது ஆகக்கூடிய காரியம். இதோ அதற்குச் சில வழிமுறைகள். எனவே நீ பாடத்தை நினைவுவைக்க வேண்டும் என்றால் பாடத்தில் ஈடுபாடு, அக்கறையும் காட்டுவதைவிட வேறு சிறந்த வழி இல்லை.

### 1. ஆர்வம் :

*"எங்கே உன் செல்வம் இருக்கின்றதோ, அங்கே உன் மனமும் இருக்கும்". நீ எந்த காரியத்தில் ஆர்வம், அக்கறை, ஈடுபாடு கொள்கிறாயோ அந்தக் காரியங்களை உன்னால் நினைவுகூர முடியும்.*

அமலஜெயின் +2 மாணவி, நல்ல புத்திசாலி. பள்ளியில் முதல் மாணவியும் அவள்தான். ஆசிரியர் பாடம் எடுத்து முடிந்தவுடன் அப்படியே அந்தப் பாடத்தை திரும்பச் சொல்லும் அளவிற்கு ஞாபகசக்தி அவளுக்கு உண்டு. ஆனால் இந்த மாணவியின் தாயார் மூன்று நாட்கள் தொடர்ந்து ஞாபகப்படுத்தியும் அண்ணனுக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தை அஞ்சல் பெட்டியில் சேர்க்க மறந்துவிட்டாள்.

அமலஜெயின் படிப்பில் அதிகம் ஈடுபாடும் அக்கறையும் உள்ளவள். அவள் பாடங்களை ஞாபகம் வைத்து முதல் மாணவியாக விளங்குகிறாள். ஆனால் அவள் தாயின் வேண்டுகோளில் அவளுக்கு ஈடுபாடு அதிகம் இல்லை. எனவே அதனை நிறைவேற்ற ஞாபகம் இல்லாமல் போய்விட்டது.

இப்படிதான் எனக்குத் தெரிந்த ஒரு மாணவன் கணிதத்தில் எப்போதும் நூற்றுக்கு நூறு வாங்குவான். அதில் வரும் எல்லா வாய்ப் - பாடுகளையும், சூத்திரங்களையும் நினைவில் வைதிருக்கும் அவன் ஒருமுறைகூட ஆங்கிலப் பாடத்தில் தேறியதாக வரலாறு இல்லை. காரணம் அவனுக்குக் கணிதத்தில் உள்ள ஈடுபாடு ஆங்கிலத்தில் இல்லை.

இன்னும் சில மாணவர்களைப் பார்க்கலாம். பள்ளியில் கணிதத்தில் '0' மார்க் வாங்குவார்கள். ஆனால் அவர்களிடம் கிரிக்கெட் பற்றிக் கேட்டால் அப்படியே கவாஸ்கர் இவ்வளவு, கபில்தேவ் இவ்வளவு என்று ஒவ்வொருவரும் எடுத்த ஓட்டங்களின் புள்ளி விபரங்களைப் பிட்டு பிட்டு வைப்பார்கள்.

இன்னும் உங்கள் பள்ளியில் உள்ள மாணவ மாணவியரில் யார்மேல் உங்களுக்கு ஈடுபாடு உண்டோ அந்த மாணவ மாணவியரின் பெயர், ஊர் போன்ற புள்ளி விபரங்கள் உங்களுக்கு ஞாபகம் இருக்கும். மற்றவர்களின் பெயர்கூட உங்களுக்கு நினைவுக்கு வராது.

### 2. மனமிருந்தால் மார்க்கமுண்டு :

*நீ எதை நினைவில் வைக்க வேண்டும் என்று விருப்பப்படுகின்றாயோ அதை நினைவில் வைத்திருப்பாய். உனக்கு விருப்பம் இல்லாத காரியங்களை விட்டுவிடுவாய்.*

ஒரு மாணவனுக்கு ஆங்கிலச் செய்யுள் பகுதி ஒன்றை வாசித்துக் காட்டி, பொருள் சொல்லி மனப்பாடம் செய்ய உதவி செய்தேன். ஒரு மணி நேரத்திற்குப்பின் அந்த மாணவன் அந்தச் செய்யுளின் 14 வரிகளையும் மனப்பாடம் செய்து கொண்டான். ஆனால் என்னால் அந்தச் செய்யுளின் இரண்டு வரிகளைக்கூட முழுமையாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ள முடியவில்லை. காரணம் மாணவனின் நோக்கம் எப்படியும் அந்தச் செய்யுள் பகுதியை மனப்பாடம் செய்வது. எனது நோக்கம் அது அல்ல. அதனால்தான் இருவரும் ஒரே அளவு நேரத்தைச் செலவிட்டபோதும், இறுதியில் என்னால் அந்தச் செய்யுட் பகுதியை நினைவில் வைக்க முடியவில்லை.

நேற்று ஆசிரியர் வகுப்பில் பலமுறை திரும்பத் திரும்பச் சொன்னாலும் அதனை மாணவன் மனதில் வைத்திருக்க வேண்டும் என்ற ஆசை, விருப்பம் இல்லை. ஆனால் இன்று ஆசிரியர் கேள்வி கேட்டுத் தண்டனை கொடுக்கும்போது பக்கத்தில் இருக்கும் மாணவன் மெதுவாக ஒரே ஒருமுறை சொன்னாலும், அதை நினைவில் வைத்திருப்பான். காரணம் அவன் இன்று ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றான், விருப்பம் கொள்கிறான்.

எனவே ஞாபகத்தில் வைக்க வேண்டும் என்று மாணவன் விரும்பும்போது,

1) சொல்லப்படும் செய்தியைக் கவனமாகவும் உன்னிப்பாகவும் கேட்கின்றான்.

2) முதல் முறையிலேயே செய்தியைத் தெளிவாகப் பெற்றுக்கொள்கின்றான்.

3) சொல்லப்பட்ட செய்தியைப் புரிந்து கொள்கிறான். எனவே அவன் எதை நினைவில் வைக்க ஆசைப்படுகிறானோ அது அவன் மனதில் பதிந்துவிடுகிறது.

### 3. புரிந்து படி

*நீ என்ன பார்க்கிறாய் என்பது உனக்குத் தெரிந்தால் ஒருவேளை வார்த்தைகள் மறந்தாலும் நீ படித்தது மறந்து போகாது; இல்லாமல் வார்த்தைகளைக் மனனம் செய்தால் அது வாழ்க்கைக்குப் பலன் தராது. நேரம் வீணாக்கப்படும், ஞாபகத்திலும் நிற்பது கடினம்.*

ஒரு மாணவன் தமிழ்ப் புத்தகத்தின் ஒரு பக்கத்தைப் படித்து முடிக்கச் செலவிடும் நேரத்தைப்போல் நான்கு மடங்கு நேரத்தைச் செலவிட்டாலும் அதனால் ஆங்கிலப் புத்தகத்தின் ஒரு பக்கத்தைப் படித்து முடிக்க முடிவதில்லை .

பாடத்தைப் புரியாமல் மனனம் செய்யும்போது பாடம் போர் அடிக்கும். நேரம் மெல்லத்தான் செல்லும், களைப்பு அதிகப்படும். ஞாபகத்தில் ஒன்றும் நிற்காது. பாடத்தைப் புரிந்து படிக்கும்போது படிப்பு இனிக்கும். பாடம் சுவைக்கும். சோர்வு, தலை தூக்காது, படித்த காரியம் ஞாபகத்தில் நிற்கும்.

### 4. படிப்பதற்கும் சில வழிமுறைகள்

எப்படியும் படித்தால் பாடம் மனதில் நிற்காது. படிப்பதற்கும் சில வழிமுறை உண்டு. ஆடை செய்வதற்கு அவசியம் துணி. துணியை எப்படியும் வெட்டினால் ஆடை செய்துவிட முடியாது. அதற்கும் சில வழிமுறைகள் உண்டு. இந்த வழிமுறைகளை விட்டுவிட்டு எப்படியும் துணியை வெட்டினால் ஆடை செய்ய முடியாது. இதைப்போல எப்படியும் படித்தால் ஆகாது. அந்தப் படிப்பு ஞாபகத்திலும் நிற்காது. படிப்பதற்கும் சில வழிமுறைகள் உண்டு.

வெற்றி வாகை சூடும் மாணவர்கள் தமது வெற்றிக்கு ஒரு முக்கிய காரணமாகக் கூறுவது அவர்கள் பயன்படுத்திய நல்ல படிக்கும் வழிமுறைகள்தான். தோல்வியுற்ற மாணவர்களும் தங்கள் தோல்விக்கு நல்ல படிப்பு வழிமுறைகள் இல்லாமையே காரணம் என்று காட்டுகிறார்கள். ஞாபகசக்தியை வளரச் செய்ய அதோடு இன்னும் சில உபகரணங்கள்:

**அ.முக்கிய கருத்தைத் தெரிந்து கொள்:**

நீ படிக்கும் பாடத்தில் எல்லா வார்த்தைகளையும் நினைவில் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. முக்கிய கருத்தை மட்டும் நினைவில் வைத்துக் கொண்டால் போதும். எலும்புக்கூடு இருந்தால் பின்னர் நாம் அதற்குச் சதையை ஒட்ட வைக்கலாம். அதுபோல முக்கிய கருத்தை நினைவில் கொண்டால் மற்ற விளக்கங்களை நாமாகவே சேர்த்துக்கொள்ளலாம்.

**ஆ. அர்த்தமுள்ள அமைப்பு :**

பாடங்களைப் படிப்பதற்கு அவற்றைப் பொருளுள்ள பல சிறு பிரிவுகளாகப் பிரித்து அவற்றைத் தனிப்பட்ட தலைப்பின்கீழ் கொண்டு வந்து படித்தால் அவை எளிதில் ஞாபகத்தில் இருக்கும்.

**இ. நேரத்தைக் கூறுபோடு :**

கூறு போட்ட நேரம் அதிகப் பயன்தரும் என்பது விஞ்ஞானபூர்வமான உண்மை. எனவே நீ இரண்டு மணி நேரம் தொடர்ந்து படிப்பதை 25 நிமிடம் வீதம் நான்கு கூறாகப் பிரித்துப் படித்தால் அதிகப் பாடத்தைப் படிப்பதோடு களைப்பும் ஏற்படாது. இடையில் பொழுது போக்கிற்கும் சிறிது நேரத்தை ஒதுக்கலாம். படிப்பும் சுமையாக மாறாது.

**ஈ. கற்க கசடற :**

கற்றதைத் திரும்பத் திரும்பக் கற்கும்போது அது ஆழ்மனதில் பதிந்து வரும். எளிதில் மறந்து போகாது. உதாரணமாக ஒருவன் தாய்மொழியை, பெற்றோரை, நண்பர்களை எளிதில் மறப்பது இல்லை. காரணம் அவர்கள் திரும்பத் திரும்ப நம் கண்களில் பட்டவர்கள். அவர்களது உருவமும் பெயரும் மீண்டும் மீண்டும் நம் மனதில் ஆழத்தில் பதிந்துள்ளமையால் அவைகள் எளிதில் மறந்து போகாது. எனவே கற்கின்ற பாடங்களைத் திரும்ப திரும்பக் கற்கின்றபோது நம் ஞாபகத்தில் நிலைத்து நிற்கின்றது.

(தொடரும்)

# பழைய கேள்விகளும் புதிய பதில்களும்

தருவது தஞ்சை டோமி

*அடிப்படைவாத பெந்தக்கோஸ்தே சபைச் சகோதரர்களின் கேள்விகளுக்கு விவிலிய அடிப்படையில் தெளிவான, அழுத்தமான பதில்களைத் தாங்கி இத்தொடர் வருகிறது.*

தொடர் – 24

**கேள்வி.**

***இன்றைக்கு கத்தோலிக்கத் திருத்தலங்களில் நடைபெறும் சடங்காச்சாரங்கள், மூடப்பழக்க வழக்கங்கள் இல்லையா? இதற்கு ஏதாவது விவிலிய ஆதாரமுண்டோ?***

**பதில்:** கத்தோலிக்கத் திருத்தலங்களுக்கு இயேசுவின்மீதுள்ள நம்பிக்கையில்தான் போகின்றனர். யாரும் மூடநம்பிக்கையோடு போவதில்லை. இயேசு பேய் ஓட்டியபோது "இவன் பெயல்செபூலைக் கொண்டே பேய் ஓட்டுகிறான்" (மத்.12:24) என்கிறார்கள்.

மூடநம்பிக்கைக்கும், எளிய விசுவாசத்திற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. வேளாங் கண்ணிக்குப் போனால் புதுமை நடக்கும் என்று நம்புவது மூடநம்பிக்கை என்றால் உங்களுக்காக பால் தினகரன் செபிக்கிறார் என்பதும் மூடநம்பிக்கையே. புதுமை நடக்க செபிப்பவர்களோ, இடமோ முக்கிமல்ல. செபிக்கின்றவர்களின் விசுவாசமே முக்கியம். புனிதர்கள் இவ்வுலகில் வாழும்போது இயேசுவின் பெயரால் செய்த அற்புதங்களையே இன்றும் திருத்தலங்களில் செய்து கொண்டிருக்கின்றனர். திபா 3:6இல் பேதுரு அவரிடம், "வெள்ளியும், பொன்னும் என்னிடமில்லை. என்னிடம் உள்ளதை உமக்குக் கொடுக்கிறேன். நாசரேத் இயேசுவின் பெயரால் எழுந்து நடந்திடும்" என்கிறார்.

***விவிலியத்தில் காணப்படும் வழிபாட்டுப் பழக்கங்கள்:***

**மொட்டை அடித்தல்** (திபா 18:18) :

புனித பவுல் கொரிந்து நகரில் பல நாட்கள் தங்கியிருந்து அங்கிருந்து கிளம்பும் தம் நேர்த்திக்கடனை நிறைவேற்ற மொட்டை அடித்துக்கொண்டார்.



அதுபோலவே பக்தர்கள் திருத்தலங்களில் நேர்த்திக்கடனைத் தீர்க்க மொட்டை அடிக்கி - ன்றனர். இது அர்ப்பணத்தின் அடையாளமே.

**கோயிலைச் சுற்றி வருதல் :**

கிறிஸ்தவர்களுக்கு ஆலயம்தான் முக்கியம். கோயிலைச் சுற்றியே வாழ விரும்புவார்கள். கிறிஸ்துவே வாழ்வின் மையம் என்பதைக் குறிக்கும் அடையாளமே இது. "நீரே என் புகலிடம், என் அரண், நான் நம்பியிருக்கும் இறைவன்" (திபா 91:2).

**புதுமைத் தண்ணீர்:**

"இயேசுவே உம் இரத்தத்தால் கழுவும்" என நம்மை அர்ப்பணிக்கவும் "நான் தரும் தண்ணீரைப் பருகும் யாருக்கும் தாகமே வராது" என்பதைக் குறிப்பதாகவும் இப்புதுமைத் தண்ணீர் தெளிக்கப்படுகிறது. அருந்தவும் தரப்படுகிறது (யோவா1:7 யோவா 4:14).

இப்படி நேர்ச்சைக் கயிறு உடன்படிக்கையின் அடையாளம். உப்புக்காணிக்கை (மத்5:13) நாம் உப்புபோல் தூய்மையாக சுவையூட்டக் கூடியவராக வாழ வேண்டி அளிக்கப்படும் அடையாளம்.

அடையாளங்கள் மனித வாழ்வுக்குத் தேவை. ஆனால் இந்த அடையாளங்கள் நம் விசுவாச வாழ்விற்கு தூண்டுகோல்தானே தவிர அவைகளே நிறைவல்ல. நடுநாயகம் இயேசுவை நோக்கி உந்தித்தள்ளும் உபகரணங்களே பக்தி முயற்சிகள் (எபி 12:2).

(கேள்விகள் தொடரும்)

# காலத்தால் அழியாதவர் தூய பவுல்

பீற்றர் கிறிஸ்பி குரூஸ், பேசாலை

தூய பவுலின் ஆண்டு என்று அன்னையாம் திருச்சபையும் நற்செய்தி அறிவிப்பு ஆண்டு என்று மறைமாவட்டமும் பிரகடனப்படுத்தி - யுள்ளது.

இந்த இரண்டுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை நாம் காணமுடிகின்றது. காலத்தால் அழியாதவர் தூய பவுல். "நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே" (பிலி 1:21) என்பதே பவுல் அடிகளாரின் வாழ்வின் இலட்சியமாக இருந்தது. நற்செய்தி அறிவிப்புப் பணியைத் தமதாக்கி, வாழ்வை அதற்கென அர்ப்பணித்து, இயேசு ஆண்டவர்மீது ஆழ்ந்த பற்றுறுதி கொண்டவராக வாழ்ந்தவர் தூய பவுல். அவரைப் பற்றிய அறிவை ஆழப்படுத்தி, அவரைப்போல அர்ப்பணிப்பு, ஈடுபாடு கொண்டு வாழ்ந்திட பவுலின் ஆண்டு ஏற்றதொரு வாய்ப்பாக நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. நற்செய்தியின் தூதுவராய் நாம் மாறிட தூய பவுலின் பணி வாழ்வு நமக்கு முன் உதாரணமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

பவுல் அடிகளாரைப்பற்றி மேலோட்டமாக நாம் அறிந்தது எல்லாம் தமஸ்கு அனுபவம் ஒன்றை மட்டும்தான். அவரைப்பற்றி ஆழமாகப் பார்க்குமிடத்து இவர் திருச்சபையின் மாபெரும் திருத்தூதுவராக, அதிலும் பிறஇனத்தவரின் சிறப்புமிக்க தூதுவராக, நற்செய்தி விதையை உலகெங்கும் விதைத்தவராக, கிறிஸ்துவின் மறை உண்மைக்கு அத்திவாரமிட்டவராக, ஆதித்திருச்சபையின் வச்சிரத்தூண்களில் ஒருவராக தியாகம், அர்ப்பணம், கடின உழைப்பு, சாட்சிய வாழ்வின்மேல் தனது வாழ்வைக் கட்டியெழுப்பியவராக, யாராலும் எட்டிப் பிடிக்கமுடியாத அளவுக்கு வானளாவ உயர்ந்து நிற்பதையும் நாம் காணமுடியும். இவருடைய வரலாற்றுப் பின்னணியை நாம் தெரிந்துகொள்வது சாலச்சிறந்ததாகும். பவுலின் ஆண்டிலே அவரைப் பற்றி முழுமையாக அறிந்துகொள்வது அவசியமும்கூட.

### தூய பவுலின் பிறப்பு

இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் இஸ்ராயேல் இனம். இந்த இனத்திலே, யூத குலத்திலே, பென்ஜமீன் கோத்திரத்தில் இவர் பிறந்தார். இவர் கிரேக்கப் பண்பாட்டில் உயர்ந்து நின்ற சிலிசியாவைச் சேர்ந்த தார்சு நகரைப் பிறப்பிடமாய்க் கொண்டவர். பாலஸ்தீனாவில் வாழ்ந்து வந்த யூதர்கள் சிலர் பகைவர்களின் தாக்குதலுக்கு அஞ்சியும், வியாபாரத்தை முன்னிட்டும், பாலஸ்தீனாவைவிட்டு வெளியேறி வெளிநாடுகளில் குடியேறினார்கள். அவர்கள் "சிதறிச் சென்ற யூதர்கள்" என்ற பெயரால் அழைக்கப்பட்டனர்.

பவுலின் முன்னோரும் இவ்வாறாக இடம்பெயர்ந்த குடிகளின் எண்ணிக்கையில் இடம்பெற்றனர். அந்த நாட்டு அரசும் அடைக்கலம் தேடி வந்த மக்களுக்கு தங்களுடைய நாட்டில் குடியுரிமை கொடுத்து தங்கள் பிரஜைகளாகவே வைத்திருந்தது. இவ்வாறாக உரோமைக் குடியுரிமை பெற்ற மக்களாக பவுலின் முன்னோர் குடும்பம் இருந்தது. இங்குதான் தூய பவுல் பிறந்தார்.

இவர் யூதர். ஆனால் பிறப்புரிமை பிற இனத்தவர் நாட்டில். யூத குலத்தில் பெற்றோரின் பிள்ளையாகவும், உரோமைக் குடியுரிமை நாட்டின் பிள்ளையாகவும் இவர் பிறந்தார். இவரது வழித்தோன்றல் இஸ்ராயேல் வரலாற்றில் பென்ஜமின் குலம். ஆகவே பென்ஜமின் குலத்தின் முதல் அரசனாகிய 'சவுல்' என்னும் பெயரும், குடியுரிமை நாட்டின் பெயரான 'பவுல்' என்னும் உரோமைப் பெயரும் இவருக்குச் சூட்டப்பட்டது (திப.13:9).

### அறிமுகம்

இவர் பிறந்தது, வளர்ந்தது, வாழ்ந்தது, இவருடைய கலை, கலாச்சாரம், மொழி அனைத்தும் இவரை பவுல் என்றே அழைத்தது. இவரது வரலாற்றுப் பின்னணி இஸ்ராயேல் இனமாக இருந்தாலும் இவரது பிறப்புரிமை பிறஇனத்தவரிடையே இருந்ததால் பிற இனத்தவர் இவரைப் பவுல் என்றே அறிவர். தமஸ்கு அனுபவத்துக்குப் பிறகு பிறஇனத்தவருக்கு நற்செய்தி அறிவிக்கும் பணியை மேற்கொண்டதால் தமது யூதப் பெயரான சவுலை விடுத்து பிறஇனப்பெயரான பவுலையே அறிமுகப்படுத்திக்கொள்கிறார்.

### கல்வி

தான் ஒரு யூதன் என்று பெருமையுடன் கூறிக்கொள்ளும் பவுல் யூதநெறியினைத் தீவிரமாய்க் கடைப்பிடிக்கத் தவறவில்லை. யூத சட்டக்கல்வியை கமாலியேல் என்ற பேரறிஞரிடம் கற்றுக்கொண்டார். குருவை மிஞ்சும் அளவுக்கு திறமைசாலியாக விளங்கினார். அவரிடம் யூத சட்டங்களைப் பயின்று அவற்றைத் தவறாது பின்பற்றும் பரிசேயனாகத் தம்மையே தயாரித்துக் கொண்டார். சட்டக்கல்வியில் அவர் பாண்டித்தியம் பெற்றவர் என்பதை அவர் எழுதிய திருமடல்களே வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றது. யூதப் பாரம்பரியத்திலும் கொள்கையிலும் அசைக்க முடியாத பிடிப்பு ஏற்பட்டதால்தான் "திருச்சட்டத்தைக் கடைப்பிடிப்பதில் பரிசேயன் நான். திருச்சட்டத்தில் எனக்கிருந்த ஆர்வத்தால் திருச்சபையைத் துன்புறுத்தினேன்" என்று அவரே கூறியுள்ளார் (பிலி 3:6).

### தீவிரவாதம்

கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள் பரிசேயர். யேசுவுக்கு அளிக்கப்பட்ட தண்டனை நியாயமானது, இயேசுவே மெசியா என்று அறிக்கையிடுபவர்கள் மரண தண்டனைக்கு உரியவர்கள். "சிலுவையில் தொங்கவிடப்பட்டவன் சபிக்கப்பட்டவன்" என்ற யூத சட்டநெறியில் ஊன்றியிருந்தவர். 'யாவே' கடவுள் ஒருவரே திருச்சட்டம் தந்தவர். திருச்சட்டத்தால் மட்டுமே மீட்பு என்று திருச்சட்டத்தில் ஊறியிருந்தவர் இந்தப் பவுல். கிறிஸ்துவின் மரணம், உயிர்ப்பு, உத்தானத்தின் பின்பு பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட சீடர்கள் கிறிஸ்துவை அறிக்கையிட்டார்கள். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஆதித்திருச்சபையை துன்புறுத்துவதற்காக தீவிரமாகச் செயல்படுகின்றார். முதலில் ஸ்தேவானை கல்லால் எறிந்து கொல்லுவதற்கு துணை



நிற்கின்றார். இவ்வாறு கிறிஸ்தவர்கள்மேல் அவருக்கிருந்த வெறுப்புக் கோபமாக மாறியது.

### திருப்புமுனை

மறக்க முடியாத நிகழ்வு பவுல் அடிகளார் வாழ்க்கையில் தமஸ்கு அனுபவத்தின் மூலம் முன்னிலை பெறுகின்றது. கிறிஸ்தவர்களை அழிப்பதையே குறியாகக்கொண்டு தமஸ்கு நகரம் நோக்கித் தீவிரமாகப் போகும்போது இயேசு ஆண்டவரால் தடுத்தாட்கொள்ளப்பட்டு புறவினத்தார்க்கு நற்செய்தி அறிவிக்கும் மாபெரும் பணி ஆற்ற அழைத்தலைப் பெறுகின்றார்.

இறைவன் மனிதரிடமிருந்து சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் தமது திட்டத்தை நிறைவேற்றுகிறார். "தாம் முன்குறித்து வைத்தோரை அவர் அழைத்திருக்கின்றார். தாம் அழைத்தோரைத் தமக்கு ஏற்புடையோராக்கி இருக்கின்றார்" (உரோ 8:30). நற்செய்தியை நானிலமெங்கும் பரப்பி, கிறிஸ்தவர்களை உருவாக்குவதற்குச் சிறந்த ஒரு மறைபரப்பாளரை சவுல் என்ற தீவிரவாத இளைஞனாக உருவாக்கினார். திறமைகள் நிரம்பப்பெற்ற, விசேடமாக பயிற்றப்பட்ட, கல்வியில் ஊன்றப் பெற்ற ஒருவராக உருவாக்கினார்.

### மறைபரப்பாளர்

யூத சமயத்தில் ஊற்றெடுத்த கிறிஸ்தவ போதனையை புறவின உலகுக்கு எடுத்துச் செல்வதற்கு பவுல் அடிகளாரைப் போன்றதொரு நற்பணியாளர் இருக்கவே முடியாது. தனது பணியை, அழைப்பை, ஏற்றுக்கொண்ட பவுல் அடியார் நற்செய்தி அறிவிப்புப் பணிக்குத் தம்மை முற்றுமாக அர்ப்பணிக்கின்றார். "நற்செய்தியை அறிவிக்காவிட்டால் ஐயோ எனக்குக் கேடு" (1கொரி 9:16)

### சாதனை

மேற்கொண்ட பணியில் எதிர்கொண்ட சவால்கள், கஷ்டங்கள், துன்பங்கள் அனைத்தையும் சமாளித்தார். சொந்த மக்களால், பிறமக்களால், காட்டிலே, நாட்டிலே, இயற்கையால், செயற்கையால் பல இன்னல்களுக்கு ஆளானார். ஆனாலும் துன்பத்தைக்கண்டு துவண்டு விடவில்லை. திருச்சபையின் பெயரால் தனி ஒருவராக நின்று சாதனை படைத்த பெருமை பவுல் அடிகளாரையே சாரும்.

### பணித்தளம்

நற்செய்தி வழியாகக் கிறிஸ்தவர்களை ஈன்றெடுத்தார் (1கொரி 4:15). ஈன்றெடுத்த பிள்ளைகளின் வளர்ச்சியில், முதிர்ச்சியில் ஆர்வமுள்ளவராக இருந்தார். அவர்கள் மத்தியில் திருச்சபையை ஸ்தாபித்தார். பயணங்கள் பல மேற்கொண்டார். வதியற்ற வேளையில் திருமுகங்களை எழுதி அவர்களை பலப்படுத்தினார். 13 திருமுகங்கள் அவரால் எழுதப்பட்டன. ஒவ்வொரு திருமுகங்களும் மறையுண்மைகளையும், கிறிஸ்தவ விழுமியங்களையும் வலியுறுத்து -வதாக அமைந்துள்ளது. ஆன்மீக வாழ்வின் மையக்கருத்து எவை என்பதை துலாம்பரமாக காணக்கூடியதாக இருக்கின்றது.

### நற்செய்தியின் நோக்கம்

ஒவ்வொரு திருமுகங்களும் தனிப்பட்ட நோக்கத்தையும், பொதுவான நோக்கத்தையும் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது. பவுலின் இறையியல் சிந்தனை வழியாக ஒவ்வொருவருடைய அறிவும் விரிவடைந்து இறை சிந்தனைக்கு உட்புகுத்தப்படுகின்றது.

பவுல் அடியார் அறிவித்த நற்செய்தி ஒரு இறைவெளிப்பாடு. தன்னைத்தானே மீட்கமுடியாத மனிதனின் வலுவின்மையில் கடவுளின் வல்லமை வெளிப்படுகின்றது. (1 கொரி. 1:28). கடவுள் இயேசுக்கிறிஸ்துவின் மூலம் மீட்புச்செயலை நிறைவேற்றினார். இந்த மீட்பு திருச்சட்டத்தினால் வருவதாக யூதர்கள் நம்பினார்கள். ஆனால் பவுல் அடியார் தனது நற்செய்தியில், "நேர்மையுடையோர் தம் நம்பிக்கையால் வாழ்வு அடைவார்" என்று கூறுகின்றார் (உரோ1:17).

கடவுளுக்கு ஏற்புடையவர்களாய் வாழும்போது மீட்புப் பெறுகின்றோம். இந்த ஏற்புடைமை நம்பிக்கையால் உண்டாகின்றது. நம்பிக்கையின் வழியாய் கடவுள் மனிதரைத் தமக்கு ஏற்புடையவராக்கினார் (உரோ 3:22). கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் ஏற்புடைமையை ஏற்பதே மீட்பு என்று உறுதிப்படுத்துகின்றார் (உரோ 1:16 -17). கடவுளின் ஏற்புடைமை சிலுவைச் சாவு. அந்தச் சிலுவைச் சாவை ஏற்றுக்கொண்டு அதன் வழியாகவே நமக்கு மீட்பு வழங்கினார். இதுவே நமது ஏற்புடைமை. "நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றி பறைசாற்றுகின்றோம்" (1கொரி 1:23). சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை ஏற்றுக்கொண்ட பவுல் அடியார் கூறுவார், "சிலுவை அழிந்துபோகிறவர்களுக்கு மடமை. அச்சிலுவை யூதருக்கு தடைக்கல்லாகவும், பிற இனத்தாருக்கு மடமையாகவும் இருக்கிறது" என்று தனது மடல்களில் கூறுகின்றார் (1கொரி 1:23).

இயேசு ஆண்டவரை ஏற்றுக்கொண்டோர் திருமுழுக்கின் வழியாகக் கடவுளின் பிள்ளைகள் ஆகின்றனர். தூய ஆவியானவர் நமது பாவங்களை நமக்கு உணர்த்தி அருள்நிலைக்கு அழைத்துச் செல்கின்றார். இயேசுக் கிறிஸ்துவோடு செயற்பட்ட கடவுளின் ஆவியானவர் நம்மோடும் செயற்படுகின்றார் என்னும் உண்மையைத் தெளிவுபடுத்துகிறார்.

பவுல் அடிகளாரின் திருமுகங்களில் இறைவெளிப்பாடு, மறை உண்மை, கிறிஸ்தவ விழுமியங்கள், நற்பண்புகள், ஆன்மீகம் போன்றவை வெளிப்படுவதைக் காண முடிகிறது. எனவே அறிவுத் தெளிவு பெற்றவர்களாய் வாழ திருமுகங்களை வாசித்து வாழ்வு பெறுவோம்.




## மனம் நந்திக் கடலாக...!



யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் அதிபர் அருட்பணியாளர் பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் காணாமல்போன செய்தியை அறிந்து புனித பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் வாகரை வாணன் அவர்கள் எழுதிய கவிதை இது.

உன்னைக் காணவில்லை என்னும் செய்தி
என்னைக் கலங்க வைக்கிறது
என் பற்று இல்லையேனும்
மண் பற்று மிக்க மதகுரு நீ
இதனால்தான்
வன்னியில் நீ கால்வைத்தாய்!

வன்னி உன் வாழ்வில் ஒரு வசந்தம்
பன்னீர் தெளிக்கும் பூக்கள்
பசுமையான காடு
பின்னிப் பிணைந்த வயல்கள்
பெருகி வரும் வாய்க்கால்கள்.



அன்னை பூமி அங்கே
அரும் பணிகள் ஆற்றினாய்
கண் உனக்கு உரிமை அதனால்
களத்திலும் நின்றாய்!

கல்லூரி எனும் கழனியில்
புல் பூண்டொழித்து
நெல் மட்டும் விளைவித்த
நேர்த்தியான உழவன் நீ!



பத்திரிசியார் கல்லூரி உனது பண்ணை
நித்தமதன் விளைச்சலுக்காக
உழைத்தவன் நீ
வித்தகன் நீ! விவேகி நீ! விலாசம் எதற்கு?

தணியாத பற்று உனக்குத் தமிழ்மீது
அதனால் அணையா விளக்காக
அனைவர் முன்னும் தினம் ஒளிர்ந்தாய்
தேசம் ஒன்று காண!

பத்திரிகை ஆசிரியனாகவும்
பவனி வந்தவன் நீ!
பாதுகாவலன் பறைசாற்றும்.



மல்லாகம் நீ பிறந்த மண்
அங்குள்ள புல்லும் செய்தி
அறிந்து புலம்பும்!

உன்னால் உயர்ந்தவர்களில் ஒருவன் நான்
என்னைக் கல்லூரிக்கும்
பின் பற்றிசியன் இதழுக்கும்
ஆசிரியன் ஆக்கியவன் நீ
சின்னவன் நான் எனினும்
சிறப்புச் செய்தாய்!



அகவை உனக்கு எண்பது
ஆயினும் உன் அகத்திற்கு
வயது இருபதே! இதனால்தான்
புதுமாத்தளனில் போய்
இருந்து கொண்டாயா?
மனம் நந்திக் கடலாகப் பொங்குகின்றது..!

## கருத்துக்களம்

திருப்பலியின்போது முன்னுரை, 1ம் 2ம் வாசகங்கள், பதிலுரைப்பாடல், விசுவாசிகள் மன்றாட்டு, நன்றிச் செபம் என்பவற்றில் பொது நிலையினர் பங்கெடுக்கின்றனர். இவற்றில் பங்கெடுக்கும்போது வெள்ளை நிற உடை அணியுமாறு சில பங்குகளில் வலியுறுத்தப் - படுகின்றது.

வெள்ளை உடை அணிவதை விரும்பா - தவர்களும் இருக்கின்றார்கள். வெள்ளைச் சேலையை அணிய பின்னிற்கும் பல பெண்களுமிருக்கின்றனர். பல இளைஞர் யுவதிகளும் இந்நடைமுறையை ஏற்றுக் கொள்வதில் உடன்பாடற்றவர்களாயுள்ளனர். அதற்கு மேலாக நற்செய்தி அறிவிப்பதற்கு நிபந்தனைகள் விதிப்பது எதுவிதத்திலும் பொருத்தமாகத் தெரியவில்லை.

*- ஏ.எஸ்.ஆர்.சி,*
*பார்மேனி வீதி, கீரி, மன்னார்*

*(இக்கருத்துக்கு சார்பாகவோ, எதிராகவோ நீங்களும் எழுதலாம். - பதிப்பாசிரியர்)*

# இலங்கையில் உதயமாகிய மெதடிஸ்த திருச்சபையின் வரலாறு

அருள்திரு. பா. அருள்ராஜ், மெதடிஸ்த திருச்சபை, மன்னார், முருங்கன் சேகரம் மன்னார்.

புரட்டஸ்தாந்து பாரம்பரியத் திருச்சபை - களில் ஒன்றான இலங்கை மெதடிஸ்த திருச்சபை இலங்கை மண்ணிலே காலடி பதித்த 195வது பிறந்தநாள் கடந்த 29.06.2009 அன்று நினைவுகூரப்பட்டது. இலங்கை மண்ணிலே இங்கிலாந்து மிஷனறியாளர்கள் வருகைதந்து சில குறுகிய இடங்களிலே கிறிஸ்துவின் நற்செய்தியைப் போதித்தும், சமூகப் பணியினை மேற்கொண்டும் மெதடிஸ்த திருச்சபைக்கு வித்திட்டனர். அன்று நடப்பட்ட வித்தானது வளர்ந்து இலங்கை முழுவதிலும் கடவுளுக்கு சாட்சியாக நற்செய்திக்கு சான்று பகிர்கின்றது.

### நற்செய்திப்பணியின் ஆரம்பம்

18ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே இங்கிலாந்திலிருந்த புரட்டஸ்தாந்து சபைகளில் வெளிநாட்டுத் தூதுப்பணிகள் பிரபல்ய - மடைந்தன. அக்காலத்திலேயிருந்த மெதடிஸ்த தலைவர்கள் இங்கிலாந்திலே தாங்கள் கண்ட தரிசனத்தை உலகத்தின் சகல பாகங்களுக்கும் எடுத்துச்செல்ல முடியுமென நம்பினார்கள்.

இத்தலைவர்களுள் கலாநிதி தோமஸ் கோக் என்பவர் மெதடிஸ்த தூதுப்பணிகளை ஸ்தாபிப்பதிலும் குறிப்பாக இலங்கைக்கு தூதுப்பணிகளை எடுத்துச் செல்வதிலும் மிகுந்த ஆர்வமுடையவராய் இருந்தார். இவர் 1747ல் பிறந்து, 1775ல் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் சிவில் சட்டப்படிப்பில் கலாநிதிப் பட்டம் பெற்றார். மெதடிஸ்த சபை ஸ்தாபகரான ஜோன் வெஸ்லி ஐயரைப் போன்று இவரும் ஆங்கிலேய சபையில் ஒரு போதகராக இருந்தார். ஆனால் அக்காலத்திலே மெதடிஸ்தர்களுடைய நற்காரியங்களாலே கவரப்பட்டார். இதன் காரணமாக ஆங்கிலேய சபையில் இருந்து வெளியேற்றப்பட்டார். பின்பு தன்னுடைய பணியை முற்றுமாக ஜோண் வெஸ்லியுடன் இணைத்துக்கொண்டார். இவருடைய பணியால் மெதடிஸ்த திருச்சபை நல்ல வளர்ச்சியைக் கண்டது. வெஸ்லி ஐயர் தோமஸ் கோக் அவர்களை தமது வலக்கரமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

கலாநிதி தோமஸ் கொக் அமெரிக்காவிலும் ஆபிரிக்காவிலும் தூதுப்பணிகளை ஆரம்பித்து அவற்றை மேற்பார்வை செய்து வந்தார். 1806ல் கலாநிதி தோமஸ் கோக் இலங்கையிலுள்ள கிறிஸ்தவ சமய நிலமையைக் குறித்து கேள்விப்பட்டு எப்படியும் இலங்கைக்கு தூதுப்பணியாளர்களை அனுப்பவேண்டுமென்று 1809ல் வில்லியம் ஒல்ட், வில்லியம் மார்ட்டின் ஹவாட் என்னும் இருவரை இலங்கைக்கு அனுப்ப முயற்சி செய்தார்.

அந்தக்காலத்தில் பல காரணங்களினால் இங்கிலாந்து மெதடிஸ்த மகாசங்கத்தினால் இலங்கைக்கு தூதுப்பணியாளர்களை அனுப்பும் முயற்சிகள் பின்னடைவாகவே இருந்தன. ஆனால் ஆங்கிலேய சபை கிழக்குப் பகுதிக்காக கல்கத்தாவில் ஒரு ஆயரை நியமனம் செய்யப் போவதாக கலாநிதி தோமஸ்கோக் கேள்விப்பட்டார். தன்னை ஒரு ஆயராக அனுப்பும்படி விண்ணப்பித்தார். இவர் ஆங்கிலேய சபையைச் சாராதவராக இருந்தபடியால் இவருக்கு வாய்ப்புக்கிடைக்கவில்லை. மிகவும் கவலையுற்ற தோமஸ் கோக் இந்தியாவுக்கு தூதுப்பணியை எடுத்துச் செல்வதற்காக தம்முடைய எல்லாவற்றையும் இழக்க விரும்புகிறேன் என்று குறிப்பிட்டார்.

தோமஸ் கோக் ஐயர் முயற்சியை விடாதவராக 1813ம் ஆண்டில் ஐரிஸ் மெதடிஸ்த மகாசங்கத்திற்கு செய்த விண்ணப்பத்தினால் அந்த ஆண்டில் அவருடைய 12 பேர் இலங்கைக்கு செல்ல அனுமதி கிடைத்தது. சந்தோஷ மிகுதியினால் கோக் ஐயர் அவர்கள் தன்னுடைய நண்பனொருவனுக்கு எழுதிய மடலிலே, "நான் இப்போது ஐரோப்பாவிற்கு மரித்தவனாகவும் இந்தியாவிற்கு வாழ்பவனாகவும் இருக்கிறேன். கடவுள் தாமே என்னை இலங்கைக்குச் செல்லும்படி கூறியுள்ளார். நான் இலங்கைக்குச் செல்லாமல் இருப்பதைப் பார்க்கிலும் நான் எனது நண்பர்களை இழந்தவனாக நிர்வாணமாக இலங்கைக் கரையில் நடப்பதை விரும்புகிறேன்." எனக் குறிப்பிட்டிருந்தார்.

கோக் ஐயருடைய இந்த ஆர்வம் 'லிவர்பூள்' என்னும் இடத்தில் அடுத்த மாதத்தில் நடந்த பிரித்தானிய மகாசங்கக் கூட்டத்தின் சவாலை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இக்கூட்டத்தின் முதல் நாள் அமர்வில் சில கருத்துக்கள் எழுந்தன. அவையாவன,

1. தோமஸ் கோக் ஐயர் 66வது வயதிலே உஷ்ண வலயத்திற்கு செல்வது அவரது உடல் நலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

2. இக்காலத்தில் இவரே எல்லா வெளிநாட்டுத் தூதுப்பணிக்கும் பொறுப்பாக இருந்து நிதி திரட்டுவதில் ஊக்கமாயிருப்பதால் இவர் சென்றால் எல்லாத் தூதுப்பணிகளும் நிறுத்தப்பட்டுவிடும். இதனால் இங்கிலாந்து மெதடிஸ்த சபையே விழுந்துவிடும் என்பனவாகும்.

அன்றைய தினம் தோமஸ் கோக் ஐயர் மிக மனம் சோர்ந்தவராய் அழுதுகொண்டு தனது தங்குமிடம் சென்று முழு இரவும் செபத்திலே தரித்திருந்து அடுத்தநாள் கூட்டத்திலே மகாசங்கமே அதிரக்கூடியதாக ஓர் அபூர்வமான பேச்சை தன்னை அனுப்பும்படியும், பணத் தேவையை பூர்த்திசெய்ய தமது சொந்தப் பணத்திலிருந்து 6,000 பவுண்களைக் கொடுப்பதாகவும் கூறினார். பின்னர் மகாசங்கம் அனுமதியை வழங்கியது. அவரோடு சேர்ந்து வில்லியம் ஒல்ட், வில்லியம் மார்ட்டின் ஹவாட், தோமஸ் கோக் ஸ்கூவான்ஸ், பென்ஜமின்கிளப் இவர்களோடு அயர்லாந்திலிருந்து 03 பேரும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் லண்டனில் தம்மை ஆயத்தம் செய்தனர். போர்த்துக்கேய மொழியைக் கற்றனர் தூதுப்பணியாளராக திருநிலைப்படுத்தப்-பட்டார்கள். தமிழ், சிங்கள மொழிகளைக் கற்பதற்கு இவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. வில்லியம் மார்டின் ஹவாட்டும், வில்லியம் ஒல்ட்டும் திருமணம் செய்து கொண்டனர். திருமதி. ஒல்ட் சற்று சுகவீனமாயிருந்தார்.

### ஆசியா நோக்கிய பயணம்....

1813ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ம் திகதி எல்லோரும் 'போட்ஸ் மவுத்' என்னும் துறைமுகத்தையடைந்தனர். அங்கே தோமஸ் கோக் ஐயர் தமது பிரியாவிடைப் பிரசங்கமாக "கடவுள்முன் எத்தியோப்பியர் கைகூப்பி நிற்க முனைவர்" என்ற சங்கீதம் 68:31ஐ மகுட வாக்கியமாகக் கொண்டு தனது நாட்டில் கடைசிப் பிரசங்கத்தை ஆற்றினார். பின் எல்லோரும் இரு குழுக்களாக இரண்டு கப்பலில் ஏறினர். 'கபல்வா' எனும் கப்பலில் தோமஸ் கோக் ஐயருடன் கிளப் திரு. திருமதி. ஹவாட்லினச் ஏர்ச்கயின், ஸ்கூவானஸ் என்போரும் 'லேடி மெல்விலி' என்ற கப்பலில் திரு. திருமதி. ஒல்ட் என்போருமாக பிரயாணத்தை ஆரம்பித்தனர். அக்காலத்தில் இங்கிலாந்துக்கும் பிரான்ஸிக்கும் யுத்தம் நடந்து கொண்டிருந்தபடியால் 30 கப்பல்கள் ஒன்றாக பிரயாணம் செய்தன. இது மிகவும் கஷ்டமான பிரயாணமாக இருந்தது.

1814ம் ஆண்டு பெப்ரவரி 10ம் திகதி ஏற்கனவே சுகவீனமாயிருந்த திருமதி ஒல்ட் மரித்து கடலில் அடக்கம் பண்ணப்பட்டார். தொடர்ந்து 1814 மே 2ம் திகதி கோக் ஐயர் தனது கடினமான படிப்பினாலும் பிரயாணக் களைப்பினாலும் சுகவீனமடைந்து மரித்தார். அவருடைய உடலையும் இந்து சமுத்திரத்தில் அடக்கம் செய்தனர். எஞ்சிய தூதுப் பணியாளர்கள் மனுஷீகமாய் கலங்கியவர்க - ளாகவும், கடவுளை முற்றும் நம்பியவர் - களாகவுமே மே மாதம் 21ம் திகதி பம்பாய் நகரத்தையடைந்தனர். ஹவாட்டைத் தவிர்ந்த ஐந்து பேர் சீனா செல்கின்ற கப்பலில் ஏறி இலங்கையை நோக்கி பயணமானார்கள்.

### இலங்கையில் நற்செய்தி பணி

1814ம் ஆண்டு யூன் மாதம் 29ம் திகதி புதன் கிழமை ஒரு நல்ல அமைதியான நாளாக இருந்தது. பம்பாயிலிருந்து திரு. மணி என்பவர் தூதுப்பணியாளர்களின் வருகைபற்றி கடிதம் மூலம் அறிவித்திருந்தார். இதன் நிமித்தம் 'ஏஸ் பென்சர்' என்னும் கப்பல் காலித்துறைமுகத்தில் காணப்பட்டதையடுத்து இரண்டு படகுகள் அனுப்பப்பட்டது. சிறிய படகில் லின்ஸ் ஸ்கூவானன்ஸ் கிளப் என்போர் ஏறி கரையை அடைந்தனர். ஒல்ட் ஏர்ஸ்கின் என்போர் கப்பலிலுள்ள தங்கள் உடமைகளை ஏற்றுவதற்காகத் தாமதித்து பெரிய படகில் அவற்றை ஏற்றிக்கொண்டு புறப்படுகையில் படகு காற்றினால் இழுபட்டு 06 மணி நேரம் கடும் கஷ்டப்பட்டு அதிகாலை 2.30 மணிக்கு வெலிகம என்னும் இடத்தில் கரை சேர்ந்தார்கள். அங்கிருந்து பல்லக்கு மூலம் காலி வந்து சேர்ந்தனர். இது அவர்களுக்கு அளவில்லா மகிழ்ச்சியைக் கொடுத்தது.

காலியில் அவர்கள் தங்குவதற்கு இடம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. யூலை 03ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலி டச்சத் தேவாலயத் திற்கு ஆராதனை நடத்த அழைக்கப்பட்டனர். அந்த ஆராதனையில் ஜேம்ஸ் லினச் ஆராதனை ஒழுங்கை வாசித்தார். பேச்சு வன்மையுள்ள தோமஸ் ஸ்கூவான்ஸ் அருளுரை ஆற்றினார்.

"கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க உங்கள் நகருக்கு முதல் வந்தவர்கள் நாங்களே" (2 கொரி. 10:14) என்பது அவரது பிரசங்கத்தின் மகுட வாக்கியமாக இருந்தது. இது அந்த ஆராதனையில் பங்கு பற்றியவர்களை நன்றாகக் கவர்ந்தது.

கொழும்பில் போதியளவு ஆங்கிலப் பாடசாலைகள் இருந்தபடியினால் அக்கால ஆங்கிலேய ஆளுனர் தூதுப்பணியாளர்களை யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் ஆங்கிலப் பாடசாலைகளை அமைத்து தங்கள் ஊழியங்களைச் செய்யுமாறு வேண்டுதல் விடுத்தார். அதன்படி 05 தூதுப்பணியாளர்களும் 1814ம் ஆண்டு யூலை 11ம் திகதி ஒரு சிறிய கூட்டம் கூடி தாங்கள் செல்ல வேண்டிய இடங்களைத் திருவுளச்சீட்டு மூலம் தீர்மானித்தனர்.

அதற்கமைய யாழ்ப்பாணம் - ஜேம்ஸ் லின்ஸ் தோமஸ் ஸ்கூவான்ஸ், மட்டக்களப்பு – வில்லியம் ஒல்ட், காலி - பென்ஜமின்கிளப், மாத்தறை – ஜோர்ஜ் ஏர்கின்ஸ். அதன்பின் யூலை 14ம் திகதி ஒரு திருவிருந்து வழிபாடு நடத்தி பிரியாவிடை பெற்றுக்கொண்டு தங்களுக்கு நியமிக்கப்பட்ட இடங்களுக்கு காலியிலிருந்து புறப்பட்டனர். அவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் ஒன்றாக ஊழியம் செய்ய விரும்பியபோதும் ஜோண்வெஸ்லி, கலாநிதி தோமஸ் கோக் ஆகிய வழிகாட்டிகளுடைய ஆவியைப் போன்று பல இடங்களுக்கும் சென்று பணிபுரிய ஏவப்பட்டனர்.

- *"இலங்கை மெதடிஸ்த திருச்சபை வடக்கு, கிழக்கு, திருமாவட்ட அவை வெளியீட்டில் இருந்து"*

# குருக்களின் வழியாக நமது வாழ்வில் இறைவனின் உடனிருப்பு

## குருக்கள் ஆண்டுச் சிறப்புக் கட்டுரை

ஜே. பொ. அன்ரனிதாஸ்
மறைவாழ்வுப்பணியாளர், சூரியக்கட்டைக்காடு, நானாட்டான்



ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ் தலிக்கம் என்னும் மறையுண்மைகளை விசுவாச வாழ்வாகக் கொண்டுவாழும் எமது திருச்சபையானது ஒவ்வொரு பணிகளையும் திட்டமிட்டு முன்னெடுப்பது சிறப்பாக உள்ளது.

இதனடிப்படையில் இவ்வாண்டின் நடுப்பகுதியிலிருந்து பவுலடியாரின் ஆண்டு முடிவடைந்து, "குருக்களுக்கான ஆண்டு" ஆரம்பமாகின்றது. திருத்துவத்திற்கு அடுத்த படியாக திருத்தந்தை, ஆயர்கள், குருக்களை நாம் காண்கின்றோம். இவர்களின் பணியானது விசுவாசத்திற்கு மக்களை இட்டுச் செல்லும் நற்காரியமாக அமைகின்றது.

குருக்கள் இறைவனின் கல்வாரிப் பலியை நிறைவேற்றவும், திருச்சபையின் திருவருட் சாதனங்களை ஒப்புக்கொடுக்கவும் சமூகப்பணி புரியவும் ஆசீர்வதிக்கப்பட்ட கரங்களைக் கொண்டவர்களாகத் திகழ்கின்றனர். இறைமகன் இயேசுவின் முப்பணிகள் எவ்வாறு அமைந்ததோ அதே அடிச்சுவடுகளைப் பின்பற்றி இன்றைய குருக்கள் பணிக்குருத்துவத்திற்கு தங்களை அர்ப்பணித்து உயிர்த்தியாகம் செய்யுமளவுக்கு அவர்களின் தியாக சிந்தை வளர்ச்சி கண்டுள்ளதை நாம் எமது மறை மாவட்டத்தில் காணக்கூடியதாக உள்ளது.

சாதாரண சூழ்நிலைகளில்கூட குருக்களின் வழிகாட்டலையும் அர்ப்பணிப்புக்களையும் நாம் காண முடிகிறது. இறையேசு வாழ்ந்த வாழ்வின் நிழலில் பார்க்கையில் இறைவன் தாமே குருக்கள் மூலமாக விசேடவிதமாக எமது வாழ்வில் உடனிருந்து செயற்படுவதை உணர முடிகிறது. பல தசாப்த காலமாக நாம் முகம் கொடுத்துவரும் யுத்த அனர்த்தங்கள் மத்தியில் இறைவன் தனது உடனிருப்பை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உணர்த்தி வருகின்றார். அன்று தொட்டு இன்று வரை இவையனைத்தும் நிறைவேறி வருகின்றன.

➢ நாளாந்தம் துன்பப்பட்டு பசி பட்டினியால் வாடி வதங்கி, தாங்கொண்ணாத் துயரத்தை அனுபவிக்கும் மக்களோடு நானிருக்கின்றேன் என இறைவன் உணர்த்துகிறார். ஆம், அநேக நிவாரணப் பொருட்களுடன் உதவி செய்ய விரைந்துசென்ற அருட்பணி. பாக்கிய றஞ்சித்தின் மரணம் நமக்கு உணர்த்துவது என்ன? "பசி, பிணியால் மடிகின்ற மக்களுடன் நானும் மடிகின்றேன்" என இறைவன் கூறுவதே றஞ்சித் அடிகளாரின் மரணம் எமக்குத் தரும் செய்தியாகும்.

➢மனித உரிமைகள் மறுக்கப்பட்டு, மனித மாண்பு குழிதோண்டிப் புதைக்கப்பட்டு யாருமே கொடுக்க முடியாத - அமைதிக்காக உழைத்த அருட்பணி. கருணாரெட்னம் அடிகளார் இறப்பில் இறைவன் கூறுவது, "உனது மனித உரிமைகளை பெற்றுத்தர கருணாவாக நான் மடிந்தேன்" என்பதாகும்.

➢சாவே வாழ்வாக, போராட்டமே தாங்க முடியாத சுமையாக, குற்றுயிராயும் மாறாத வடுக்களோடும் வாழும் மக்களுடன் தனது உடனிருப்பை இறைவன் அருட்பணி. வசந்த சீலன் மூலமாக வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்.

➢அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு அநியாயமாக சந்தேகப்பட்டு எதிரியாக முத்திரை குத்தப்பட்டு அழிக்கப்பட்ட மக்களுக்குள் தானும்கூட துன்புறுத்தப்பட்டதாக அருட்பணி. மேரி பஸ்ரியனின் படுகொலை மூலம் இறைவன் நமக்குக் கூறுகின்றார்.

➢அநியாய ஆட்கடத்தல், சிறைவாழ்வு, சித்திரவதைகள் சுமக்க முடியாத சுமைகளைக் கொண்டு வாழும் மக்களுடன் வாழ்வதாக அருட்பணி. ஜிம்பிறவுன் அடிகளாரின் மூலம் இறைவன் நினைவூட்டுகின்றார்.

➢தாய் தந்தையைப் பிரிந்து, ஆதரிப்பாரின்றி அனாதைகளாக வாழ்ந்தவர்களுக்கு நல்ல துணையாக இருந்து தான் வழிகாட்டுவதை அருட்பணி. நோபட் அடிகளாரின் இறப்பின் மூலம் இறைவன் வெளிப்படுத்தினார்.

இவ்வாறாகக் காலத்திற்குக் காலம், இடம் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் தனது உன்னத பணிகளை இவ்வுலகில் ஆற்றி வரும் குருக்களின் மூலமாக இறைவன் தனது உடனிருப்பை வெளிப்படுத்தி வருகிறார்.

எனவே இந்தக் குருக்களின் ஆண்டிலே இறைவனின் உடனிருப்பை எமக்கு நினைவூட்டிக்கொண்டிருக்கும் எமது குருக்களுக்காக செபிப்போம். அவர்களின் அனைத்து முயற்சிகளுக்கும் நாம் துணையாக இருப்போம்.

வரலாறு

– எம். ஏ. காதர் –

# மன்னார் மாதலத்தில் மங்கி மறைந்த கிராமங்கள்

சுமார் 350 கிராமங்களையும் ஒரேயொரு பட்டினத்தையும் (தற்போது நகரமாகிவிட்டது) உள்ளடக்கியது மன்னார் மாவட்டம். இம்மாவட்டம் சுமார் ஐயாயிரம் ஆண்டுகள் வாழ்வியல் வரலாற்றைக் கொண்டது. பக்திநெறி தவழும் பண்பாட்டுக் கிராமங்களையும் பல்வேறு சரித்திரச் சான்றுகளையும் கொண்டது. நான்கு மதங்களும், மூவின மக்களும் எவ்வித பேதங்களுமின்றி ஒன்றாய் வாழ்ந்த வரலாற்றைக் கொண்டது இம்மன்னார் மாதலம்.

சுமார் ஐயாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த மாந்தைத் திருக்கேதீஸ்வர சிவாலயம், அதையொட்டிய சர்வதேச துறைமுகம் அதேபோல் முசலிப் பிராந்தியத்தில் ஆண்கள் வாடையே பிடிக்காத அல்லிராணி (பிற்காலத்தில் அவள் இஸ்லாத்தைத் தழுவி தனது பெயரை "பஸ்கீஸ் உம்மா" என மாற்றிக்கொண்டாள்) ஆண்டு வந்த முசலி சாம்ராஜ்யம், ஆயிரத்து இருநூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த அரேபியரின் வருகை, அவர்கள் கொண்டுவந்த ஒட்டகங்கள், குதிரைகள், கழுதைகள், அவர்கள் நாட்டி வைத்த பெருக்கமரங்கள், கட்டிவைத்த மினாராக்கள் (வெளிச்சக்கூடுகள் - கலங்கரை விளக்கங்கள்), சுமார் 600 ஆண்டுகள் பழமை பேசும் போத்துக்கேயர் வரலாறு, அவர்கள் அமைத்துவைத்த பிரமாண்டமான கற்கோட்டைகள், அகழிகள், சுரங்கப் பாதைகள், அதன் பின்னர் ஒல்லாந்தர் வருகை கடைசியில் சுமார் 150 ஆண்டுகள் பிரித்தானியரின் ஆட்சி, அதன்போது இங்கு இடம்பெற்ற பல்வேறு அபிவிருத்திகள், வாக்குரிமை, ஜனநாயகத் தேர்தல்கள், பஞ்சாயத்துகள், நாடாளுமன்றம், உயர் சபை (செனற்) நீதிமன்றங்கள் என மன்னாரின் வளமும் வாழ்வும் மிகவும் பரந்தது.

விஞ்ஞானத் தொழில் நுட்ப வளர்ச்சிகளினால் பல்வேறு அபிவிருத்திகளை இந்த நாடு கண்டபோது இந்த மாற்றங்கள் அனைத்திற்கும் மன்னார் சளைக்காமல் ஈடுகொடுத்து வந்தது.

600 ஆண்டுகளுக்கு முன்னர் வரலாற்றில் இடம்பிடித்த வேதசாட்சிப் படுகொலையையும் புதுகுடியிருப்பு – மினாரா நகர் 60 தாலியறுத்த குளம் படுகொலையையும் தவிர மன்னார் மாதலத்தில் எவ்வித வன்முறையுமற்ற ஒற்றுமை வாழ்க்கையைத்தான் காணமுடிகின்றது.

இந்த அறுநூறு வருட வரலாற்றில் மன்னாரின் பல கிராமங்களும் அழிந்துபோயின, அழிக்கப்பட்டன, இடம் பெயர்ந்தன. அவற்றின் ஒருசில கிராமங்களின் வரலாற்றைத் தொட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ் வாய்வு முற்றுமுழுதாக எனது சொந்த முயற்சியேயாகும். இதற்காக நான் வரலாற்றைப் படிக்கவில்லை. எனவே இவ்வாய்விற்கு நான் மட்டுமே பொறுப்பு.

மன்னார் மாதலத்தின் மறைந்த கிராமங்களைப் பற்றிச் சிந்திக்கின்றபோது, முதலாவது மறைவு 1450 களின் பின்னரே ஏற்பட்டது என நினைக்கின்றேன். கத்தோலிக்க மக்கள் பக்திப் பரவசத்துடன் வாழ்ந்து வந்த நன்னீர் ஊற்றுக்கள் சுரக்கும் பட்டிதோட்டம் என்று அழைக்கப்படும் கீரி என்ற கிராமமும், புதுகுடியிருப்பு என்ற கிராமம் உருவாகுவதற்குக் காரணமாயிருந்த 'மினாரா நகர்' என்ற முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்த கிராமமாகும். பட்டிதோட்டம் சங்கிலிய மன்னனது படையினராலும், மினாரா நகர் போத்துக்கேயர்களினாலும் அழிக்கப்பட்டமை வரலாறாகும்.

அதன் பின்னர் பிரித்தானியர் வருகையால் பல கிராமங்கள் இடம்பெயர்ந்தன. எமக்குச் சுதந்திரம் கிடைத்த வேளையில் சில கிராமங்கள் அழிக்கப்பட்டன. பல கிராமங்கள் மங்கி மறைய ஆரம்பித்தன. 1901ம் ஆண்டு ஆங்கிலேயர் மன்னார் முருங்கனை ஒட்டிய ஒரு பகுதியில் பிரமாண்டமான குளத்தைக் கட்டி அதற்கு ஜயன்ற்ஸ் ராங் ((Gaint's Tank) கட்டுக்கரைக்குளம் எனவும் பெயரிட்டனர். சுமார் 35 ஆயிரம் ஏக்கர் பரப்புள்ள இக்குளம் அக்காலத்தில் இலங்கையின் இரண்டாவது பெரிய குளம் என அழைக்கப்பட்டது. இக்குளத்தைக் கட்டுவதற்காக சுமார் 35 கிராமங்கள் இடம்பெயர்ந்தன. அவற்றில் பல இன்று மறைந்துபோயின. அதுபோல் மன்னார் தீவகற்பத்தில் மன்னார் பட்டினத்தில் வாணிபத்தெரு, கோந்தைப்பிட்டி என இரு கிராமங்கள் (வட்டாரங்கள்) மறைந்துபோயின. தலைமன்னார் கிராமத்தில் பழைய பாலம் - கப்பல் ஒலி தர்ஹா என இரு கிராமங்கள் அழிக்கப்பட்டன.

30 ஆண்டுகால விடுதலைப் போராட்டத்தின் பயனாக மன்னார் முஸ்லிம்கள் 1990ல் ஒட்டுமொத்தமாக வெளியேற்றப்பட்டதன் விளைவாக மன்னார்த் தீவில் சுமார் 10 கிராமங்களும் மாந்தை மேற்கில் சுமார் 5 கிராமங்களும் அழிக்கப்பட்டன. இதேபோல் சுமார் 50ற்கும் அதிகமான தமிழ் கிராமங்களும் அழிவுண்டன.

மன்னார் எருக்கலம்பிட்டி கிராமம் சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்னர் அழிவுற்று பின்னர் உயிர்பெற்றது. மன்னார் மாவட்டத்திலேயே அதிக முஸ்லிம்கள் வாழ்ந்த கிராமமாக 1990க்கு முன்னர் எருக்கலம்பிட்டிக் கிராமம் இருந்து வந்தது.

மன்னார் பட்டினசபையில் ஏழு வட்டாரங்கள் இருந்தன. மூர்வீதி, உப்புக்குளம், பள்ளிமுனை, பனங்கட்டுக்கொட்டு, பெரியகடை, சின்னக்கடை, பெற்றா என்பனவே அவைகள். மூர்வீதிக்கும் உப்புக்குளத்திற்கும் இடைப்பட்ட சிறிய நிலப்பரப்பில் 'வாணிபத்தெரு' என்ற பெயரில் சுமார் 25 இந்துக் குடும்பங்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களின் பிரதான தொழில் செக்கில் எண்ணெய் எடுப்பதாகும். தெய்வ பக்தியுடைய இவர்களில் அனேகமானோர் மிகவும் ஏழைகள். அனேகமாக அனைத்தும் ஓலைவீடுகள்தான். ஆனாலும் வாசம் நிறைந்த சுவையான தேங்காய் எள்ளு ஆகியவற்றின் எண்ணெய் இங்கு உற்பத்திசெய்யப்பட்டு மாவட்டம் முழுவதும் விற்பனை செய்யப்பட்டு வந்தது. வெளிமாவட்ட மக்களும் வியாபாரிகளும் இங்கே வந்து எண்ணெய் பெற்றுச் செல்வர்.

இங்கு வாழ்ந்து வந்த பிரபல தொழில் அதிபர் கே. ஏ. கே. என்று எல்லோராலும் அறியப்பட்ட கந்தசாமி ஆவார். பிற்காலத்தில் இவர் கடன் தொல்லையினாலும் கொடிய வியாதியினாலும் துன்புற்று இறந்துபோனார். மன்னார் வரைபடத்தில் வாணிபத்தெரு 1948ல் நீக்கப்பட்டுள்ளது. அமரர் கந்தசாமியுடன் வாணிபத்தெருவின் சகாப்தம் முடிவுற்றது. மேலும் பல அழிவுற்ற கிராமங்களின் வரலாற்றை பிறிதொரு சந்தர்ப்பத்தில் தருகிறேன்.

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் போட்டி இல.75

கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் திருமுகத்திலிருந்து நாம் இப்போது இரண்டாம் திருமுகத்துக்குள் நுழைகின்றோம்.

நற்செய்தி அறிவிப்புப் பணியில் புனித பவுல் சந்தித்த பல வகையான மக்களில் கொரிந்து மக்கள் பலவீனம் நிறைந்தவர்களாகவும் பல்வேறு வகையான உடல் உளச் சிக்கல்கள் நிறைந்தவர்களாகவும் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதற்கு அந்நகரத்தில் பல்லின மக்கள் நெருங்கி வாழ்தலும் மாறுபட்ட கலாச்சாரங்களும் மதவழிபாடுகளும் காரணமாக இருக்கலாம்.

இவர்களுக்கு எழுதும் மடல்களில் பவுல் ஒரு நற்செய்தி அறிவிப்பாளர் என்பதைவிட அவர்களை வழிநடத்தும் தந்தை போன்ற தோற்றம் வெளிப்படுகின்றது. கொரிந்து மக்களின் தவறுகளினால் அவர் கோபமடைகின்றார். பலவீனங்களில் இரங்குகின்றார். நிறைவுகளில் அகமகிழ்கின்றார். அவர்களது துயரங்களில் வருந்தியும் மகிழ்வுகளில் மகிழ்ச்சியும் அடைகின்றார்.

இனி எமது வினாக்களுக்கு வருவோம். வினாக்கள் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகம் 1ம் அதிகாரம் முதல் 4ம் அதிகாரம் வரையுள்ள பகுதியிலிருந்து தொகுக்கப்படுகின்றன.

1. கொரிந்து மக்களுக்கான இரண்டாவது மடலை புனித பவுல் யாருடன் இணைந்து எழுதுகின்றார்?
2. புனித பவுலுக்கும் சகோதரர்களுக்கும் ஆசியாவில் ஏற்பட்ட கொடிய துன்பம் எதற்காக ஏற்பட்டது என்று புனித பவுல் கூறுகின்றார்?
3. 'ஆமேன்' என்னும் சொல்லுக்குப் பொருள் என்ன?
4. துரோவா நகரிலிருந்து புனித பவுல் ஏன் மசிதோனியாவுக்கு வந்தார்?
5. புனித பவுலின் நற்செய்திக்கான நற்சான்றுக் கடிதமான கொரிந்து மக்கள் மையால் எழுதப்பட்டவர்கள் இல்லை என்றால் எதனால் எழுதப்பட்டவர்கள்?
6. புதிய உடன்படிக்கையின் பணியாளராகும் தகுதியை பவுலுக்கு வழங்கியது கடவுள். அவ்வுடன்படிக்கை எதனைச் சார்ந்தது?
7. தண்டனைத் தீர்ப்பளிக்கும் திருப்பணி எது?
   விடுதலை தீர்ப்பளிக்கும் திருப்பணி எது?
8. புனித பவுல் பூரண பிரமச்சாரியத்தைக் கைக்கொண்டார் என்பதை உறுதிப்படுத்தும் வார்த்தைகள் எவை?
9. "நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை. குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை. துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை. வீழ்த்தப்பட்டாலும் அழிந்துபோவதில்லை" என்று நம்பிக்கையோடு சொல்லும் வல்லமை யாரால் பவுலுக்கு வழங்கப்பட்டது?
10. நம்மோடு நிலைத்திருப்பவை எவை? நிலையற்றவை எவை?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 73இற்கான கேள்விகளுக்கு 33 பேர் விடையளித்திருந்தனர்.

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:**

**ம. டிலூக்கா, தி.கு.க.மடம், வங்காலை**

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்**

1. செ. இன்பென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு
2. இ. லிதியாள், 7ம் வட்டாரம் வங்காலை, மன்னார்.
3. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு
4. என். டயலின் றோச், இல. 49 பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
5. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்
6. றொ. டயானா கூஞ்ஞ, தரம் 8, தலைமன்னார் J. R. S. வீட்டுத்திட்டம்
7. என். ஜெக ஜீவன் றோச், ஆண்டு 8, புனித லூசியா ம.வி. பள்ளிமுனை
8. நா. பியூலா, 69A, மடுக்கரை, நானாட்டான்
9. ஆனந்தன் நிலானி, நொச்சிக்குளம், உயிலங்குளம்
10. செ.வளன் நிலுஜன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு



# மன்னார்ப் பிரதேசச் செய்திகள்



## வீதித் தடையால் விலை அதிகரிப்பு

நாட்டில் நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளபோதிலும் மன்னாரில் வீதித் தடைகள் அகற்றப்படாமையினாலும் மதவாச்சிப் பிரதான தடைமுகாம் கெடுபிடிகள் நீக்கப்படாமையினாலும் மன்னாரில் சில பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதோடு பல பொருட்கள் அதிகவிலைக்கும் விற்கப்படுகின்றன.

இதன்படி எரிகலன்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதால் இங்கு எரிகலன்கள் இரட்டை விலைக்கு விற்கப்படுகின்றன. இலத்திரனியல் உபகரணங்கள் என்பனவும் பெறமுடியாத பொருட்கள் ஆகிவிட்டன.

அத்துடன் உணவுப் பொருட்கள் பலவும் அதிக விலைக்கே விற்கப்படுகின்றன. கோழி இறைச்சி ரூ.500.00 வரையிலும் மாட்டிறைச்சி ரூபா.400.00 வரையிலும் மரக்கறி வகைகள் ரூபா 250.00 வரையிலும் விற்கப்படுகின்றன. *(மக்கள் காதர்)*

## மன்னாரில் மூத்த பிரஜைகள் ஒன்றியம்

மன்னார் மாவட்டத்தில் இயங்கி வரும் முதியோர் சங்கங்களை ஒன்றிணைத்து "மூத்த பிரஜைகள் சங்க ஒன்றியம்" என்ற பெயரில் சம்மேளனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னோடியாக அன்மையில் மன்னார் பள்ளிமுனையில் முக்கியஸ்தர் சிலர் ஒன்றுகூடி ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடாத்தினர்.

அதன் விளைவாகத் தற்காலிகச் செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதன் விபரம் வருமாறு: தலைவர் : எஸ். பாக்கியம் லம்பேட் (ஓய்வு பெற்ற அதிபர் - சமாதான நீதவான்), உபதலைவர்: சாமிநாதன் நடராஜா (தலைவர் விடிவெள்ளி - முதியோர் சங்கம்), செயலாளர் : மக்கள் காதர் (தலைவர் சமாதானத்திற்கும் மீளினிக்கத்துக்குமான வளங்கள்), போஷகர்கள் : மன்னார் அரச அதிபர், மன்னார் பிரதேச செயலர், முசலி பிரதேச செயலர், நானாட்டான் பிரதேச செயலர்.

## வைத்தியசாலையில் அரைநிரந்தர விடுதிகள்

காயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களை தங்கவைத்து சிகிச்சை அளிப்பதற்கென அரை நிரந்தர விடுதிகளை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் அமைத்து வருகின்றது.

(ஜே.எம்.ஜோசப் வெர்னாண்டோ)

## மன்னார் மதத்தலைவர்களுக்கு கௌரவம்

மன்னாரில் பணியாற்றும் நான்கு மதத்தலைவர்கள் சர்வோதயம் நிறுவனத்தினால் "சேவை சன்மான விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டிருக்கின்றனர். கடந்த கால போர்ச் சூழ்நிலைகளின் மத்தியிலும் சமாதானம், நல்லிணக்கம், மற்றும் மனிதநேயப் பணிகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றிய கிறிஸ்தவம், இந்து, இஸ்லாமிய மற்றும் பௌத்த மதங்களைச் சேர்ந்த மதத்தலைவர்களுக்கே மேற்படி விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மன்னார் மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஏ. விக்ரர் சோசை, பேசாலைப் பகுதியில் கடமையாற்றும் இந்துமத குரு தர்மகுமாரசர்மா ஐயர், மன்னார் சாந்திபுரத்தில் அமைந்துள்ள பௌத்த விகாரையின் விகாராதிபதி பஸ்கெஸ்துவர விமலரத்ன தேரர், மன்னார் மூர்வீதி முகைதீன் யும்மா பள்ளிவாசல் மௌலவி ஆசீம் ஆகியோரே விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருக்கின்றனர். மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அ. நிக்கலொஸ் பிள்ளையினால் மாவட்ட செயலகத்தில் வைத்து இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

(எஸ். ஆர். லெம்பேட்)

## காற்றாடி கழன்று வீழ்ந்ததில் இருவர் காயம்

மன்னார் பொது வைத்தியசாலையில் மின்சாரக் காற்றாடி கழன்று விழுந்ததால் பெண் ஒருவரும் அவரது இரண்டு வயது மகளும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

கடந்த 09.07.2009 அன்று நண்பகல் வாராந்தச் சிகிச்சைக்காக பெருந்தொகையான நோயாளர்கள் காத்திருந்த வேளையில் சிகிச்சைக்காக வந்திருந்த தாயும் மகளும் வைத்தியரை அணுகிய வேளையில் திடீரென தலைக்குமேல் சுழன்றுகொண்டிருந்த காற்றாடி அறுந்து வீழ்ந்தது. தாய் உடனடியாக சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். அவரது தலையில் எட்டுத்தையல்கள் வரை போடப்பட்டுள்ளதுடன் பிள்ளைக்கும் வைத்தியம் செய்யப்பட்டது.

*(மக்கள் காதர்)*

## காயமடைந்தவர்களுக்கு சத்துணவுத் திட்டம்

காயமடைந்த நிலையில மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சத்துணவு வழங்கும் திட்டத்தினை மன்னார் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (Save tha Children) முன்னெடுத்து வருகின்றது.

(எஸ். சுதர்ஸன்)

## ஆவணங்கள் பெறுதல் பற்றிய கருத்தரங்கு

மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயம் கடந்த இரு மாதங்களில் ஏழு மனித உரிமைப் பயிற்சிகளை முசலி இடம்பெயர்ந்த மக்களுக்கும், மனித நேயப் பணியில் ஈடுபட்டிருக்கும் தொண்டு ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களுக்கும் நாடாத்தியுள்ளது.

மேலும் மனித நேய ஆர்வலர்கள் மனித நேயப் பணியில் ஈடுபடுபவர்களின் கலந்துரையாடல் ஒன்று வாழ்வுதய பயிற்சி மண்டபத்தில் கடந்த 12-05-2009ல் நடைபெற்றது. இதில் மாவட்டத்தில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக பலர் தமது ஆதங்கங்களையும், கருத்துக்களையும் தெரிவித்தனர்.

அத்துடன், முசலி, வுன்னியில் இடம்பெயர்ந்த மக்களின், காணாமல்போன அல்லது தொலைந்த ஆவணங்களான, இறப்பு, பிறப்பு, திருமண, காணிப்பதிவு, தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ் போன்றவற்றை எவ்வாறு? எங்கு? எப்படி? பெற்றுக்கொள்ள முடியும் என விளக்கி எழுதப்பட்ட துண்டுப்பிரசுரம் ஒன்று சகலருக்கும் விநியோகிக்கப்பட்டது.

(எஸ். ஆர். லெம்பேட்)



மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் சாரணர்களுக்கான 2 நாள் பயிற்சிப் பாசறையும் சின்னம் சூட்டும் வைபவமும் அண்மையில இடம்பெற்றபோது. ( எஸ். ஆர். லெம்பேட்)

## இலக்கியத் தடாகம்

# விவிலியமும் தமிழ் இலக்கியமும்

ஒப்பீட்டுத் தொடர் 8.

- அருள் . செல்லத்துரை

### திருவிவிலியம்

## தந்தை இறைவன்

1.(அ) ஆண்டவரே நீரே எங்கள் தந்தை – எசா 64:8
(ஆ) வலிமைமிகு இறைவன் என்றுமுள தந்தை– எசா9:6
(இ) விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே – மத் 6:9
2 "நான் உங்களுக்குத் தந்தையாயிருப்பேன்: நீங்கள் எனக்குப் புதல்வரும் புதல்வியருமாயிருப்பீர்கள்" என்கிறார் எல்லாம் வல்ல ஆண்டவர்.– 2 கொரி. 6:18
3.(அ) திக்கற்ற பிள்ளைகளுக்குத் தந்தையாகவும் கணவனை இழந்தாளின் காப்பாளராகவும் இருப்பவர் தூயகத்தில் உறையும் கடவுள். – திபா 68:5
(ஆ) அவருக்கு ஏற்புடையவர்களாகக் கருதப்படும் அனைவருக்கும் அவர் தந்தையானார்.–உரோ 4:11
4. விண்ணுல்கிலும் மண்ணுலகிலும் உள்ள ஒவ்வொரு குடும்பமும் உண்மையிலேயே குடும்பமாய் விளங்குவதற்குக் காரணமாய் இருக்கிற தந்தையிடம் நான் மண்டியிட்டுக் வேண்டுகிறேன். எபே 3:14 -15
5. என்னை அனுப்பிய தந்தை ஈர்த்தாலொழிய எவரும் என்னிடம் வர இயலாது. – யோவா 6:44
6. அவற்றை எனக்கு அளித்த என் தந்தை அனைவரையும்விடப் பெரியவர். – யோவா 10:29
7.(அ) "நானும் தந்தையும் ஒன்றாய் இருக்கிறோம்" என்கிறார். – யோவா 10:30
(ஆ) 'தந்தையை எங்களுக்குக் காட்டும்' என்று நீ எப்படிக் கேட்கலாம்? நான் தந்தையினுள்ளும் தந்தை என்னுள்ளும் இருப்பதை நீ நம்புவதில்லையா? – யோவா 14:9,10
(இ) என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை. – யோவா 14:6
8. "நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்றார் – லூக் 2:49
9. இயேசு வானத்தை அண்ணாந்து பார்த்து வேண்டியது: "தந்தையே ... நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களுக்காகவே வேண்டுகிறேன் .... நீர் எனக்கு அளித்த உம்பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்"– யோவா 17:1,9, 11

*இடப்பக்கங்களில் விவிலிய மேற்கோள்கள் வரிசை எண்ணிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. வலப்பக்கங்களில் அவற்றிற்குப் பொருத்தமான தமிழ் இலக்கிய மேற்கோள்கள் அதே வரிசை எண்களில் நேருக்கு நேர் கொடுக்கப் - பட்டுள்ளன. ஆயினும் ஒன்றுக்குப் பல பொருத்தங்கள் அமைவதையும் காணலாம்.*

### தமிழ் இலக்கியம்

## தந்தை இறைவன்


1.(அ) எந்தை நீ – சுந்தரர் தேவாரம் 560
(ஆ) எந்தையைக் கண்டேன் இடரெலாம் நீங்கினேன் - திருஅருட்பா 4902
(இ) அன்னை நீ என்னுடைய அப்பன் நீ – திருஅருட்2138
(ஈ) எந்தாய், எந்தை பெருமானே – திருவாசகம் 5:24
(உ) எந்தாயே, என்னை ஈன்றானே – திருஅருட்பா 459
(ஊ) எந்தையே, தில்லை எம் இறையே, குகன் தந்தையே – திருஅருட்பா 1105
(எ) ஈன்றவனே அன்பர் இன்னுயிர்க்கு இன்புறும் இன்னமுதம் - திருஅருட்பா 1208
(ஏ) ஈன்றுகொண்ட என் தந்தையும் தாயும் யாவும் நீ – திருஅருட்பா 1332
(ஐ) அம்மை அப்பன் என் ஆருயிர்த் துணைவன் – திரு அருட்பா 1333
(ஒ) தந்தையாய் என்னுடைய தாயாய்த் தகைசான்ற சிந்தையாய் என்னருமைத் தேசிகனாய் .... நின்றாய் – திருஅருட்பா 2138
2. (அ) அன்னே எனைத்தந்த அப்பா என்றேங்கி அலறுகின்றேன் - திருஅருட்பா 45
(ஆ) தாயும் நீயே தந்தை நீயே சங்கரனே – திருஞானசம் பந்தர் தேவாரம் 507
3. (அ) பதியும் அப்பனும் அன்னையும் குருவும் நற் பயன்தரு பொருளாய கதியும் நின்திருக் கழலடி அல்லது கண்டிலேன் எளியேனே. – திருஅருட்பா 145
(ஆ) 1. தாயாகித் தந்தையாய்த் தமராய் ஞான சற்குருவாய்த் தேவாகித் தழைத்த ஒன்றே – திருஅருட்பா 111
2. எந்தையாய் எம்பிரான் மற்றும் யாவர்க்கும் தந்தை தாய் தம்பிரான் தனக்கு அ.்.திலான் - திருவாசகம் 51
4. (அ) எந்தையே என்றும் எம்பெருமான் என்றும் சிந்தையுள் வைப்பவன் சொல்லுவன் பாவியேன் எந்தை எம்பெருமான் என்று வானவர் சிந்தையுள் வைத்துச் சொல்லும் செல்வனையே – நாலாயிரத் திவ். பிரபந்தம்: நம்மாழ்வார் திருவாய் மொழி
(ஆ) மன் உயிர்க்கும் தாய்தந்தை குருதெய்வம் உறவுமுதல் மற்றும் நீயே – திருஅருட்பா 2741
(இ) என்னப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தான் ஈசன். – திருவாசகம் 12:2
(ஈ) அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும் அம்மை அப்பா இனி ஆற்றேன். – திருஅருட்பா 3386
5. அத்தா உன் அடியேனை அன்பால் ஆர்த்தாய். – தேவாரம் 936: காண் திருஅருட்பா 83
6. (அ) தந்தையே என்னருமைத் தந்தையே தாயே – திருஅருட்பா: விண்ணப்பக் கலிவெண்பா:280
(ஆ) என்னுடை ஆரமுது எங்கள் அப்பன் எம்பெருமான் –திருவாசகம் 9:13
7. எளிவந்த எந்தைபிரான் என்னை ஆளுடை என் அப்பனே – திருவாசகம் 6:15
8. வெப்பொடு விரவி ஓர் வினைவரினும் அப்பா உன் அடியலால் அரற்றா என் நா – சம்பந்தர் தேவாரம்
9. அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிய வேண்டும் - திருஅருட்பா 4079

## சமைப்போம் சுவைப்போம்

### தொகுத்துத் தருவது

எம். செல்வராணி
176/4, ஜெம்பட்டாவீதி, கொழும்பு - 13.

### சிக்கன்–தக்காளி சூப்



**தேவையான பொருட்கள்**

கோழி இறைச்சி - 100 கிராம்
தக்காளி - 10
உப்பு - தேவையான அளவு
தண்ணீர் - 1 லீட்டர்
மிளகுத்தூள் - தேவையான அள்வு

**செய்முறை**

ஒரு லீட்டர் நீரில் இறைச்சியைப் போட்டு, நன்றாக வேக வைக்கவும். தக்காளியை சுடுநீரில் போட்டு தோலை அகற்றி, மிக்ஸியில் தக்காளியை நன்றாக அரைக்கவும். வெந்த நீருடன் இறைச்சித் துண்டையும், தக்காளிக் கூழையும் கொட்டிக் கிளறி அடுப்பில் வைத்து லேசான சூட்டுடன் இறக்கி தேவையான அளவு உப்பு, மிளகுத்தூள் சேர்த்து பரிமாறவும்.

### மீன் சமைக்கும்போது கவனிக்க வேண்டியவை



மீன் கறி சமைக்கும்போது மீனுக்கு புளி சேர்த்தால் சுவையாக இருக்கும். அலுமினியப் பாத்திரத்தில் சமைக்கப்படும் மீனுக்கு புளி சேர்ப்பதால் அலுமினியமும் புளியும் சேர்ந்து ஓர் அமிலம் உருவாகின்றது. இந்தக் கறியைச் சாப்பிடுவதால் நோய் ஏற்படும். சில சமயங்களின்போது இறப்பும் ஏற்பட வாய்ப்புண்டு. ஆகவே மீன் கறியை மண் சட்டியில் சமைப்பது நன்று.

- அ. ஜன்சிகா இல. 03, முதலியார்குளம், செட்டிகுளம்.

## சமைப்போம் சுவைப்போம்

### தொகுத்துத் தருவது

திருமதி. பாமினி லோகநாதன்
360, மூர்வீதி, மன்னார்.

### கேசரி



**தேவையான பொருட்கள்**

ரவை - 4 டம்ளர்
தண்ணீர் - 10 டம்ளர்
சீனி 4½ டம்ளர், நெய் 1½ டம்ளர்
கேசரிப் பவுடர் (மஞ்சள் கலறிங்) - ½ ஸ்பூன்
கஜு, பிளம்ஸ் (தனித்தனியாக - 25 கிராம்)
ஏலப்பொடி ½ ஸ்பூன்

**செய்முறை** கஜு, பிளம்ஸ், ரவை ஆகியவற்றைத் தனித்தனியாக நெய்யில் வறுத்தெடுக்கவும். ஒரு வாயகன்ற பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி நன்கு கொதித்ததும் றவையைப் போட்டுக் கிளறவும்.

ரவை சோறுமாதிரி நன்கு வெந்தவுடன் அதில் சீனிபோட்டுக் கிளறவும். அதில் நெய்யை ஊற்றிக் கலருக்காக கேசரிப் பவுடரைப் (மஞ்சள் கலறிங் பவுடரை) போட்டு கலர் நன்கு சேரக் கிளறவும். பின் அது நன்கு கலந்தவுடன் அதில் ஏலப்பொடி, கஜு, பிளம்ஸ் ஆகியவற்றைச் சேர்த்து நன்கு கிளறவும். ஒரு கேக் தட்டில் நெய் பூசி அதில் கேசரியைப் போட்டுப் பரவி ஆற விடவும். ஆறிய பின்பு எமது வசதிக்கேற்ற வடிவங்களாக வெட்டிப் பரிமாறலாம்.

## மருத்துவப் பொழிவு

# சின்னச் சின்ன மருத்துவம்

தொகுப்பு: ப. தட்சாயினி
சாளம்பன், நானாட்டான்.

நெருஞ்சில் செடியை வேருடன் கொண்டுவந்து கழுவி சுத்தம் செய்து, உரலில் போட்டு இடித்து, சாறு எடுத்து, அந்தச் சாற்றில் அரை டம்ளர் எடுத்து, அத்துடன் அரை டம்ளர் அளவு மோர் சேர்த்துக் கலந்து குடித்தால் சிறுநீருடன் இரத்தம் கலந்து போவது நிற்கும். மூன்றே வேளையில் குணம் தெரியும்.

❖❖❖❖❖❖

சுண்டைக்காய் வற்றலை நல்லெண்ணெயில் வறுத்து அம்மியில் வைத்துப் பொடியாகச் செய்து வைத்துக்கொண்டு, பகல் உணவின்போது ஒரு கரண்டி சாதத்துடன் தேவையான அளவு தூளைச் சேர்த்துப் பிசைந்து, முதலில் சாப்பிட்டபின் உணவு சாப்பிட வேண்டும். இந்த விதமாகத் தொடர்ந்து ஐந்து நாள் சாப்பிட்டால் போதும். அத்தனை மலக்கிருமிகளும் அழிந்து விடும்.

வேப்பங்கொழுந்தை அரைத்து கோலிக்குண்டு அளவு எடுத்து வாயில் போட்டு வெந்நீர் குடிக்க வேண்டும். காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட வேண்டும். தொடர்ந்து மூன்று நாட்கள் மட்டும் சாப்பிட்டால் போதும். அத்தனை கீரிப்பூச்சிகளும் வெளியேறி விடும்.

❖❖❖❖❖❖

மாதுளமரத்துப் பட்டையைக் கொண்டுவந்து அதைக் கழுவி துண்டுகளாக நறுக்கி கைப்பிடி அளவு ஒரு சட்டியில் போட்டு ஒரு டம்ளர் தண்ணீர் விட்டு அதை அடுப்பில் வைத்து நன்றாகக் கொதிக்க வைக்க வேண்டும். பின்னர் இறக்கி வடிகட்டி காலையில் ஒரு டம்ளர் கஷாயத்தைக் குடித்தால் வயிற்றிலுள்ள அத்தனை பூச்சிகளும் செத்து வெளியேறும்.

❖❖❖❖❖❖

சர்க்கரைவள்ளிக் கிழங்கின் இலையைக் கொண்டுவந்து சாறு எடுத்துத் தேள் கொட்டின இடத்தில் கனமாகப் பூசிவிட்டால் விஷம் முறியும், வலி குறையும்.

நாயுருவி வேரைக் கொண்டுவந்து பட்டாணி அளவாக மூன்று துண்டுகள் வெட்டி ஒவ்வொரு துண்டாக வாயிலிட்டு மென்று சாற்றை உள்ளே இறக்கிவிட்டு சக்கையைக் கீழே துப்பிவிட வேண்டும். இந்தவிதமாக மூன்று துண்டுகளின் சாற்றை விழுங்குவதற்குள் தேள்க் கடி விஷம் முறிந்து கடுப்பு நின்றுவிடும்.

❖❖❖❖❖❖

ஒன்பது மிளகை எடுத்து ஒரு வெற்றிலையில் மடித்து வாயில் போட்டு நன்றாக மென்று விழுங்க வேண்டும். பின்னர் நான்கு தேங்காய்ப் பத்தைகளை எடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாகக் கடித்து நன்றாக மென்று தின்ன வேண்டும். இப்படிச் செய்தால் அரை மணி நேரத்தில் தேள்கடி விசம் முறிந்து கடுப்பு நின்றுவிடும்.

❖❖❖❖❖❖

ஒரு வெங்காயத்தை எடுத்துக் குறுக்காக நறுக்கி ஒரு பகுதியின் மட்டமான பாகத்தைக் கொட்டுவாயில் வைத்து நன்றாகத் தேய்த்துக்கொண்டே இருக்க வேண்டும். மற்றொரு பாகத்தை நைத்துச் சாறு எடுத்து ஒரு கண்ணுக்கு இரண்டு துளி வீதம் விட்டால் உடனே விஷம் முறியும் கடுப்பு நிற்கும்.

❖❖❖❖❖❖

புளியங்கொட்டையளவு புளிச்சதையையும் அதே அளவு சுண்ணாம்பையும் உள்ளங்கையில் வைத்துப் பிசைந்தால் அதில் தாங்கமுடியாத சூடு ஏறும். உடனே அதை சிறிய வில்லைகளாகத் தட்டிக்கொண்டு வாயில்வைத்து அழுத்திப் பிடித்தால் அது கொட்டு வாயில் ஒட்டிக்கொள்ளும். விஷம் முறியும், கடுப்பு நிற்கும்.

### பல நூற்றாண்டு காலம் மறைந்திருந்த

## அரைநிர்வாண மோனலிஸா ஓவியம் இத்தாலியில் கண்டுபிடிப்பு



இயேசுவின் இறுதி இராவுணவுப் படத்தை வரைந்த உலகப் பிரபல ஓவியர் லியனார்டோ டாவின்சியால் வரையப் பட்ட மேலாடையற்ற மோனாலிஸா ஓவியமானது பல நூறு வருடங்களுக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுவரை எவரது பார்வையிலும் சிக்காது மறைவாக இருந்த இந்த அரிய ஓவியம், இத்தாலியிலுள்ள லியனார்டோ டாவின்சியின் பிறப்பிடமான வின்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் - தக்கது.

வழமையான மோனாலிஸாவின் ஓவியத்தையொத்த புன்னகை மற்றும் பின்னணிக் காட்சிகளுடன் காணப்படும் இந்த ஓவியம், நெப்போலியனின் உடைமையாக இருந்து அவரது வாசிகசாலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (தொடர்ச்சி 19ம் பக்கம்)

## நீங்காத நினைவுகள்

### 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 05 1993



உதிர்வு 11 08 2008

**பெஞ்சமின் பெக்மான்ஸ் லியோன்**

தலைமன்னார் மேற்கு (சிலுவை நகர்)

*"என் ஆயன் ஆண்டவர் எனக்கென்ன குறைவு"*

ஆண்டவர் தோட்டதில் மலர்ந்த
அதிசய மலர் பெக்மான்ஸ்,
ஓராண்டு கடந்ததையா,
நின் எழில் வதனம் மறைந்து உருகுகின்றோம்.
எங்கள் செல்வமே! கோடியில் ஒருவனாய்
எம் குலத்தில் உதித்த கோமகனே!
இனி எந்த தலைமுறை காணுமோ
இப்படியொரு மகனை
உங்கள் உருவம் எங்களை விட்டு மறையாது
கண்களில் ஈரம் காயவில்லை
அப்பா அம்மா மனதில் துயர் ஆறவில்லை
பாசத்தில் எம்மோடு நேசமாய் வாழ்ந்த நாட்களை
எம்மால் மறக்க முடியவில்லை
ஒவ்வொரு நொடியும் ஏங்குகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
அன்பு அம்மா, அப்பா, சகோதரிகள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

## நீங்காத நினைவுகள்

### 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 04 1942



உதிர்வு 31 08 2008

**அந்தோனி கபிரியேல்**

**தற்குரூஸ் (அன்பு)**

நெடுங்கண்டல், அடம்பன்

*"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவான் 11:25)*

வாழ்வில் என்னை நேசித்த அன்பு நெஞ்சங்களே
தாழ்விலும் என்னை மறவாதீர்கள்!

ஆண்டு ஒன்று சென்றாலும் மறக்குமோ எங்கள் நெஞ்சம்? நினையாத நேரத்தில் யேசு உங்களை அழைத்தார். எங்களால் உங்களை மறக்க முடியவில்லை. உங்கள் ஆன்ம சாந்திக்காக தினந்தோறும் இறைவனிடம் இறைஞ்சி வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும் : அன்பு மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்

### 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 04 1937



உதிர்வு 14 08 2007

**தொம்மை சந்தான்**

பிடாரிகுளம், முருங்கன்


*"நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடம் இருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் எமக்குண்டு"*

அன்பே உருவான எம் அன்புத் தந்தையே! பாரிலே உம் முகம் மறைந்து ஆண்டிரண்டு ஆனபோதும் ஆறவில்லை எம் மனங்கள்! பிரியவில்லை உம் நினைவுகள்! பாசத்தில் எம்மோடு நேசமாய் வாழ்ந்த உம் ஆன்மா இறைவனோடு ஒன்றாகி விண்ணுலகில் பேரின்பம் பெற இரஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும் :
மனைவி, பிள்ளைகள்
*தகவல்: ம. அல்பிறேட்*

### கண்ணீர் அஞ்சலிகள்

மலர்வு 13 06 1949



உதிர்வு 23 04 2009

**திருமதி. அந்தோனிக்கம்மா (றமணி) மரியநாயகம் குரூஸ்**

(பறப்பாங்கண்டல், உயிலங்குளம்)

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளராய்ப் பணிபுரிந்துவந்த திருமதி றமணி அவர்கள் முல்லைத்தீவில் உள்ள வலைஞர் மடம் பகுதியில் எதிர்பாராதவிதமாக அகால மரணமடைந்த செய்தி எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம். இவரின் பிரிவால் துயருறும் கணவர் மற்றும் உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவர் இறைவனில் நித்திய அமைதிபெறச் செபிக்கின்றோம்.

அருட்பணியாளர் நேசன் மற்றும்
தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர்கள்,
மன்னார் மறைமாவட்டம்

### 16ம் ஆண்டு நினைவஞ்சலி — 9ம் ஆண்டு நினைவஞ்சலி





மலர்வு 10-04-1909
உதிர்வு 27-10-1993

**திரு. தி. மனுவேற்பிள்ளை**

மலர்வு 09-04-1925
உதிர்வு 22-08-2000

**திருமதி. ம. இன்னாசியாப்பிள்ளை**

**கங்காணிதீவு, நானாட்டான்**

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய், நல்ல ஒரு குடும்பத் தலைவன் தலைவியாய் இருந்து, எம்மைப் பெற்று வளர்த்துப் பராமரித்து வந்த எமது அன்புத் தாய் தந்தையரே! நீங்கள் எம்மைவிட்டு மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு நீங்காது என்றும் எங்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும்.

*அன்பின் தந்தையே இறைவா, எம் தாய் தந்தையரை உம்முடைய நித்திய பேரின்ப வீட்டில் சேர்த்து அவர்களுக்கு நித்தியசாந்தி அளித்தருள வேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகின்றோம். ஆமென்.*

இவர்களின் பிரிவால் துயருறும்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 08 1952



உதிர்வு 01 08 2008

**அருளப்பு எமிலியான் கூஞ்ஞு**


(தலைமன்னார்மேற்கு, தலைமன்னார்)

வாய்மையின் வடிவாய், நேர்மையின் உருவாய்
கலங்கரை விளக்காய், கரம் கொடுத்து உதவும்
ஈகையின் சொரூபம் - உன்
அடித்தடத்தில் தொடர்ந்திட வரம் தா.
உன் நினைவினைச் சுமந்து மௌனமே மொழியாய்
உருகிடும் மனையாள் - ஐயா
உம் நிழலே தஞ்சமென மகிழ்ந்திருந்த
மூன்று ராஜாக்களின் உதிர்ந்திடும் விழிநீர் நீயறியாயோ!
கப்பல் மாமா என ஊரழைக்க
கருணையும் கண்டிப்பும் ஏறு நிகர்ந்த நடையும்
யார் முகர்ந்து காண்போம் பாரில்.
வேதனையில் நிதம் விம்மி விழும் நெஞ்சங்கள்
ஆண்டுகள் யுகமாய் உருண்டு போனாலும்
ஆண்டவன் அருகில் அகமகிழும் எங்க்ள் ஐயா
நாம் வேண்டும் வரமருள இறைவனை இரஞ்சுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், மற்றும் உற்றார், உறவினர்கள்.

### 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 09 1989



உதிர்வு 18 08 2008

**அ. சூசையப்பு குரூஸ் (சிரோன்)**

(தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்)

ஆண்டு நூறு உருண்டோடினாலும் எம் ஆயுளே தீர்ந்து போனாலும் உன் நினைவலைகள் மட்டும் - நிதம் வந்து வந்து போவதன் மாயம் என்ன? உன் இறுதி ஊர்வலத்து ஒப்பாரியின் முகாரி ஒலி இன்னமும் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. கணக்கற்ற களியாட்டம் வந்துபோனாலும் மனம் எங்கள் கறுப்பு வைரத்தை நினைந்து இரவில் கனத்துக் கிடக்கிறது. எம் வாசல்வரை வருகின்ற ஒவ்வொரு ஐந்தறிவு ஜீவனையும் தன் மகன்தான் என மருகுகிறாள் உன்தாய். உன் மலர் முகத்துப் புன்னகையும் வேடிக்கைப் பேச்சையும் மாசற்ற சிரிப்பொலியையும் நினைத்து - இன்னமும் ஏங்குகிறதே உன் இளையவனின் இதயம். மாசில் மனத்தொரு குருசில் மரித்தோனின் வலமிருந்தெமக்கருள்புரி. உறவினிற்கொரு தீதொன்றும் நேராமல் வல்லவனை நோக்கி எமக்காய் கரம்குவி.

இவரின் பிரிவால் துயருறும்:
தந்தை, தாய், தம்பி, மற்றும் உற்றார், உறவினர்கள்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.88 எரேமியா15-21

உங்கள் விடைகளை 15.09.2009க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | 02 | | | | | 03 |
| | 04 | | | | | 05 | | ✶ | | |
| | ✶ | | | 06 | | | | | | |
| | 07 | | | | | | | | 08 | |
| 09 | | | | | 10 | | 11 | | | |
| | | | 12 | | | | | | | ✶ |
| | | | | 13 | | | | 14 | | |
| | 15 | | | | 16 | | | | 17 | ✶ |
| | | ✶ | ✶ | | | 18 | | | | |
| | | | | 19 | | | 20 | | | |
| 21 | | | | ✶ | | | | | | 22 |

## இடமிருந்து வலம்

1. உம் சொற்கள் எனக்கு .................................... தந்தன.
2. அவர்கள் பாலைநிலத்துப் புதர்ச் ...........................ஒப்பாவர். (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
4. ஆண்டவராகிய நானே இதயச்.......................களை ஆய்பவர்.
7. குயவனின் உடைக்கப்பட்ட மண் கலயத்தை ......................... ஒட்டவைக்க முடியாது.
9. அவர்களைக் கண்டு உலகத்தின் அரசுகள் .................திகில் அடையும்.
12. ஏனெனில் அவர் வறியோரின் உயிரைத் தீயோரின் .................................. று விடுவித்தார்.
14. திடீரென அவள் துயரும் திகிலும் .......................ச் செய்தேன்.
15. தாங்களோ தங்கள் மூதாதையரோ யூதாவின் அரசர்களோ அறிந்திராத வேற்றுத் தெய்வங்களுக்குத் ......................... காட்டினர்.
16. அவர்கள் கொடும் நோய்களால் ..............................கள் (2வது எழுத்து இறுதியாக உள்ளது)
21. அவர்கள்மேல் தீமையை அனுப்பவேண்டும் என்று நான் உம்மை ...............................வில்லை.

## மேலிருந்து கீழ்

1. அவை எனக்கு .................................. இருப்பதில்லை.
3. பாலை ..................... வறண்ட பகுதிகளிலும் யாரும் வாழா உவர் நிலத்திலுமே அவர்கள் குடியிருப்பர்.
5. நீ எழுந்து ........................ வீட்டுக்குப் போ, அங்கு என் சொற்களைக் கேட்கச் செய்வேன்.
13. ஆனால் ஆண்டவர் ....................... வாய்ந்த வீரரைப்போல என்னோடு இருக்கிறார்.
14. முன்பின் தெரியாத ஒரு நாட்டில் எதிரிகளுக்கு உங்களை ..........................ச் செய்வேன்.
15. உன் உயிரை முன்னிட்டு ஓய்வுநாளில் சுமை......................... வேண்டாம்.
16. அவர்கள் நீர் அருகில் நடப்பட்ட ....................க்கு ஒப்பாவர்.
17. உம் சொற்கள் எனக்கு மகிழ்ச்சி தந்தன. என் உள்ளத்திற்கு .............................. அளித்தன.
18. நான் கொடுத்த கட்டளைப்படி............................. நாளைத் தூய்மையாகக் கடைப்பிடியுங்கள்.

## வலமிருந்து இடம்

3. நீ திரும்பி வந்தால் நான் உன்னை முன்னைய ................க் கொண்டுவருவேன்.
6. உங்கள் வழிகளையும் ........................ களையும் திருத்திக் கொள்ளுங்கள்.
8. என் பெயர் ............... என்பதை அவர்கள் அறிந்துகொள்வார்கள்.
10. உம்மைப் புறக்கணித்தோர் .......................... வெட்கமுறுவர்.
12. (முரடரின் ..............................ன்று உன்னை மீட்பேன்.
13. ஏனெனில் என் ................உம்மிடம் எடுத்துரைத்துள்ளேன்.
14. அதனை ....................... வைத்துச் சோர்ந்துபோனேன்.
19. இந்தக் குயவன் கையிலுள்ள களிமண்ணைப்போல இஸ்ராயேல் வீட்டாரே நீங்கள் என் ........................ இருக்கிறீர்கள்.
22. ............................ அனைத்திலும் வஞ்சகம் மிக்கது.

## கீழிருந்து மேல்

8. என் ........................யும் என் வலிமையும் அறியும்படி செய்வேன்.
10 அதனை ............................புரிந்துகொள்வர்.
11. உங்கள் மூதாதையருக்கு நான் கொடுத்த...................ப் படி ஓய்வுநாளைத் தூய்மையாகக் கடைப்பிடியுங்கள். (2ம் 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
13. உங்களுக்கு எதிராய் வரப்போகும் தீமைக்கு .............................. கொடுத்துக் கொண்டிருக்கிறேன்.
14. அது நகரின் ...................களை அழித்துவிடும் (3ம் 4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
17. வடக்கிலிருந்து வந்த இரும்பையும் வெண்கலத்தையும் யாரால் ......................... முடியும்?
20. ஆனால் வெளியேறி உங்களை முற்றுகையிட்டுக்கொண்டி - ருக்கும் கல்தேயரிடம் சரணடைபவன் .................... பிழைப்பான்.
21. என் சீற்றம் ...................... வெளிப்பட்டுப் பற்றியெரியும்.
22. ஆண்டவர் நானே ......................... சிந்தனைகளை ஆய்பவர்.

# விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 86ல்

## சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

முதலாம் பரிசு:

**ப. சங்கீதா**
*பெரியகடை, மன்னார்.*

இரண்டாம் பரிசு:
**ப. மரிய டிலக்சனா**
கதிர்காமர் நிவாரணக் கிராமம்
செட்டிகுளம்,
வவுனியா

மூன்றாம் பரிசு:
**அ. தவமலர்**
வீட்டு இல. 327
வீரபுரம்,
நேரியகுளம்

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 187 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 179 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.86ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. ச. கிஷோ ஷாளினி தரம் 12 கலை, மன்/ முருங்கன் ம.வி.
2. நாகேந்திரன் சலோமி, மடுக்கரை, இல. A/69 நானாட்டான்
3. த. பர்வின் நிலாந்தினி, வீரபுரம் இ. த. நி. நிலையம், உலுக்குளம்
4. து. மேரி சாளினி, 1ம், வட்., இரத்தினபுரி, வங்காலை, மன்னார்.
5. சி. கொலஸ்ரிக்கா, தரம் 10A, அச்சங்குளம், நானாட்டான்.
6. எஸ். நித்தியா, கொன்னையன் குடியிருப்பு, தாராபுரம், மன்னார்.
7. நீ. ஆன் டிலோஜினி, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை
8. எஸ். சகாயசீலி பறுனாந்து, அரிப்பு, சிலாவத்துறை
9. ம. லீனஸ், பண்ணைவீதி, கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை.
10. செ. றொபின்சன், மடுறோட், கட்டையடம்பன்.
11. வே. சியாமளா, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை
12. எம். எம். ஜெ. பசில், 41/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்
13. அ. அன்ரன் பாக்கியநாதன் குரூஸ், உப்புவெளி, திருகோணமலை.
14. எ. சி. றதிஷன், 180, ஒல்லிமோட்டை, மன்னார்.
15. கீ. நீக்கிலஸ் காகு, அரிப்பு, சிலாபத்துறை
16. யே. நியூட்டஸ் பெனாண்டோ, தரம் 12 வர்த்., முத்தரிப்புத்துறை
17. எம். ஆன் தர்ஷி, புனித அக்னஸ் கன்னியர் மடம், மாத்தளை
18. வசந்தி சத்தியசீலன், எழுத்தூர், மன்னார்.
19. எஸ். ஏ. மேகலா டயஸ், இல. 111 ப.க.கொ. கிழக்கு, மன்னார்.
20. யூ. றொ. டிலிஷா தரம் 2, மன்/ சாந்திபுரம் அ. த. க. பாடசாலை
21. பி. வின்சன் குணபாலன், மணற்குளம், உயிலங்குளம், மன்னார்.
22. யோ. கொணி லெம்பேட், 6ம் வட்டாரம், வங்காலை.
23. என். அனோஜா நிக்கலின், சிறுக்கண்டல், முருங்கன்.
24. டா. டெனிஸ்ஜெகான் 8ம் வட்டாரம் மத்தி நெடுந்தீவு
25. என். டயானா, பறப்பாங்கண்டல், உயிலங்குளம், மன்னார்.
26. அ. ஜெ. சிறோமி, "மலர்வாசம்", முதலைகுத்தி, உயிலங்குளம்
27. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
28. பத்திநாதன் சாரம் சுகிர்தசீலி, பரிகாரிகண்டல், முருங்கன்
28. பி. நிஜா, தோட்டவெளி, மன்னார்.
29. மி. பெர்ணடேற், முருங்கன் பிட்டி , முருங்கன்.
30. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
31. "சிறகுடைந்த இளஞ்சிட்டு", தோட்டவெளி, மன்னார்.
32. இ. சுதர்சினி (றாஜினி), போயிட்டி, இளவாலை, யாழ்ப்பானம்
33. நி. நிதர்ஷனா, முத்தரிப்புத்துறை, சிலாபத்துறை.
34. லீ. டெய்சி, பெற்றா, மன்னார்.
35. லின்ரா, கீளியன்குடியிருப்பு, தலைமன்னார்.
36. எ. ஜீவன், கல்வியற்கல்லூரி , பூந்தோட்டம், வவுனியா
37. பீ. கஸ்தூரி இல. 123 2/1 புதுசெட்டித்தெரு, கொழும்பு 13.
38. ஐடா பற்றிக், மெயின் வீதி, மன்னார்.
39. பி. சுகுனா, 25/7, 1ம் குறுக்கு, சின்ன ஊறணி, மட்டக்களப்பு.
40. வி. வேஜின் டிலக்சனா, வீரபுரம், இ.நி.முகாம் உலுக்குளம், வவுனியா
41. ஜே. எம். மாகிறேட், யுனிற் 4 அருணாச்சலம் ந. நி. செட்டிகுளம்
42. அமலதாஸ், மேரி சரோஜினி, பட்டித்தோட்டம், மன்னார்.
43. சி. கொலஸ்ரிக்கா, அச்சங்குளம், நானாட்டான்.
44. சூ. இராக்கினி லீனா, மரியாள் வீதி, தாழ்வுபாடு
45. என். ஆன் யூலியானி, தரம் 4A, புனித லூசியா, ம. வி. பள்ளிமுனை
46. திருமதி. ரி. ஜே. சகாயராணி பெர்னாண்டோ, 8ம் வட். பேசாலை
47. ச. இருதயநாதன் டயஸ், 7ம் வட்டாரம், வங்காலை
48. ஜெ. ஜெயறூபினி, இல. 161, மடுக்கரை, நானாட்டான்
49. மெர்சி குரூஸ், 7ம் வட்டாரம், வங்காலை
50. பி. ஜெயபாலன் பறுனாந்து, தரம் 11, முள்ளிக்குளம். மறிச்சுக்கட்டி

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 86 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கு | க் | வா | ரு | உ[1] | ன் | னோ | டு | த | த | கொ[2] |
| மே[3] | ற | ற் | மா | ஓ[4] | மா | ற் | றி | ந் | ✵ | டி |
| ய் | எ[5] | ரி | ப | லி | மு[6] | தி | யோ | ரு | ம் | யை |
| ப் | ன | வா[7] | த் | து | பு | ம் | ர | வீ | மு | தி |
| ப | க் | யி | ✵ | நெ[9] | றி | க | ள் | லி | ப | று |
| ர் | கு | ல் | ளா | க | னி | க[10] | ✵ | மை | து[11] | று |
| க | வ[12] | பு | டு | ட் | ப | ப் | ளி | வெ[13] | றி | ற் |
| க் | ழி | ம் | எ[14] | ம் | ✵ | தை | த் | ச | ஞ் | ப[15] |
| வி | க | சு | ழ | ரு | மே[16] | னா | னு | நா[17] | ம் | தி |
| டு | ளை | ப[18] | ப் | பா | டு | அ[19] | ர | ண் | ரு | ல் |

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.87ற்கான முடிவுகளை 2009ம் ஆண்டு செப்ரம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.**

## செஞ்சிலுவைச் ...... 11ம் பக்கத் தொடர்ச்சி

காயப்படும் வீரர்களுக்குச் சிசிச்சைதர மருத்துவமனைகள், அவற்றில் பணியாற்ற மருத்துவர்கள், தாதியர், தன்னார்வத் தொண்டர்கள் தேவை. எந்த நாட்டு வீரர்கள் என்று பார்க்காமல் காயப்படும் வீரர்கள் எல்லாருக்கும் சேவை செய்யும் தன்னார்வத் தொண்டர்களை யாரும் தாக்கக்கூடாது. மாறாக அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டியது போரிடும் தரப்புகளின் கடமை. இவ்வாறெல்லாம் அந்நூலில் எழுதியிருந்தார்.

அத்தோடு நின்றுவிடாமல் தனது இந்தக் கருத்துக்களைச் செயல்படுத்த ஜெனீவாவில் நான்கு முக்கிய பிரபல குடும்பங்களிலிருந்து நான்கு பேரைச் சேர்த்து ஐவர் குழு ஒன்றை அமைத்தார். இக்குழுவின் முயற்சியால் 1863ம் ஆண்டு ஜெனீவாவில் ஒரு சர்வதேச மாநாட்டை நடத்தினார். என்றி டுனன்ட் உருவாக்கிய குழு, 1876ல் அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கம் என்ற பெயரைச் சூடிக்கொண்டது. 1901ம் வருடம் அமைதிக்கான நோபல் பரிசு என்றி டுனன்ட்டுக்குக் கிடைத்தது. இவர் 1910ம் ஆண்டு அக்டோபர் 30ம் திகதி தனது 82வது வயதில் இறந்தார். இந்த மாமனிதன் ஏற்படுத்திய செஞ்சிலுவைச் சங்கத்தில் இன்று ஏறத்தாழ ஒன்பது கோடியே எழுபது இலட்சம் தன்னார்வப் பணியாளர்கள் 186 நாடுகளில் சேவையாற்றி வருகின்றனர்.

**நீத்தார் நினைவு, பிறந்த நாள், திருமண யூபிலி**
போன்றவற்றைப் பிரசுரிப்பதற்கான
**கட்டண விபரம்**
கறுப்பு வெள்ளை நிறத்தில் : - ரூபா 4,000.00
பல நிறத்தில்: - ரூபா 7,500.00
முக்கிய குறிப்பு: உங்கள் விடயங்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்படவேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக விடயங்களை அனுப்ப வேண்டும்.
- பதிப்பாசிரியர்

**மன்னா சந்தா விபரம்**
உள்நாடு : ரூபா 700.00 (இலங்கை ரூபா)
வெளிநாடு : ரூபா 3,000.00 (இலங்கை ரூபா)
சந்தாப்பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ செலுத்தலாம்.
காசோலை மூலம் செலுத்துவதாயின்;
வங்கியின் பெயர் :
Hatton National Bank Ltd. (Mannar Branch)
பணம் பெறுபவரின் பெயர்:The Editor - 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம்: S/A No. 02 -1678001-5

## தமிழ் மக்களின்..... 4ம் பக்க தொடர்ச்சி

அதேவேளையில் சிங்கள கடும்போக்காளர்களின் சந்தேகத்திற்கும் கடுமையான விமர்சனத்திற்கும் இவர் உள்ளாகியமை ஆச்சரியமூட்டும் விடயமல்ல. பேராயரின் இப்பணிகளை இலங்கைத் தமிழ் மக்கள் இவ்வேளையில் நன்றியோடு நினைவுகூருகின்றார்கள்.

வத்திக்கான் திருப்பீடத்தில் பொறுப்பான பல பணிகளை ஆற்றியதனால் இவர் பெற்றுக்கொண்ட அறிவும் அனுபவமும் இவருக்கு இருக்கும் பன்மொழி ஆற்றலும் இவர் கையேற்கின்ற புதிய பணிக்கு நிச்சயமாக பலவிதத்திலும் உதவியாக இருக்கும் என நம்பலாம். உயர் மறைமாவட்டமாகிய கொழும்பு மறைமாவட்டத்திற்குள் மட்டுமல்ல முழு இலங்கை நாட்டிற்கும் இவருடைய பணி கிடைக்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

குறிப்பாக இன்றைய இலங்கை நாட்டின் போருக்குப் பின்னரான சூழலில் கத்தோலிக்க திருச்சபை ஆற்றவேண்டிய பணியை இவர் இனம்கண்டு தனது கடந்தகால அனுபவங்களின் துணையோடு சிறப்பாகச் செயற்படுவார் என்ற எதிர்பார்ப்பு இலங்கை மக்களிடம் நிறையவே உண்டு. உள்ளூரில் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மூன்று இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் பலவித மனிதாபிமான நெருக்கடிகளைச் சந்தித்துக்கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் அவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று குடியேறி தமது நாளாந்த சுமுகமான வாழ்வைத் தொடங்க புதிய பேராயரின் விரைவான முயற்சியை தமிழ் மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றார்கள்.

அதேவேளை போர் முடிந்ததாகக் கூறப்பட்டாலும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினை இன்னும் முடியவில்லை என்பதை ஏற்றுக்கொண்டு போர்ச் சூழ்நிலை ஏற்பட்டதற்கான காரணங்களை இதயசுத்தியோடு புரிந்து, ஏற்றுக்கொண்டு தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை தீர்த்துவைக்கக்கூடிய விரைவான அரசியல் தீர்வை ஏற்படுத்த புதிய பேராயரின் மேலான பங்களிப்பு இவ்வேளையில் எதிர்பார்க்கப்படுகின்றது.

சவால் நிறைந்த மிகப்பெரிய பணிப்பொறுப்பை ஏற்கும் மல்கம் ஆண்டகைக்கு இறைவனின் நிறைவான அருள் வரங்களை வேண்டி நிற்கின்றோம். இலங்கைத் தமிழ் மக்களின் இனிய வாழ்த்துக்களைக் கூறி நிற்கின்றோம்.

## பல நூற்றாண்டு காலம். ... 18ம் பக். தொடர்

1503 ஆம் ஆண்டு லியனார்டோ டாவின்சியால் வரையப்பட்ட மேற்படி ஓவியம், அசல் மோனாலிஸா ஓவியத்தை அடிப்படையாகக்கொண்டு வரையப்பட்ட 6 நிர்வாண மோனாலிஸா ஓவியங்களில் ஒன்றென வின்சி அருங்காட்சியகத்தின் தலைவர் அலெக்ஸாண்ட்ரோ வெஸ்ஸோய் தெரிவித்தார்.

1479ஆம் ஆண்டு பிறந்த லிஸா டெல்கியோனொன்டோ என்ற பெண்மணியின் உருவப்படமே இந்த மோனாலிஸா ஓவியம் என நம்பப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னா

## மறையாசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சி நிறைவு விழா




மன்னாரில் உள்ள மறைக்கல்வி நிலையத்தில் கடந்த யூன் மாதம் 25ம் திகதி மூன்று மாத மறையாசிரியர் வதிவிடப் பயிற்சியை நிறைவுசெய்த 28 மறையாசிரியர்களையும் மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி. எம். ஜெயபாலன் மற்றும் மேதகு மன்னார் ஆயர், பயிற்சி வகுப்புகளை நடாத்திய குருக்கள், மூத்த மறையாசிரியர்கள் ஆகியோரை படத்தில் காணலாம். சான்றிதழ் விழா பற்றிய விபரங்களை 4ம் பக்கத்தில் பார்க்கவும்.

## மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தினால் வெளியிடப்பட்ட தவக்கால புனித வார பாடல்கள் இறுவட்டு




மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தினால் அண்மையில் தவக்கால பாடல்கள் மற்றும் புனிதவாரப் பாடல்கள் அடங்கிய இரண்டு இறுவட்டுக்கள்(CD) வெளியிடப்பட்டன. இப்பாடல்களுக்கான இசையை திரு. எஸ். டிலாசால் லெம்பேட் வழங்கினார். இப்பாடல்களுக்கான ஒலிப்பதிவு சமூகத்தொடர்பு அருட்பணி மையத்திலேயே மேற்கொள்ளப் பட்டமை குறிப்பிடத்தக்கது. மையத்தின் இயக்குனர் பெனோ அடிகளார் இதற்கான ஒழுங்கமைப்பை மேற்கொண்டிருந்தார்.



கடந்த யூலை மாதம் 19ம் திகதி மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்ற 43வது உலக சமூகத்தொடர்பாடல் தின நிகழ்வின்போது.



கடந்த யூலை மாதம் 23ம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெற்ற அமரர் நோபேட் அடிகளாரின் இறுதி நல்லடக்க ஆராதனையின்போது.



இந்த இறுவட்டுக்கு இசை அமைத்த திரு. டிலாசால் லெம்பேட் அவர்கள்

## நீங்காத நினைவுகள்

### 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 18 10 1983 — மலர்வு 11 08 2008




**அமரர் மரியாம்பிள்ளை லூட்ஸ்மன்**
**(சுதாகரன்)**
(அரிப்பு)

பாரினில் வாழ்வது பாவமென்றா
பரமன் உன்னை அணைத்துவிட்டான்?
பரிதவிக்கும் எம்மவர்க்காய்
பரிந்து பேசவா சென்றுவிட்டாய்?
துடிக்குதையா எம் இதயம்
பெருகுதையா கண்ணீர்க் கடல்
மாறுமோ இதயத்தின் காயங்கள்
நித்தம் நித்தம் உன் நினைவில்
வாடி வதங்குகின்றோம்.
கண்ணே உன் ஆன்மா
இறைவனில் அமைதிகாண
தினம் தினம் வேண்டுகின்றோம்!

**இவரின் பிரிவால் துயறுரும்:**
**பாசமிகு பெற்றோர், சகோதரர்கள், நண்பர்கள் - முத்தரிப்புத்துறை**

### 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 20 12 1931 — உதிர்வு 24 08 2008



**திரு. நீக்கிலாஸ் அந்தோனி பிகிறாடோ (அற்புதம்)**
(இளைப்பாறிய தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர்)
**பள்ளிமுனை, மன்னார்.**


*"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னில் நம்பிக்கை வைப்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவா 11:25)*

எமக்கெல்லாம் வழிகாட்டி வித்திட்ட தெய்வமே! அன்பின் சுடராய் புன்னகையுடன் உலாவந்த தீபமே! பண்பின் உயர்விடமாய், பாசத்தின் தீபமாய், பரிவுடன் எமை வளர்த்து, பாரினிலே உயர வைத்தீர்களே! மறக்க முடியவில்லையே... அப்பா உங்கள் மலர் முகத்தைக் காணாமல் கசிந்தொழுகும் எம் கண்ணீரை நிறுத்த முடியவில்லையே! எமக்கெல்லாம் வேராக எம் இல்லத்தில் நீங்கள் இருந்தீர்கள். உறவினர், நண்பர்கள், உள்ளத்தில் உத்தமராய் இருந்தீர்கள். கள்ளமில்லா தாத்தாவாய் குழந்தைகள் உள்ளத்தில் இருந்தீர்கள். ஓராண்டு உருண்டோடினும் எங்கள் அருமை அப்பாவே! நீங்கள் என்றென்றும் எமக்கு அணையாத தீபம்தான். உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்,

அன்பு மனைவி, பாசமிகு பிள்ளைகள் , மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

### 31ம் நாள் நினைவு

மலர்வு 28 12 1950 — உதிர்வு 05 06 2009



**அமரர். திரு. சவிரிமுத்து மரியதாஸ்**

அன்பின் மாமா
எல்லோருக்கும் பாலா!
எம் உறவுகளின் சங்கமத்தில் நீ ஓர் விடிவெள்ளி
ஓ! நீயும் பிரகாசமானவன்தான்
எல்லாச் சந்தர்ப்பத்திலும் முன்னிற்கும்
ஆற்றல் கொண்டவனே,
தயங்காமல் நீ சென்ற ஒவ்வொரு பாதையும்
எமக்கு அனுபவமாயிற்று.
அதனால்தான் என்னவோ
இன்று எமக்கு முன்சென்று விட்டாய்.
இறைவனிடத்திலும் நீ செல்ல முந்திக்கொண்டாய்.
சாந்தி அடைய வேண்டுகிறோம்.
"இறைவன் தந்தார் இறைவன் எடுத்துக்கொண்டார்
எல்லாம் அவன் செயல்"

**இவரின் பிரிவால் துயருறும்**
**சகோதரர்கள், மருமகன், மருமகள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார் உறவினர்கள்.**

தகவல்: என். கின்சிலி (சுவிஸ்)

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பு 14, பிறின்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூ, 784ஷ1 இலக்கத்திலுள்ள கிறேஸ் என்ரபிறைசஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது